சுதேசமித்திரன்

தாய்மார்கள் அறிவர்

:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S
GRIPE WATER

keeps baby well

I-WW108-111'   W. WOODWARD LTD LONDON ENGLAND

சிறு விளம்பரங்கள்

ஜோதிஷ வித்வான்

V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு,
தியாகராய நகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு ரூ. 2
மேல் கேள்வி ஒன்றுக்கு அணு 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 3.
பிறந்த ஊர். தேதி. மணி தேவை
வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

ஆனந்த குஸுமாகர லேகியம்.

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டுவருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல். உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத் தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, பித்தம், காசம். க்ஷயம்போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும். உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது. பத்தியமில்லை.

20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி, பி, பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணு 14 முன் பணம் அனுப்பி- பெற்றுக்கொள்ளலாம், விவரமான காட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால் (Regd.)
189, வக்கீல் புது தெரு
Post Box No. 27. — மதுரை.

உயர்ந்த ஜவுளிகள் கிடைக்குமிடம்

V. N. சுப்ரமணிய அய்யர் ஜவுளிக்கடை

ராஜ வீதி : கோயமுத்தூர்

•

H. O. பெரிய தெரு,
கும்பகோணம்.

மூக்குக் கண்ணடிகளில் நவீன மோஸ்தருக்கு விசாரியுங்கள்.

•

ரவால் ஆப்டிகல் மானுபாக்சரிங் கம்பெனி லிட்.,
—மொத்த & சில்லரை வியாபாரிகள்—
288, எஸ்பிளனேட், மதராஸ்.
போன் : 3283.

ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு வருஷ பலன் எழுத ரூபா 5. ஆருடம் மூன்று கேள்விகளுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
தபோ நிதி, தியாகராய நகர்,
மதராஸ் 17.

இப் பக்கத்தில் விளம்பரம் செய்யுங்கள்

★

2" X 2" அளவுக்கு கட்டணம் ரூபாய் பத்தே தான்.

குகன் சோப்புகள்

சுதேசி தயாரிப்பு
சலவைக்கு மிகவும்
சிறந்தது.

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.



சுதேசமித்திரன்

பொருளடக்கம்

		பக்கம்
களவும் காதலும்	ப. ரா.	5
சொப்பன வாழ்க்கை (தொடர் கதை)	'ஆர்வி'	11
பெரிய புராணம்	பி ஸ்ரீ.	17
தேர்த்தட்டு வார்த்தை	'வாரன்'	19
பெண்மை அழகு	லட்சுமி அம்மாள்	21
கலாமண்டபம்	'சாண்டில்யன்'	23
விமலா (கதை)	எல். வி எஸ். மணியன்	27
ரமாவைக் கேளுங்கள்!	குங்குமம்'	31
பிரமை!	வை சுப்ரமண்யம்	35
நாமொன்று நினைக்க...	ய. மகாலிங்க சாஸ்திரிகள்	40
குரங்கு ராஜா (சிறுவர் கதை)	க. ரங்கநாதன்	47

"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும், பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.



வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்!

Vol. XX] ஸர்வதாரி௵ மாசிமீ 16௳ ★ 1949-௵ பிப்ரவரிமீ 27௳ No 4

மலான் சர்க்கார் நாடகம்!

டர்பானில் சமீபத்தில் நடந்த இந்திய-ஆப்பிரிக்கர் கலகத்தின் மர்மமென்ன? இதைப்பற்றி விசாரணை என்ற பெயரில் மலான் சர்க்கார் ஏற்பாடு செய்த நாடகத்தின் ரகசியம் ஆரம்பத்திலேயே வெளிச்சமாகிவிட்டது. விசாரிப்பதற்கென்று முற்றிலும் வெள்ளையரைக் கொண்ட ஒரு கமிஷனை நியமித்தபோதே அவர்களது யோக்கியதையில் சந்தேகம் மூண்டதில் ஆச்சரியமில்லை. உண்மையை வெளிப்படுத்துவதற்கு அல்ல இந்த விசாரணை நாடகம்.

இந்தக் கலகத்தைப்பற்றிய உண்மை துலங்குவதில் மேற்குறித்த கமிஷனுக்கு அக்கரையுண்டானால் சாதாரணமாக நீதிஸ்தலங்களில் கையாளப்படும் சில அடிப்படையான கொள்கைகளையாவது பின்பற்றுவது முக்கியமல்லவா? சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யச் சந்தர்ப்பமளிப்பதும் அக்கொள்கைகளில் ஒன்று; அப்போதுதான் சாட்சியத்தில் எந்த அளவு உண்மையுண்டு என்பதை நிதானிக்க இயலும். இத்தகைய சந்தர்ப்பம் தங்களுக்கு அளிக்கவேண்டுமென்றே தென்னாப்ரிக்க இந்தியர் காங்கிரஸ், ஆப்பிரிக்க தேசீய காங்கிரஸ் ஆகிய இரு ஸ்தாபனங்கள் சார்பில் அக்கமிஷன் முன் வாதிக்கச் சென்ற பிரதிநிதி கோரினார். ஆனால் கமிஷன் தலைவர் அக்கோரிக்கையை அடியோடு நிராகரித்துவிட்டார்.

கமிஷனின் உட்கருத்துக்கு இது முதல் ருசு! இக்கலகத்தைப்பற்றி அதிகாரிகள் அல்லது வெள்ளையர் கூறுவதே சத்தியம் என்று ஒரு அறிக்கையை வெளியிட்டு உலகை ஏமாற்றி விடலாமென்பதே அக்கமிஷனின் நோக்கமாயிருக்க முடியும். இக்கலகத்தின் மூலகாரணத்தை மழுப்பி, தங்களை குற்றமற்றவர்களைப்போல் காட்டிக்கொள்ள அதிகாரிகள் வெளியிட்டுவரும் புரட்டுகள் அனைவரும் அறிந்ததுதான். கலகத்தை ஆரம்பத்திலேயே ஒடுக்க அவர்கள் முயற்சி செய்தனர் என்பதும் அப்புரட்டுகளில் ஒன்று. இதில் குறுக்கு விசாரணைக்கு இடமிருந்தால் அதிகாரிகள் எடுத்துக்கொண்ட நடவடிக்கை அந்தரங்கமானதுதானா, போதியதா என்ற ரகசியம் வெளியாகிவிடும். கலகம் இந்த அளவு பரவியது, ஆரம்பத்திலேயே அதை அடக்க அதிகாரிகளுக்கு ஒன்று திறமையில்லை அல்லது இஷ்டமில்லை என்பதையே காட்டுகிறது. இந்தியர்-ஆப்பிரிக்கர் கைகலப்பைக் கண்டு அதிகாரிகள் முற்றிலும் ஆச்சரியமடைந்ததாக அவர்களில் ஒருவர் இந்தக் கமிஷன் முன் சாட்சியம் கொடுத்தார். அதே சாட்சியத்தில் அவர் டர்பான் நகரின் பல பகுதிகளில் ஒரே சமயத்தில் இக்கலகம் மூண்டதாயும் ஒப்புக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வளவுக்கும் கடைத்தெருவில் நடந்த ஒரு சிறு தகராறுதான் காரணம் என்று சொல்வது பரிகசிக்கத்தக்கதாகும். தக்க முன்னேற்பாடு இருந்தாலன்றி இவ்வாறு ஏககாலத்தில் பல ஸ்தலங்களில் இவ்வளவு பயங்கரமான கொலை பாதகங்கள் துவங்கியிருக்க முடியாது என்பது தெளிவு.

இதைக் கிளப்பிவிட்டவர்கள் வெள்ளையர்தான் என்று நிரூபிக்கத் திட்டமான சாட்சியமுண்டு. இந்தியர் மீது பாயும்படி வெள்ளையர் பலர் பகிரங்கமாகவே சுதேசிகளுக்குத் தூபம் போட்டு வந்திருக்கின்றனர். துவேஷத்தை வளர்ப்பதில் மந்திரிகளுக்கு உள்ள பங்கும் பகிரங்க விஷயம். எந்த வழியிலாவது அங்குள்ள இந்தியரை விரட்டியடித்து, சுதேசிகளின் உழைப்பைக் கொண்டு தங்கள் சுகபோக வாழ்வுக்கு நிரந்தரமாக வழி செய்து கொள்வதே வெள்ளையரின் நோக்கம். இதையொட்டி அவர்கள் செய்யும் அட்டூழியங்கள் பலவற்றையும் மறைக்க இந்தியரையும், ஆப்பிரிக்க சுதேசிகளையும்பற்றி தங்கள் மனம்போனபடி அவதூறுகளைக் கிளப்பிவிட்டு வருகின்றனர். இவ்வுண்மைகளை மறைக்கவே விசாரணைக் கமிஷன் குறுக்கு விசாரணைக்குச் சந்தர்ப்பமளிக்க மறுத்துவிட்டதற்குக் காரணம்.

மேற்கொண்டும் இந்த விசாரணையை நடத்துவதாக கமிஷன் நடிக்குமாயின் அது வெறும் கேலிக்கூத்தே. மலான்சர்க்காரின் பித்தலாட்டம் அம்பலமானபின், இனியும் இந்திய சர்க்கார் இவ்விஷயத்தில் அடக்கம் காட்ட அவசியமில்லை.

சென்னையில் ஸர்தார் படேல்



இந்திய ஸர்க்காரின் உதவிப் பிரதம மந்திரி ஸர்தார் வல்லபாய் படேல் சென்ற 21-ந் தேதி இரவு 8-மணிக்குச் சென்னைக்கு விமானத்தில் வந்திறங்கினர். அவரை கவர்னர் தம்பதியும், பிரதம மந்திரியும், சர்க்கார் அதிகாரிகளும் வரவேற்றபோது எடுத்த படம்.

ஸர்தார் படேல் தம்மை வரவேற்றவர்களோடு கைகுலுக்கினர். அவர் ராணுவ அதிபதி ருத்ராவோடு கைகுலுக்குகையில் எடுத்த படம்.

களவும் காதலும்

ப.ரா.

மூன்றுவருஷக் கடுங்காவல் தண்டனையை அனுபவித்துவிட்டுக் கறுப்பண்ணன் சிறையை விட்டு வெளிவந்தபோது, சிறை வாசலில் அவனுக்காக யாரும் கையில் மாலையுடன் காத்துக்கொண்டிருக்கவில்லை! முதல் நாள் இரவு சிறையில் சாப்பிட்ட சோறு அப்போதே ஜீரணமாகி விட்டிருந்தது. சிறை அதிகாரிகள் அவனது அழுக்கடைந்த கந்தல் ஆடைகளை மட்டும் தான் திருப்பிக் கொடுத்தார்களேயன்றி, மூன்று வருடங்களுக்கு முன் அவனைக் கைதி செய்யும்போது அவன் வேஷ்டியில் முடிந்து வைத்திருந்த சில்லரைக் காசைத் திருப்பித்தர மறந்து விட்டார்கள். அது மட்டுமா? பாவிகள்! காலையில் சிறையிலேயே கஞ்சி குடித்தபின் தான் வெளியேறுவதாக அவன் எவ்வளவோ கெஞ்சியும், கேவலம் மரியாதைக்காகக்கூட அவனுக்கு இந்தப் பிரிவுபசாரம் நடத்தவில்லை 'சே! இனி இவர்கள் முகத்தில் விழிப்பதா?'' என்றெண்ணினான் கறுப்பண்ணன் ஒவ்வொரு முறையும் சிறையை விட்டு வெளியேறும்போதெல்லாம் அவன் அப்படித்தான் எண்ணிக்கொண்டு போவது வழக்கம். ஆனால் அவன் தலைவிதி என்னவோ மீண்டும் மீண்டும் அவனை அதே ஜெயிலில்தான் கொண்டு தள்ளிக்கொண்டிருந்தது

ஆம் கறுப்பண்ணன் தன் வாழ்வில் எத்தனையோ முறை சிறைவாசம் அனுபவித்திருக்கிறான். அவன் சிறையில் கழித்திருக்கும் காலத்தையெல்லாம் கணக்குப் பார்த்தால், நமது பெரும் தேசத் தலைவர்களது சிறைவாசமெல்லாம் ஒரு பெரிதல்ல என்றே தோன்றும். ஆனால் இவனுக்கும் அவர்களுக்குமிடையில் சிறைவாசத்தின் காரணமொன்றுதான் வித்தியாசம்! அந்த ஒரு வித்தியாசத்தினால்தான் விடுதலையடைந்து வரும் அவனுக்கு வெளியுலக வரவேற்பில்லை!

கறுப்பண்ணன் அந்த வட்டாரத்திலேயே கொஞ்சம் பிரபலஸ்தன் அவனைக் கண்டு விட்டாலே இரண்டு கைகளாலும் மணிபர்ஸை இறுகப் பற்றிக்கொண்டுதான் எல்லோரும் நடப்பார்கள் பிறர் பைகளை அவர்களறியாமல் காலி செய்வதில் அவன் நிபுணன் இவனுடைய திறமையைக் கண்டு பொறுமை கொண்ட போலீஸ்காரனொருவன்தான் எப்போதும் அவன் பின்னாலேயே சதா சுற்றிக்கொண்டிருந்து அவனைக் கையுங் களவுமாய்ப் பிடித்துக் கொண்டிருந்தான்

நல்ல வேளை! கறுப்பண்ணன் அன்று விடுதலையாகிறானென்ற விஷயம் அந்தப் பாவி போலீஸ்காரனுக்கு ஞாபகமில்லை போலும்! சிறை வாசலில் நின்று கறுப்பண்ணன் ஒரு முறை அக்கம் பக்கம் பார்த்தான் அவனது பரம வைரி எங்கும் காணப்படவில்லை. கொஞ்சம் மனத்திருபதியுடன் கடைத் தெருவை நோக்கி விரைந்தான் சற்று ஜன சந்தடியற்ற ஒரு தெருவில் தலைமேல் தோசைத் தட்டை வைத்துக் கொண்டு விற்றுக்கொண்டே போன குள்ளனொருவன் பின்னால் சென்று அந்தத் தட்டிலிருந்து அரை டஜன் தோசைகளை எடுத்து விழுங்குவதற்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. அவனது அகோரப்பசி ஒருவாறாக அடங்கியது.

எந்த வேலையிலும் படிப்படியாக முன்னேற வேண்டுமல்லவா? களவு' என்ற அப்பெருங்கலையில் ஒரு துறையில் பரிபூரண தேர்ச்சியடைந்து விட்டான். மீண்டும் அதே துறையில் ஈடுபட அவன் விரும்பவில்லை. இதுவரை கேவலம் 'முடிச்சவிழ்க்கி என்ற பெயர்தான் அவனுக்கு நிலைத்து வந்திருக்கிறது. தன் தரத்தைத் தானே ஒருபடி உயர்த்திக் கொண்டு, பக்காத் திருடனாகத் தீர்மானித்தான் கறுப்பண்ணன்! 'கன்னக்கோல் கறுப்பண்ணன் என்ற பெயர் இன்னும் கவர்ச்சிகரமாகத்தோன்றியது—அவன் அபிப்பிராயத்தில். ஊருக்கு மேலண்டைக் கோடியில் தன்னந்தனியாக நின்ற ஒரு பங்களாவின்மேல் கண் வைத்து விட்டான்

அன்றிரவு கறுப்பண்ணன் வேலைக்குப் புறப்படும்போது சகுனங்களெல்லாம் வெகு திவ்யமாயமைந்திருந்தன. இருள் மூடிக்கிடந்த அந்தப் பங்களாவை அணுகினான் அவன். அங்கே நாய் ஒன்றுமில்லையென்று அவன் பகலிலேயே தெரிந்துகொண்டிருந்தானாகையால் ஒரு பயமுமின்றிச் சுவரேறிக் குதித்து பங்களாவினருகில் வந்துவிட்டான்

அந்தக் கட்டிடத்தின் ஜன்னல்களெல்லாம் மூடிக்கிடந்தன. அவற்றின் மூலம் உள்ளே நுழைய வழியில்லையெனக் கண்ட கறுப்பண்ணன் மெல்லப் பங்களாவின் பின்புறம் வந்து தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கினான். கன்னக்கோலின் உதவிகொண்டு சில செங்கற்களைப் பெயர்த்தெடுத்து விட்டு உள்ளே நுழைந்த அவன் தான் கால் வைத்திருப்பது சமையலறை எனக் கண்டு கொண்டான்—அங்கு வீசிய வாஸனை மூலம் உடனே பிய்த்துக்கொண்டெழுந்தது அவன் பசி. சாவதானமாக உட்கார்ந்து அங்கே மிச்சமிருந்த உணவு வகைகளையெல்லாம் காலி செய்தான்.

திருடனானாலும் மனிதன் மனிதன் தானே? அவனால் எப்படி இயற்கை—உணர்ச்சியை அடக்க முடியும்? பசியின் கொடுமையில் அளவுக்கு மீறிப் புசித்துவிட்டான் அதன் பலனாக ஒன்றன்பின்னொன்றாகத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த ஏப்பங்களையும் அவனால் அடக்க முடியவில்லை! ஒவ்வொரு ஏப்பமும் அவனது அடிவயிற்றினின்றும் புறப்பட்டுத் தொண்டையைக் கிழித்துக்கொண்டு போனபோது அவனைச் சித்ரவதை செய்வதுபோலிருந்தது!

அவன் வந்த காரியம் அதோடு முடிந்துவிடவில்லையே இன்றைச் சாப்பாடாயிற்று ஒரு வழியாக. ஆனால் நாளைக்கு ஏதாவது வேண்டுமென்றால்......அதை இன்றே சம்பாதித்தால்தான் உண்டு. அதுதானே தன் தொழிலுக்கும் அழகு? வீட்டில் எலலோரும் ஆழ்ந்த நித்திரையிலிருப்பது தெரிந்தது ஆனால் இந்தப் பாழும் ஏப்பம் நின்றால்தானே தைரியமாக வீட்டிற்குள் காலடி வைக்க முடியும்?

சட்டென்று ஏதோ ஒரு சப்தம் கேட்டதும் திடுக்கிட்டான் அவனை நோக்கி நெருங்கி வந்துகொண்டிருந்தது ஒருருவம். அது வீட்டினுட்புறமிருந்து வந்தமையால் கறுப்பண்ணன் பயத்தினால் வெலவெலத்து விட்டான் அவ்வீட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தால் இந்த நள்ளிரவில் சமையலறையின் நடுவில் தன்னைப் பார்த்துவிட்டால் என்ன ஆகும் என்றெண்ணிப் பதுங்க முயன்றான்—ஆனால் முன்பின்னறியாத அந்த இடத்தில் எங்கு எப்படிப் பதுங்குவது? திக்பிரமை கொண்டவன்போல் ஓடுவதற்கும் கால் வராமல் நின்ற அவனை இன்னும் தலைகால் புரியாமல் செய்தன மறுகணம் நிகழ்ந்த சம்பவங்கள்.

"ஆ என் துரையே!" என்ற ஒரு சிறு அலறலுடன் அவன்மேல் பாய்ந்து இறுகத் தழுவிக்கொண்டது அந்த உருவம் அவன் வாயைத் திறக்க விடாமல் அவனது வாயைப் பொத்திற்று கை! திணறிப்போனான் கறுப்பண்ணன். அவனை அப்படி ஆலிங்கனம் செய்துகொண்டது ஒரு பெண்தானென்று உணர்ந்த அவன், சந்தர்ப்பத்தை நழுவவிட விரும்பவில்லை முன் கூறியபடியே திருடனானாலும் கறுப்பண்ணனும் மனிதன்தானே?

இத்தனைக்கும் தான் காண்பது கனவா, நனவா என்ற உணர்ச்சி அவன் மனதிலில்லாமலில்லை இந்தப் பெண் யாராயிருக்கலாம்? திருட வந்த தன்னிடம் ஏன் திடீரென்று இவ்வளவு காதல் பிறக்க வேண்டும்? அதுவும் ஒருவர் முகத்தை ஒருவர் காணமுடியாத அந்தக் கும்பிருளில்...? கறுப்பண்ணனைப் பொறுத்தவரை அவன் அவள் முகத்தைப் பார்க்க முடியவில்லை. ஆனால் அவள் எப்படி......?

இந்த எதிர்பாராத சந்திப்பு சில நிமிஷங்கள்கூட நீடிக்கவில்லை. அதற்குள் வீட்டினுள்ளிருந்து "ராஜாயி!" என்று யாரோ அதிகார தோரணையில் உரக்க அழைக்கும் குரல் கேட்டது. கறுப்பண்ணனின் இரும்புப் பிடியினின்றும் ஒரு நொடியில் தன்னை விடுவித்துக்கொண்ட அந்தப்பெண் கறுப்பண்ணனின் காதோடு கூறிய கொஞ்சும் மொழிகள் இவைதான். 'என் ராஜா! எஜமானியம்மாவுக்கு உடம்பு சரியில்லை-கூப்பிடுறாங்க. நான் போறேன் அவுங்க பக்கத்திலேயே இருந்து கவனிச்சுக்கிடணுமாம்......நீ கோவிச்சுக்காதே நாளைக்கு இந்நேரம் நீ வந்தா...... உம்......?"

சொக்கிப் போய் நின்றான் கறுப்பண்ணன் அந்தப் பெண் அவனைத் தள்ளமாட்டாக் குறையாகத்தள்ளிக்கொண்டு போய்ச் சமையலறைக் கதவைத் திறந்து, கடைசியாக அனுப்பும்வரை அவனுக்கு ஒன்றுமே தெரியவில்லை. கதவை தடாலென்று சாத்தித் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு அவள் உள்ளே ஓடிய பின்தான் அவன் சுய உணர்வு பெற்றான்

கதவுக்கு வெளியில் நின்ற அவன் சற்று யோசனை செய்தான் 'கண்டதும் காதல்' என்பார்களே அது போல் இந்தப்பெண்-அவள் அந்த வீட்டு வேலைக்காரிதானென்று அவன் அறிந்துகொண்டுவிட்டான்- இவள் தன்னைக் (அதாவது தன் முகத்தை) காணாமலே காதல் கொண்டுவிட்டாள்! திருடப்போன இடத்தில் இந்தமாதிரி தன் நல்லதிர்ஷ்டம் வந்து குறுக்கிடுமென்று அவன் எதிர்பார்த்தானா என்ன?...சரி அது வந்தவரை நல்லதுதான் ஆனால் அதற்காக வந்த காரியத்தை முடிக்காமல் போகலாமா? அன்று பகலில் அவன் பார்த்த பார்வையிலேயே அது பணக்காரர் வீடென்று கண்டுகொண்டான் இரண்டாவது செளகரியம்-இந்த வீடு தன்னந்தனியாக இருக்கிறது அகப்பட்டுக்கொள்ளுவதுபோல் இருந்தால்கூடத் தப்பியோடுவது சுலபம். மூன்றாவது இங்கே நாய் ஒன்றும் கிடையாது. இதையெல்லாம் எண்ணும் போதுதான்.....

அவள் அவனை மறுநாள் இரவு மீண்டும் வரச் சொன்னாளே! இன்று இரவு வீட்டில் ஏதாவது திருடடுப் போனதாகத் தெரிந்தால் அவள் தன்னைச் சந்தேகிக்கலாமல்லவா? "இதே தடா-கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை" என்றமாதிரியல்லவா இருக்கிறது?

இப்படியெல்லாம் சற்று நேரம் சிந்தித்தான் கறுப்பண்ணன். இறுதியில் 'காதலாவது கத்திரிக்காயாவது!" என்ற முடிவுக்கு வந்துவிட்டான். அந்தப் பங்களாவிலிருந்து வெறுங் கை

யுடன் போகமனம் வரவில்லை அவனுக்கு. முதலிலேயே தான் நுழைந்த அந்தத் துவாரத்தின் வழியாக மீண்டும் உள்ளே நுழைந்தான் ஆனால் இம்முறை அவன் சமயலறையில் தாமதிக்கவில்லை. உள்ளே கூடத்தில் குறட்டைச் சப்தங்கள் மாத்திரம் பலமாக வந்துகொண்டிருந்தனவேயன்றி அவன் திருடக்கூடிய பொருள்களொன்றும் காணவில்லை. அங்கே ஒரு மூலையில் ஒரு பிரம்மாண்டமான இரும்புப்பெட்டி இருக்கத்தான் இருந்தது. ஆனால் அதை உடைக்கப்போதிய சாமர்த்தியமோ தைரியமோ அவனுக்கு அப்போது இல்லை. நிராசையுடன் அந்த இரும்புப் பெட்டியை ஒரு முறை பார்த்துவிட்டு 'இரு இரு! இன்னொரு தடவை வரும்போது உன்னை ஒரு கை பார்த்துக்கொள்கிறேன்,'' என்று முண்டாவைப் புரட்டினான் அவன்.

மாடியில் ஏதாவதிருந்தால் கிளப்பிக்கொண்டு போகலாமென்று மாடிப்படிகளில் ஏறினான். அங்கு அறைகளெல்லாம் காலியாகத் தானிருந்தன. அதைத் தன் சொந்த வீடுபோல் பாவித்துக்கொண்டு வெகு நிதானமாக அவன் அவ்வறைகளைச் சோதனை போட்டு வரும்போதுதான் யாரோ மாடிப்படி ஏறிவரும் ஓசை கேட்டது.

'இதென்ன் தொல்லை பூஜைவேளையில் கரடி விடுவதுபோல் எப்போது பார்த்தாலும் யாராவது தொந்திரவு கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்களே.'' என்று முணுமுணுத்துக் கொண்டான். பாவம்! அவனால் வாய்க்குள் முணுமுணுப்பதொன்றைத் தவிர வேறென்ன செய்ய முடியும்? ஆனால் மறு நிமிஷம் பயம் வேறு அவனைப் பற்றிக் கொண்டது அந்த நள்ளிரவில் மாடிப்படி ஏறி வருவது யாராயிருக்கலாம்? யாராவது வீட்டுக்காரனாயிருந்து அகஸ்மாத்தாய் அவன் கறுப்பண்ணன் இருந்த அறைக்குள் நுழைந்து "எலெக்ட்ரிக் ஸ்விட்சையும்'' போட்டு விளக்கை ஏற்றிப்பார்த்துவிட்டால் என்ன செய்வது?

மரியாதையாகத் தப்பி வெளியேறுவதுதான் உசிதமெனத் தோன்றியது அவனுக்கு. சட்டென்று அவ்வறையின் ஜன்னலைத் திறந்து பார்த்தான் தரை வெகு கீழே இருந்தது. குதித்து ஓடுவதென்பது முடியாத காரியம். ஆனால் ஆபத்தோ நிமிஷத்துக்கு நிமிஷம் நெருங்கி வருகிறது. என்ன செய்யலாம்?

மழைத் தண்ணீர் கீழே இறங்குவதற்காக வைக்கப்பட்டிருந்த கனத்த இரும்புக் குழாயொன்று ஜன்னலருகே இருப்பதை தடவிப் பார்த்துத் தெரிந்துகொண்டான் அச்சமயத்தில் அதன் வழியாகக் கீழே இறங்கிப்போவதைத் தவிர தப்புவதற்கு வேறு ஒரு வழியுமிருப்பதாகத் தோன்றவில்லை எனவே ஜன்னல் கட்டையின் மேலேறி அந்தக் குழாயைப்பற்றிக் கொண்டு சரசரவென்று கீழே இறங்கத் தொடங்கினான். அவன் சில அடி தூரம் வரை வெகு சுலபமாகவே இறங்கிவிட்டான் ஆனால்...?

இது என்ன? ஏதோ ஒரு உருண்டையான வஸ்து அவன் போக்கைத் தடுக்கிறதே!... அதுமட்டுமா? கந்தசாமியின் பாரத்தைத் தன்மேல் தாங்கிக்கொண்டு அது அப்படியுமிப்படியும் அசைய வேறு தொடங்கிவிட்டது போதாதற்கு "ஹாம்... ஹாம்" என்ற முக்கல் சப்தங்கள் வேறு அங்கிருந்து புறப்படத் தொடங்கின கடைசியில் அப்படியே அந்தரத்தில் 'பிரேக்' போட்டுக்கொண்டு நின்றுவிட்ட அவனை மீண்டும் மேலுக்குத்தள்ள முயற்சித்தது கீழேயிருந்த அந்த உருண்டை வஸ்து

இரண்டு கைகளாலும் அந்த இரும்புக் குழாயை இறுகப் பிடித்துக் கொண்டிருந்த கறுப்பண்ணன் இதன் மர்மத்தையறியும்பொருட்டுக் கீழே குனிந்து பார்த்தான். இருட்டில் சற்று நேரம் ஒன்றுமே தெரியவில்லை. 'பளிச்' சென்று வீசிய ஒரு மின்னல்தான் அவனுக்கு உண்மையைப் புலப்படுத்தியது. அவனை அங்ஙனம் கீழே இறங்கவிடாமல் தடுத்துக்கொண்டிருந்த வஸ்து ஒரு மனிதனின் தலை தான். அந்தத் தலைக்குச் சொந்தக்காரனும் அங்கே தான் இருந்தான்!

அந்த மனிதன் யாராயிருக்கக் கூடும்? அவன் தன்னைத் திருடனென்று கண்டு கொண்டு பிடித்துக் கொடுக்க விரும்பினானென்றால் அதைக் கீழிருந்தபடியே எவ்வளவோ சுலபமாகச் செய்திருக்க முடியும். கேவலம் ஒரு கூச்சல் போட்டாலே போதும். ஆனால் இவனோ வென்றால் முக்கி முனகிக்கொண்டாவது தன்னைக் கீழே இறங்கவிடாமல் தடுக்கப் பார்க்கிறானேயன்றி வேறு எதற்கும் வாயைத் திறப்பதாகக் காணோமே!

இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் மற்ற எல்லாத் திருடர்களும் வரக்கூடிய முடிவுக்குத்தான் வந்தான் கறுப்பண்ணனும். தன்னைப்போல



"தினம் வெடியறத்துக்கு முந்தி இதுலே தண்ணி வந்துக்கிட்டிருந்ததே! இப்படி இன்னிக்கு மோசம் பண்ணிட்டுதே! 2-படி பாலை 10 வூட்டுக்கு நான் எப்படித்தான் ஊத்த போறேனோ! அட கடவுளே! இதுவும் உன் சோதனையோ?"

அவனும் ஒரு திருடனாகத்தானிருக்க வேண்டும். சீ சீ! போயும் போயும் இவனுக்குப் பயப்படுவதாவது? வருவதுவரட்டும் அவனுக்காயிற்று தனக்காயிற்று என்று ஒரு கைபார்த்துவிட வேண்டியது தான் என்ற தீர்மானத்துடன் தன் பாரத்தைப் பிரயோகித்து அவனைக் கீழே அழுத்தத் தொடங்கினான் இவன் கீழே அழுத்த அவன் மேலே தள்ள சற்று நேரத்திற்குப் போராட்டம் நீடித்தது.

விளைவு...? இயற்கையான விளைவு தான் கிட்டத்தட்டப் பதினைந்தடி உயரத்திலிருந்து உருட்டியடித்துக் கொண்டு தரையில் வந்து விழுந்தனர் இருவரும். நல்ல காலமாகத் புல் தரையாக இருந்தமையால் மண்டை உடையாமல் பிழைத்தனர். அத்துடன் சப்தமும் அதிகம் கேட்கவில்லை.

விழுந்த கறுப்பண்ணன் சரியாக எழுந்து உட்காரு முன்பே அந்த இரண்டாவது மனிதன் எழுந்து அவன் மார்பில் ஏறி அழுத்தமாக உட்கார்ந்துகொண்டு விட்டான். கறுப்பண்ணன் ஆகிருதியில் கிட்டத்தட்ட அந்த எதிரிக்குச் சமானமானவனாயிருந்த போதிலும் அவனால் அவனுடன் போராட முடியவில்லை. எனவே தரையில் மல்லாந்து படுத்தவண்ணம் வாய்க்குள் ஏதோ உறுமிக்கொள்வதோடு அவன் திருப்தியடைய வேண்டியதாயிற்று.

"டேய். மரியாதையாக விட்டுவிடு. இல்லாவிட்டால்......' என்று மிரட்டினான் கறுப்பண்ணன். எதிரியின் பிடி இறுகிற்று.

"டேய் திருட்டுப்பயலே! என்ன தைரியமாக நீ........." என்று எதிரி முடிப்பதற்குள் குறுக்கிட்டான் கறுப்பண்ணன் 'நானடா திருடன்? நீதானடா திருடன்......" என்று.

"நான் திருடனல்லடா! நான்தான் திருடர்களின் ஜன்ம விரோதி. தெரியுமா? என் நம்பர் ஐநூத்தி நாலு. ஞாபகமிருக்கட்டும்." என்றான் எதிரி.

கறுப்பண்ணனின் மனத்திரையைக் கிழித்துக்கொண்டு ஞாபகம் வந்தது ஒரு நம்பர்-ஐநூத்தி நாலு—அதே போதுமானதாயிருந்தது. ஆம். சந்தேகமில்லை. தன் பழைய விரோதியான போலீஸ்காரனின் நம்பர்தான் அது கறுப்பண்ணனின் மனத்திலிருந்த கொஞ்சம் சந்தேகத்தையும் நீக்கிவிட்டது அவன் எதிரியின் 'டார்ச்' விளக்கிலிருந்து வீசிய ஒளி. கணப்பொழுதில் இருவரும் ஒருவரையொருவர் அடையாளங் கண்டுகொண்டனர். போலீஸ்காரன் பொன்னம்பலம்-அதுதான் ஐநூத்தி நாலின் நிஜப்பெயர்—கறுப்பண்ணனின்மேல் தன் பிடியை இன்னும் இறுக்கினான். "மறுபடியும் இந்தப் படுபாவியிடமே வந்து மாட்டிக் கொண்டுவிட்டோமே" என்று விழித்தான் கறுப்பண்ணன்

அவன் மயிரைப் பிடித்துப் பொன்னம்பலம் குலுக்கிய ஒரு குலுக்கானது அவனை மீண்டும் சுய உணர்வுக்குக் கொண்டுவந்தது. "ஏண்டா? ஜெயிலிலேயிருந்து எப்போடா வந்தாய்? அதற்குள்ளேயும் தொழிலைத் தொடங்கிவிட்டாயா?......ஏது இந்தத்தடவை வீடு புகுந்து திருட ஆரம்பித்து விட்டாய்?" என்று கேட்டான் பொன்னம்பலம்.

என்ன பதில் சொல்வது? கறுப்பண்ணன் முன்பு (தவறாக) எண்ணிக்கொண்டு விட்டபடி அது வேறு யாராவதாக இருந்திருந்தால், "நீ எதற்காகக் குழாய் மேலேறிக் கொண்டிருந்தாய்? திருடுவதற்கல்லாமல் வேறெதற்கு?" என்று திருப்பிக் கேட்டிருக்கலாம். ஆனால் இந்

தப் போலீஸ்காரனிடம்-தன் பழைய வைரியிடம் என்ன பதில் சொல்வது? அப்படித் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு. கேட்டாலும் கூட அவன் 'உன்னைப் பிடிக்கத் தானடா ஏறினேன்" என்று தான் பதில் சொல்லுவான். காரணம் அவன் போலீஸ்காரன் என்பதைத் தவிர வேறு என்ன?

இந்தச் சிக்கலான சமயத்தில் கூடக் கறுப்பண்ணனின் மூளை வேலை செய்யத் தவறவில்லை. சமையலறையில் சற்று முன் நடந்த சம்பவங்கள் அவன் நினைவிற்கு வந்தன. அதை உபயோகித்துக்கொண்டு தப்பலாம் என அவன் நிச்சயமாய் நம்பினான். "இல்லை அண்ணே! திருட்டுத் தொழிலுக்கு நான் முன்பேயே தலை முழுகிவிட்டேனே... இப்போ நான் வந்தது வேறே சொந்த விசயம் அண்ணே...என்று அந்தப் போலீஸ்காரனிடம் அண்ணன் உறவு கொண்டாடினான் அவன்

"சொந்த விஷயமா?...என்னடா சொந்த விஷயம்?"

"அண்ணே! உன்னை எனக்கு ரொம்ப நாளாத் தெரியும்னு நினைச்சு உங்கிட்ட இந்த சமாசாரம் சொல்றேன் விஷயத்தை வெளியே விட்டுடாதே. என்ன இருந்தாலும் இது பெரிய மனுசங்க வீடு பாரு...இங்கே தான் நம்ப குட்டி இருக்கிறு ராஜாயின்னு பேரு (யஜமானியம்மாள் அவளைக் கூப்பிடும்போது சொன்ன அந்தப் பெயரை கறுப்பண்ணன் நன்கு கவனித்திருந்தான்.) பலே 'ஷோக்'கா இருப்பா. அவளைச் சந்திக்கத்தான் இந்த நேரத்தில்... என்று கறுப்பண்ணன் சற்றுத் தயங்கினான். அவன் தயங்கின அந்தக் கணத்தில் அவன் முகத்தில் பலமாக விழுந்தது ஒரு குத்து. கறுப்பண்ணன் திக்குமுக்காடிப் போய்விட்டான்...

ஆனால் அது அத்துடன் நிற்கவில்லை. போலீஸ்காரன் மிகுந்த ஆக்ரோஷமடைந்து விட்டானென்பதை அவன் குரலும், தொடர்ந்து வந்துகொண்டிருந்த குத்துக்களும் விளக்கின! "ஏண்டா.........என்ன தைரியமாய் என்னிடம் கரடி விடுகிறாய்......? (இங்கு ஒரு குத்து) ராஜாயி யாரென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் நீ? (இன்னொரு குத்து.) என் ராஜாயியை, நான் சந்திக்க வந்த இடத்தில் (இன்னொரு குத்து) நீ குறுக்கே விழுந்து காரியத்தைக் கெடுப்பதுமில்லாமல் இந்த அபாண்டமான பொய்யை வேறு கூசாமல் சொல்கிறாயா?" (ரொம்பப் பலமான ஒரு குத்து)

கறுப்பண்ணனுக்குக் குத்துக்கள் கூட அவ்வளவு வலிக்கவில்லை. ஆனால் விஷயம் புரிந்துவிட்டது. இங்கு பெரிய 'ஆள் மாறாட்டம்' ஏற்பட்டிருந்தது!!

சமையலறைக்குள் இருந்த தன்னைத் தன் காதலன் என்றெண்ணிக் கொண்டுதான் அந்தப் பெண் அப்படியெல்லாம் நடந்துகொண்டிருக்கிறாள்; தான் வெளியே வந்து மீண்டும் வீட்டினுள் சென்ற பின்தான் அவளது உண்மைக் காதலன், அதாவது பொன்னம்பலம் அவளைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறான். சமையலறைப் பக்கம் சற்றுக் காத்திருந்துப காதலி வரக்காணாமல் பங்களாவைச் சுற்றிக்கொண்டு வரும்போதுதான் சற்றுத் தூரத்திலிருந்தே மாடி ஜன்னலுக்கு வெளியில் நீட்டிக்கொண்டிருந்த தன் தலையைக் கவனித்துவிட்டான் அடாடா! அந்தப் போலீஸ்காரனுக்குத்தான் என்ன கூரிய பார்வை!

பார்வையில் அந்தக் கூர்மை கறுப்பண்ணனுக்குமட்டும் இருந்திருந்தால் அவன் முதலில் கீழேயே இறங்கத் துணிந்திருக்கமாட்டான். ஆனால் அந்தக் காரிருளில் இதைவிடக் கூர்மையாக அந்தப் போலீஸ்காரனால் கூடப் பார்க்கமுடியவில்லைபோலும்! ஜன்னலுக்கு வெளியில் தெரிந்த கறுப்டண்ணனின் தலையை தன் காதலியின் தலையென்று அவனும் தவறாக நினைத்துக்கொண்டுதான் ஆவலுடன் குழாய் மேலேறி மேலே வர முயற்சித்தான் போலீஸ்காரன். மேலே ஏறிவரும் அவனுக்கும் கீழே இறங்கி வரும் கறுப்பண்ணனுக்குமிடையில்தான் எதிர்பாராத விதமாக மேற்படி சந்திப்பேற்பட்டது!

இருட்டில் ஒன்றும் தெரியாதவரையில் அவசரப்பட்டுக்கொண்டு கலாட்டா ஒன்றும் செய்யவிரும்பவில்லை அந்தப்போலீஸ்காரன் அதனால் தான் வாயைத் திறக்காமலே கறுப்பண்ணனுடன் பலப்பரீட்சையில் இறங்கினான் அதன் விளைவுதான் தெரிந்துவிட்டதே!

பொன்னம்பலம் குத்தின குத்தில் உண்மையைக் கக்கிவிட்டான் கறுப்பண்ணன். பொன்னம்பலத்துக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. தன் காதலியின் தவறென்று அதைச் சொல்வதா அல்லது கறுப்பண்ணனின் துணிச்சலைப் பழிப்பதாவென்று தெரியாமல் அவன் கறுப்பண்ணன் மார்பிலிருந்து எழுந்து அவன் தலைமயிரைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி "ஏண்டா? இப்போது உன்னைத் திருடனென்று நான் பிடித்துக்கொடுத்தால் எனக்கு நிறைய வெகுமதி கிடைக்கும், தெரியுமா;" என்றான். ஆனால் இப்போது திருடன் பயப்படவில்லை. எதற்கும் துணிந்துவிட்டான்.

"ஆமாம் அண்ணே. அது மாதிரி அந்தக் குட்டிக்கிட்டே நீ சிநேகம் வச்சிக்கிட்டிருக்கிறதையும் நானு தெரியப்படுத்தினா உனக்கு இனாம் இன்னும் ரொம்பக் கிடைக்கும்! இதெல்லாம் பெரிய மனுசங்க வீட்டுச் சமாசாரம். ஞாபகமிருக்கட்டும். என்னை நீ ஜெயிலுக்கு அனுப்பறத்துக்குள்ளேயும் உன் குடடை நானு உடைக்காமப் போயிடமாட்டேன். தெரியுமாங்காட்டியும்......?' என்று பதிலுக்கு மிரட்டினான் கறுப்பண்ணன்.

போலீஸ்காரனுக்கு மண்டையிலடித்தாற்போலிருந்தது இந்தப் பதில். இந்த மாதிரி ரஸாபாசமான நிலைமையை அவன் விரும்பவில்லை. கடமையைக் காட்டிலும் காதலே பெரிதாகத்தோன்றியது அவனுக்கு.

நடனம் மிஸ் தாராசௌத்ரியின் தலைமையில், டில்லி கர்நாடக சங்கீத சபையின் தலைவர் ஸ்ரீ பி. கே. நாராயணய்யரின் பெண் மிஸ் அம்புஜம் சென்ற மாதம் 29-ந்தேதி புதிய டில்லியில் பரதநாட்டியக் கச்சேரி செய்தபோது எடுத்த படம். நாட்டிய உடையில் உள்ள அம்புஜத்தை தாராசௌத்ரி பற்றிக்கொண்டு பின்னால் நிற்கிறார்.

அதற்குப்பின் அதிக நேரத்தை யோசனை செய்வதில் வீணாக்கவில்லை- பொன்னம்பலம்.

அவனிடமிருந்து கடைசியாக ஒரு குத்தும் ஒரு உதையும் வாங்கிக் கொண்டு முதுகில் கால் இடிக்க ஓடினான் கறுப்பண்ணன். விளையாட்டுக் கோசரம், அவனைக் கொஞ்ச தூரம் வரை துரத்தியடித்துவிட்டுப் பின் தன் வழியே சென்றான் பொன்னம்பலம்.

அன்றைய இரவு செய்த திக்விஜயத்தின் பெருமையைப்பற்றித் தன்னைத்தானே மெச்சிக் கொண்டான் கறுப்பண்ணன். மறுபடி அந்த ஜெயில் அதிகாரிகள் முகத்தில் போய் விழிக்கும் துர்ப்பாக்யத்தினின்றும் மயிரிழை பிசகினதால் தப்பிக் கொண்ட கறுப்பண்ணன் தனக்குக் கனகாபிஷேகமே செய்து கொண்டாலும்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

தொடர்கதை

சொப்பன வாழ்க்கை

ஆர்வி

7

சுசிலா மனம் நொந்து மறுகினாள். அவளுக்கு இந்த ஒரு விஷயம் மட்டும் விடுபடாத புதிராகவே இருந்தது: எப்போது முதல் தன்னையுமறியாமல் விசுவத்தின் மனசிலே வேறொருத்தி புகுந்து ஆட்சி செலுத்தத் தொடங்கினாள்?—

அது எப்படி நேர்ந்தது? திருப்பித் திருப்பிப் பல முறை எண்ணிப் பார்த்தும் இந்தக் கேள்விக்கு அவளால் விடை கண்டு பிடிக்கவே முடியவில்லை. அணையாத தீபம்போல, அவள் உள்ளத்தில் சுடர் விட்டுக்கொண்டிருந்த உற்சாகம் மங்கிப் போயிற்று. கணவன்—மனைவி என்ற பந்தமெல்லாம் போலித் தன்மை வாய்ந்தவைகளாகவும் அன்பு—பிரேமை என்பவைகளெல்லாம் அர்த்தமற்ற சொற்களாகவும் அவள் இருதயத்திலே ஒலித்தன. சகல சௌபாக்கியங்களுடன் விளங்கிய வாழ்வு தன் சம்பந்தப்பட்டவரையில் முற்றுப்பெற்று ஒரு புதிய அத்தியாயம் தொடங்கிவிட்டதுபோல் தோன்றிற்று. மனசிலே இருந்த உறுதி கட்டுக்குலைந்து இளகிக் கொண்டிருந்தது அன்பையும் நேர்மையும் கொண்டு வளர்த்து வந்த செடி இன்று வாடி வதங்கி அடிசோர்ந்து நின்றது. உள்ளத்தின் ஒரு கோடியில் தனக்கே புரியாமல் அமுங்கிக்கிடந்த உணர்ச்சி ஒன்று இப்போது மேலே உருவாகி வர முண்டிக்கொணடிருப்பதை அவள் உணர்ந்தாள்

எவ்வளவு விபரீதமான உணர்ச்சியின் இழைகள்! ரோஜாமலரின் சிறு துவர்ப்பு எல்லாம் ஒன்று சேர்ந்து அதன் மென்மையான நறுமணத்தையும் ருசியையுமே பாழ்படுத்தி விடுமோ!

முப்பது வயது நிரம்பி வாலிபத்தின் முறுக்கோடு விளங்கும் விசுவத்தின் கம்பீரமான தோற்றத்தை நினைத்துப் பார்த்துக்கொண்டபோதெல்லாம் அவள் நடுக்கங் கொண்டாள். என்றேனும் ஒரு நாளாவது அவனை உள்ளன்புடன் அந்தரங்க சுத்தியுடன் நேசித்திருப்போமா என்பதே அவளுக்குத் தெளிவற்ற புதிராக இருந்தது இன்று அன்பு காட்டுவதிலும் கணவனைத் திருப்திபடுத்துவதிலும் அவள் ஒருநாள் கூடத் தவறியதில்லை. ஆனால் அதெல்லாம் தன் கடமை என்பதனால்தான் அபபடி நடந்துகொண்டாளோ? சுசீலாவுக்குத் தன் மீதே சந்தேகம் வலுக்க ஆரம்பித்துவிட்டது.

விசுவத்தின் சுபாவம் அவளுக்கு நன்றாகத் தெரியும். பெற்றோர்களைக் கூடத் தூக்கி எறிந்துவிடுவான். அவர்கள் என்றும் இவனிடம் நெருங்குவதேயில்லை. பெங்களூரில் உத்தியோக நிமித்தம் தனியாக ஜாகை ஏற்படுத்தியது அவர்களுக்குத் தான் அவிழ்த்துவிட்டது போலிருந்தது. இரண்டு தடவையோ மூன்று தடவையோ அவர்கள் பெங்களூருக்கு வந்து போயிருப்பார்கள். ஒவ்வொரு தடவையிலும் இரண்டு மூன்று நாடகளுக்கு மேல்தங்கியதில்லை. அதுவும விசுவத்தை முன்னிட்டு அவர்கள் வரவில்லை. சுவாமியையும் நாட்டுப் பெண்ணையும் பார்க்கவேண்டியதுதான் முக்கியம் என்பது அவர்கள் எண்ணம்! ஆனால் சுசீலாவுக்கு மனசுக்குள் அவர்களிடம் வருத்தம் உண்டு. 'சின்னப் பிள்ளையிடம் இவ்வளவு கரிசனமாய்-அன்பாய் இருக்கிறார்களே அதில் கொஞ்சம் நம்மவரிடம் இருந்தால் என்னவாம்! 'மாவு இருக்கிற மணம் போலத்தான் கூழ் இருக்கிற குணமும் இருக்கும்' என்று அவளுக்குத் தோன்றும். விசுவத்தை எல்லோரும் தப்பாக எண்ணிக்கொண்டு நெருங்காமல் இருக்கிறார்கள் என்று அவள் கருதினாள். அந்த எல்லோருடனும் இப்போது அவளும் சேர்ந்து கொண்டு அவனைப புரிந்துகொள்ளாமல் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு வந்துவிட்டாளோ?

அவன் முரட்டுச் சுபாவம் உள்ளவன் என்பது என்னவோ உண்மை. அதைப்போல பானுமதியிடம் அவன் அன்பாக, ஆசையாக இருப்பதும் ஏன் உண்மையாக இருக்கக்கூடாது?—

சென்னைக்கு வந்த அன்றும் மறுநாளும் அவள் யாரிடமும் முகம் கொடுத்துப் பேசவில்லை. யாரும் அவளிடம் நெருங்கி எதுவும் பேச்சுக் கொடுக்கவில்லை. அண்ணாவின் பெண் ஹேமுகூட இந்த மர்மம் நிறைந்த மௌனத்தைப் புரிந்துகொண்டவள்போல அத்தையைத் திரும்பிப்பார்க்கவில்லை. தான் கலகலப்பாக இருக்கமுடியாமல் இருப்பினும் யாராவது தன்னிடம் கலகலப்பாகப் பேச வரக்கூடாதா என்ற கலக்கம் வேறு அவள் மனசைக் கவிந்துகொண்டது. வெறும் யந்திரம் போலச் சாப்பிடுவதும் தூங்குவதுமாக அந்த இரண்டு நாளையும் இரண்டு யுகமாகக் கழித்தாள். என்ன காரணத்தாலோ 'மூன்றாம் நாள் காலையில் எழுந்திருந்து கீழே வர வெகு நேரமாகி விட்டது. வந்ததுமே அந்த வீட்டுக்குப் புதிய குரல் ஒன்று காதில் விழுவதைக் கேட்டுத்திடுக்கிட்டாள்.

"சுசீ மன்னி இன்னும் தூங்குகிறாளா, என்ன?" என்றது அந்தப் புதுக்குரல்.

"ஆயிற்று; எழுந்து வருகிற நேரந்தான்...இதோ" என்றான் சுசீலாவின் தம்பி குமார்.

சுசீலா அவர்கள் பேசும் இடத்துக்கு வந்து நின்றாள். ரெயில் பிரயாணத்தினால் சிவந்த கண்களுடனும் அழுக்கேறிய முகத்துடனும் உட்கார்ந்திருந்த சுவாமி அவளைப்பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்து விட்டு, "என்ன மன்னி இத்தனை நேரமா தூங்கிககொண்டிருந்தாய்?" என்றான்.

சுசீலா பதில் எதுவும் சொல்லக்கூடிய நிலைமையில் இல்லை என்பதை உடனேயே அவன் கண்டு கொண்டான். கண்களிலே இருந்த படலம் மறைந்து கருமை படர்ந்திருந்தது. நீலம் பாய்ந்திருக்கிற விழிகளிலே பட்டு நூலைப்போன்ற சிவப்புக் கீற்று விழுந்திருந்தது. இருதயக்கொதிப்பை அடக்குகிற முயற்சியிலே உதடுகள் துடிக்க ஆரமபித்தன. இந்தக் காட்சியின் நடுவிலே நிற்க விரும்பாமல் குமார் வாயில் பிரஷ்ஷைக் கௌவிக் கொண்டு ஸ்நான அறையை நோக்கிச் சென்றான். எதிராளியின் மனப்போராட்டத்தைச் சிறிதும் பொருட்படுத்தாத விசுவத்தின் கூடப்பிறந்த சகோதரன் சுசீலாவின் தோற்றத்தால் அசையாத கற்சிலை மாதிரி ஆகிவிட்டான. சுசீலா திடம்கொண்டு, "நேற்று ராத்திரி வண்டியில்தானே வந்தாய்?" என்றாள்.

"ஆமாம் மன்னி."

இந்தக குரல் என்ன காரணத்தாலோ பஞ்சவடியில் சீதாபிராட்டிக்குத் துணையாகக் காவல் இருந்த லக்ஷ்மணனின் குரல்போல அவளுககு ஒலித்தது. மேலே எதுவும் பேச அவள் விரும்பவில்லை. ஏன், எதற்கு என்பனபோன்ற ஆயிரமாயிரம் கேள்விக்குறிகள் அவள் மண்டையில் அடித்துககொண்டிருந்தும் அவள் சாந்தமாக, உறுதியாக, "சுவாமி, நீயும் போய்க் குளித்து விட்டுக் காப்பி சாப்பிட வா" என்றாள்.

மாமனார், மாமியார் வந்து விட்டுப்போகும் இரண்டுநாட்களில் இவனிடம் சீராடுவதைக் கண்டு ஏற்படும் அருவருப்பு அவள் மனத்தைவிட்டுவெகுநாள் வரை நீங்காது. இந்தக் குழந்தையைக் கையிலெடுத்துக் கொஞ்சாத குறை ஒன்றுதான். ஆனால் அவர்கள் போன பின்னர் தன்னையே இவன் தாயாகவும் தந்தையாகவும் பாவித்து நடந்து கொள்வதைப்பார்த்து அவள் மனம் இளகி ஓடிவிடும். எதற்கெடுத்தாலும் மன்னிதானா இவனுக்கு என்று கூட எண்ணி அலுத்துக் கொள்வாள். சுவாமி விட்

டால்தானே! அலுத்துக்கொள்ளும் முகத்தி லிருந்து ஒரு புன் சிரிப்பையாவது வரவழைக் காமல் அவன் நகரமாட்டான்.

“நீ கோபித்துக் கொள், மன்னி. வேண் டாம் என்று சொல்லவில்லை, ஆனால் அதைச் சிரித்துக்கொண்டே கோபித்துககொள்ளேன்” என்று அவன் அடம் பிடிப்பான்.

“சரிதான் போ” என்று சொல்வாளே தவிர அவளால் சிரிக்காமல் என்னவோ இருக்கமுடி யாது.

சுவாமி குளிப்பதற்கு எழுந்து சென்றதும் அவனிடம் இத்தகைய அருவருப்பும், அன்பும் அவளுக்கு மாறி மாறி ஏற்பட்டது. அவன் முகத்தைக் காணாத போது அவனும் அந்த அண்ணனுக்குத் தம்பிதானே என்று வெறுப்பு இருந்ததுபோலத் தோன்றியது. ஆனால் அவ னைக்கண்டதும் பழைய அன்பு மீண்டும பெருகி வந்தது. ‘ஒரு சமயம் சுவாமியைவிட்டு என்னை அழைத்து வரும்படி அவா அனுப்பி யிருப்பாரோ—ஒரு நாளும் அப்படி யிருக்காது. “இது என் சொந்த விஷயம் மனைவியாய் இருந் தாலும் சரி, மகனாய் இருந்தாலும் சரிதான், இதிலெல்லாம்கண்டிப்பாகத் தலையிடக்கூடாது. இதற்குச சம்மதித்தால் இங்கே என்னுடன் குடித்தனம் செய். இல்லாவிட்டால் நீ எங்கு போனாலும் எனக்கு ஆக்ஷேபனையில்லை” என்று சொன்ன மகா புருஷர், ஊருக்குக் கிளம்பும் போது, “நீ போகத்தான் போகிறாயா?” என்று ஒரு வார்த்தைகூடக் கேட்க விரும்பாதவர், “போய்த் தொலையட்டும்; தொந்தரவு விட்டது” என்ற பாவனையில் அலட்சியமாய் நடந்து கொண்டவர் டிரைவரைக் கூப்பிட்டு “டேய் தாஸ், கொண்டுபோய் ரெயிலேற்றி விட்டு விட்டுச் சீக்கிரம்வா! வெளியிலேபோகவேணும் எனக்கு’ என்று பிரயாணத்தைத் தவிர்க்க முடியாததாகச் செய்தவர்; போன மூன்றாவது நாளே திரும்ப அழைத்து வரும்படி எப்படிக் கட்டளையிடுவார்? பின்னே எதற்கு சுவாமி இங்கு வந்திருக்கிறான்? அங்கே என்னதான் நடந்தது?’ என்றெல்லாம் அவள் சிந்தனை வட்டமிட்டு வந்தது.

நடந்தவற்றைஎண்ணிப்பார்த்தபோது அவள் உள்ளம் கொதித்து வந்தது. ஆறு வருஷங்கள் அன்றிற்பறவைகளைப் போல் கோபத்தில் கொஞ்சி மகிழ்ந்து, கொஞ்சுதலில் கடிந்து பிணங்கி, ஒருவர் உள் ளத்தை மற்றவர் கரை கண்டுவிட்டதைப் போல் விட்டுக்கொடுத்துப் பழகி ஒன்றி வாழ்ந்ததையெல் லாம் ஒரே கணத்தில் பறந்துபோகும்படி சிதற அடித்து. இருதயத்தைச் சின்னாபின்னமாகக் கிழிககிற தன்மைக்குப் பௌருஷம் என்று பெயர் உலகத்தில்?



"சீ, அவர் அனுப்பியிருந்தாலும் நான் நிச்சயம் புறப்பட்டுப் போகமாட்டேன்" என்று அவள் தனக்குள் தீர்மானமாகக் கூறிக்கொண்டாள்.

மனைவியை ஓரிடத்தில் பேச விட்டுவிட்டு, தான் வேருெருத்தியிடம் தனியாகப் போய்க் குலாவுவது? இந்த நயவஞ்சகத்துக்கு மன்னிப்பு உண்டா, என்ன? அது வெறும் குலாவுதலாக இருந்தாலும் மன்னித்துவிடலாமே! அந்தப் பதில் ஒன்றே போதுமே, அவள் காணுதபோது என்னவெல்லாம் நடக்கும் என்பதைக் குறிப்பிட!

சுசீலா வேருென்றும் எண்ணினுள், இங்கே என்ன நடக்கிறது என்பதை உளவு பார்த்துவர அல்லது விஷயத்தைப் பரவாமல் தடுக்க இவன் அனுப்பப்பட்டிருப்பானே என்று. ஆனுல் காப்பி சாப்பிட வந்த சுவாமியின் களங்கமற்ற பார்வையைக் கண்டதும் அந்த எண்ணம் அடியோடுமறைந்துபோயிற்று 'அவருக்கு மனைவி ஒன்று; தம்பி ஒன்று! அவருக்கு அவர்தான முக்கியம். அவர் சுகம் ஒன்றுதான் பிரதானம் அவருக்கு இல்லாவிட்டால் இப்படியெல்லாம ஏன் நடக்கிறது?' என்ற எண்ணம்தான் அதற்குப் பதிலாக உதயமாயிற்று.

அவள் மட்டும் அவன் சுகத்தை மறுத்தாளா? அவள் அவனுடைய இன்பம் ஒன்றையே லட்சியமாகக் கொண்டு நடந்துகொள்ளவில்லையா? அதெல்லாம் முன்பு! அவனது இருதயத்தைத் தான் ஒருத்தி மட்டும்தான் வென்றுவிட்டதாக செருக்குற்று நின்ற நாட்கள் அவை! இந்த இறுமாப்புக்கு நன்ருக வேண்டும் என்று தன்னையே நிந்தித்துக்கொண்டாள்.

சுவாமியிடம் பேசுகையில், 'அண்ணு ஏதாவது சொன்னுரா? அப்புறம ஏதாவது நடந்ததா?' என்று கேட்கவேண்டுமென்ற துடிப்பு அவளுக்கு உண்டாயிற்று. ஆனுல் "பாத்ரூமுக்குப் பக்கத்தில் பூனை குட்டி போட்டிருந்ததே. அது என்னவாயிற்று?" என்றுதான் கேட்டாள்.

பாவம்! பூனை குட்டி போட்டிருந்த விஷயமே சுவாமிக்குத் தெரியாது.

"மன்னி, உனக்குப் பூனைமீது இருக்கும் அக்கரைகூட எங்கள்மீது இல்லையே? என்ன செய்தாய் இரண்டு நாளும, எங்கே திடீரென்று புறப்பட்டு வந்துவிட்டாய் என்று ஒரு வார்த்தை கேட்கக் கூடாதா, மன்னி!" என்ருன் சுவாமி.

சுசீலா சிரித்துக்கொண்டே, "நீதான் வந்திருக்கிருயே தன்னுலே சொல்லாமலா போகப்போகிருய்? சரி, உன் பெட்டி, படுக்கைகளை மாடி அறையில் கொண்டுபோய் வை. இங்கே எல்லாம் கலந்து போகும். அண்ணுவெல்லாம் போனபிறகு சாவகாசமாய்ப் பேசிக்கொள்ளலாம்" என்ருள்.

அவள் அவனுடைய சிறுபையைத் தூக்கிக்கொண்டாள் அவன் தன் பெட்டியை ஒரு கையிலும் படுக்கையை ஒரு கையிலுமாகத் தூக்கிக்கொண்டான். வேண்டுமென்றே அவள், 'அண்ணுவுக்கு நீ இங்கு வருவது தெரியுமா, சுவாமி?" என்று கேட்டாள். தெரியாமலா இருக்கும் என்பது அவள் நினைப்பு.

ஒரே வார்த்தையில் பதில் வந்தது: "தெரியாது."

சுசீலாவுக்குப் பட்டென்று யாரோ மண்டையில் தட்டியது போலிருந்தது அவள் பிறகு மேலே வருவதற்குள் அவன் தன் பெட்டிப் படுக்கைகளை வைத்துவிட்டுத் திரும்பிவிட்டான்.

கிருஷ்ணன், மன்னி விமலா, குமார் மூவரும் இந்தத்தடவை தன்னிடமோ அல்லது சுவாமியிடமோ அவ்வளவு கலகலப்பாக நடந்துகொள்ளவில்லை என்று சுசீலாவுக்குப்பட்டது. மேம்போக்காக ஊர்ச்செய்திகளை விசாரித்ததுகூட சம்பிரதாயப்படி இல்லை. அவர்கள் எதையோ ஹேஷ்யமாக எண்ணிக்கொண்டு அதிகமாய் நிண்டிக் கேட்காமல் ஒதுங்கி இருப்பது ஒருவிதத்தில் அனுகூலமாயும் மற்ருெரு விதத்தில் விகல்பமாயும் இருந்தது. சுசீலா கீழே இறங்கி வந்தபோது அவளுடைய சகோதரர்கள் தம்தம் வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டாள். "யாருடைய தயவும் எனக்கு வேண்டாம். அதிலும் இவர்கள் ஒரு பொருட்டே அல்ல. எவ்வளவு நாளைக்கு முடியுமோ பார்க்கலாமே" என்று தனக்குள் கூறிக்கொண்டாள்.

8

வழக்கத்தைவிட சுசீலா அன்று சுறுசுறுப்புடன் நடனமாடினுள். சுவாமியுடன் அவளும் சாப்பிட உட்கார்ந்துகொண்டாள் சாதம் பரிமாறும் விமலாவைப்பார்த்து "மன்னி, இவ்வளவு வயசாகிறதே இந்த சுவாமிக்கு-சாப்பாட்டில் ருசியே தெரியாது, வெறும பட்த்திலிருக்கிற சுவாமி மாதிரிதான" என்ருள் நகைத்துக்கொண்டே. தன்னவ்வளவு விமலா இதை ஒரு ஹாஸ்யமாக எண்ணிச் சிரிக்கவில்லை என்று அவளுக்குக குறையாகத்தான் இருந்தது

"எனக்கு ருசி தெரியாமல் செய்தது நீதான்" என்று சுசீலாவைக் குற்றம் சாட்டினுன் சுவாமி

"நீயே பார் மன்னி, சுவாமி சொல்வதை! நான் ஒருநாள்கூடச் சமயலறைப் பக்கம் போனதேயில்லை."

"அதனுல்தான் சொல்லுகிறேன் நீ கவனித்திருந்தால் சமையல் அவ்வளவு மோசமாகப் போயிருக்காது" என்ருன் சுவாமி.

மன்னி இதையெல்லாம் காதில் வாங்கிக்கொண்டாளோ இல்லையோ அவளைச் சாக்கிட்டு இருவரும் தம் கவலைகளைக் காட்டாதவாறு மேலும் மேலும் பேசினுர்கள். பேச ஒருவிஷயமும் இல்லாதபோது, "இதோ நான் சாப்பிட்டுவந்து உனக்குப் பரிமாறுகிறேன், மன்னி" என்ருள் சுசீலா.

"எனக்கா?" என்று கேட்டாள் விமலா.

'உம்."

"வேண்டாம்."

சுசீலா வற்புறுத்திக் கூற விரும்பவில்லை அவள் ஏதாவது ஹிதமில்லாமல் கூறினுல் வீண் வம்பு

தானே? சுவாமி இதை மனசில்கொண்டே மாடிக்குச் சென்றதும், 'உன் மன்னி ஒரு முசுடோ?' என்று கேட்டான்.

"உன் மன்னி எப்படியாம்?" என்று அவள் திருப்பிக் கேட்டாள் விளையாட்டாகப் பேச்சைத் திருப்ப.

"எங்க மன்னியைப்பற்றி இங்கே எதுவும்சொல்ல முடியாது. ஏனெனில் கொஞ்சம் நஞ்சம் வருகிற தூக்கம்கூட அப்புறம் அவள் தூங்கமாட்டாள். உண்மையைச் சொல்லு மன்னி, நீ இரண்டு நாளாகத் தூங்கவேயில்லை என்கிறேன் நான்."

"சொன்னால் சொல்லிவிட்டுப் போயேன். நான் என்னவோ நன்றாகத்தான் தூங்கினேன். இப்பொழுது கூடத் தூங்கத்தான் போகிறேன்" என்றாள் சுசீலா.

ஆனால் அவ்வளவுக்கு அவள் கொடுத்துவைக்கவில்லை. கீழே ஹேமு 'ஹோ' என்று கதறி அழுது கொண்டிருந்தாள். அவளைச் சமாதானப்படுத்துகிற சாக்கில் எழுந்து சென்றாள். ஊரிலிருந்ததைவிட இங்கே சுவாமி சிறிது உரிமையுடன் அவளிடம் பேசியது அவளுக்கு எவ்வளவோ ஆறுதலாய் இருந்தது. ஆயினும் தான் இரவெல்லாம் கண் விழித்திருக்க நேர்ந்த விஷயமாய் அவள் யாரிடமும் பேச விரும்பவில்லை. அது அவள் சொந்த விவகாரம். சுவாமிக்குத் தன் நிலைமை வருத்தத்தைக் கொடுத்திருக்கலாம். அதனாலேயே அவள் திடீரென்று புறப்பட்டு வந்ததும், அவனும் இங்கே வந்திருக்கிறான். எப்படியோ தன் மனக் கஷ்டத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் அவள் வெளியிடக்கூடாது. இந்தத் தீர்மானத்துடனேயே அவள் குழந்தை ஹேமுவையும் அழைத்துக்கொண்டு மேலே வந்தாள்.

"நீ இங்கே வருவது அண்ணாவுக்குத் தெரியாது என்றாயே பின்னே எப்படி வந்தாய்?" என்று கேட்டாள்.

"நேற்றிலிருந்து காலேஜுக்கு லீவு விட்டுவிட்டார்கள். ஊருக்குப் போவதாகச் சொன்னேன்."

"உம்..."

"அண்ணா பதிலே சொல்லவில்லை. பணத்தை எடுத்துக் கொடுத்துவிட்டான். போ—வா என்று ஒன்றுமே சொல்லவில்லை."

"அப்போ நீ ரெயிலுக்குக் கிளம்பும்போது அவர் வீட்டில் இல்லையா?"

"இல்லை..."

சுவாமி மேலும் எதையோ சொல்ல விரும்பினான். வார்த்தைகள் தடுமாறின. சுசீலா விடவில்லை.

"எங்கே போயிருந்தார் என்று உனக்குத் தெரியாதா?" என்றாள்.

"தாஸை வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டு வண்டியை எடுத்துக்கொண்டு போனான். நான் வீட்டில்தான் இருந்தேன். கூப்பிட்டதற்கு ஏனென்று போய நான் கேட்கவில்லை. என்ன செய்கிறான் என்று பார்ப்போமே என்றுதான் இருந்தேன்..."

சுசீலா வெறுமே 'ம்' கொட்டிக்கொண்டிருந்தாள்.

சுவாமி மேலும் சொல்லலாமா, வேண்டாமா என்று தயங்கிககொண்டே, "தாஸ் சொன்னபோதே இப்படி ஏதாவது நடந்திருக்கும் என்று எனக்குத் தெரியும். ஆனால் நான்தான் என் கண்ணாலேயே அவளைப் பார்த்தேனே—" என்றான்.

சுசீலா சிறிதும் திடுக்கிடவில்லை. எதைப்பற்றியெல்லாம் கேட்கக்கூடாது என்று அவள் நினைத்தாளோ, எது தன்னைமட்டும் வருத்தும் சொந்த விவகாரம் என்று கருதினாளோ அதைத்தான் சுவாமி சொல்ல வருகிறான் என்பதை அவள் உணர்ந்துகொண்டாள்.

"மன்னி நீ என்னிடம் இனிமேல் மறைக்கமுடியாது. நீ திடீரென்று புறப்பட்டு வந்துவிட்டது எங்களுக்கெல்லாம் எப்படியிருந்தது தெரியுமா?..."

"அது கிடக்கட்டும்; நீ எப்போது அவளைப் பார்த்தாய்?"

"தற்செயலாய் நடந்தது அது, ஸ்டேஷனுக்கு வரும் வழியில் விளக்கை ஏற்றுவதற்காக ரிக்ஷாக்காரன் பார்க அருகில் நிறுத்தினான் எதிர்த்தாற்போல நம் வண்டிமாதிரி இருந்தது. அண்ணா வண்டியோட்டிக்கொண்டு போனான், அவன் பக்கத்து ஸீட்டில்...அண்ணா என்னைப் பார்த்துக்கொண்டேதான் போனான் என்று நினைககிறேன். இதிலிருந்து என்ன நடந்திருக்கும் என்று என்னால் ஊகித்துக் கொள்ளமுடியாதா?...அவளை எனக்கு முன்னமேயே தெரியும். பார்த்திருக்கிறேன், அவ்வளவுதான். தஞ்சாவூரில் நம் தெருவில் கடைசி வீடுதான் அவர்களுக்கு..."

'பெயர் தெரியுமா உனக்கு?" என்று எதையோ ஊர்ஜிதம் செய்துகொள்ள விரும்பினாள் சுசீலா. விருந்தின்போது கண்டவள்தானா அல்லது இவள் வேறு ஒருத்தியா என்று அவர்களுக்குச் சந்தேகம்.

"அவள் பெயரை இரண்டு நாளில் உனக்குச் சொல்லிவிடுகிறேனே? ஊருககு எழுதினால் மறு தபாலில் பதில் வருகிறது!"

"அப்படியானால் நீ எப்பொழுது தஞ்சாவூருக்குப் போகப் போகிறாய்?..."

சுவாமி உண்மையில் இதைவிட்டுப் புறப்படும் எண்ணத்தை மறந்துவிட்டான். அவன் இதுவரையில் சென்னையில் தங்கி ஊரைச் சுற்றிப் பார்த்ததில்லை முன்பு ஒரு சமயம் சுசீலாவே தன் சகோதரனின் வீட்டில் போய் ஒரு மாதம் லீவைக் கழித்துவிட்டு வரும்படி அவனிடம் சொல்லியிருக்கிறாள். அப்பொழுது என்னவோ அவனால் சென்னைக்குவரமுடியவில்லை. இப்பொழுது மன்னியே இருக்கும்போது சென்னையில் தங்குவது எவ்வளவு

நல்லது. போதும் போதாததற்கு அவன் வயசுத் தோழன் வேறு இருக்கிறன்—குமார், ஆனல் சுசீலா இவ்விதம் கேட்டதும் அவனல் உடனே பதில் எதுவும் சொல்லமுடியவில்லை. அதற்குள் சுசீலா தன்னைச் சமாளித்துக்கொண்டாள்.

"நீதான் இந்த ஊரைப் பார்த்ததில்லையே. இரண்டு நாள் தங்கிவிட்டுப் போயேன்" என்ருள்.

தர்ம சங்கடமான நிலைமையில் தானே இருப்பதாகவும் இந்தச் சந்தர்ப்பத்தில் இவனும் இருப்பது சரியல்லவென்றும் அவள் கருதினள். மத்தியானம் மனசில் சுறுசுறுப்பாக நடந்துகொள்ளவேண்டும் என்று நினைத்துக்கொண்டதெல்லாம் பஞ்சாகப் பறந்துபோயிற்று. அவள் சுவாமியிடம் உடனே, "நீ இதையெல்லாம் இங்கே யாரிடமும் சொல்லக் கூடாது. ஊருக்குப் போனல்கூட அங்கேயும் சொல்வது நன்ருக இருக்காது, என்ன ?" என்றுகேட்டாள்.

அவள் சொல்வதை ஆமோதித்து நடப்பவன் போல சுவாமி தலையை ஆட்டினன். சாயங்காலம் குமார் ஆபீசிலிருந்து வந்ததும் சுவாமியும் அவனும் வெளியில் சுற்றிவரப் புறப்பட்டார்கள். அவர்கள் இருவருக்கும் நெடுநாளாகக் கடிதப் போக்கு வரத்து உண்டென்பது அவளுக்குத் தெரியும். கிரிக்கெட் மாட்சுகளைப்பற்றியும் அவ்வப்போது நடைபெறும் சினிமாக் காட்சிகளைப்பற்றியும் விமர்சனம் செய்து எழுதுவதில் ஒருவருக்கொருவர் சளையில்லை. இப்பொழுது அவர்கள் நேரில் சந்தித்ததும் அவர்களுடைய உத்ஸாகம் கரைகடந்து போயிற்று சுசீலா தன்னையும் மறந்து வெளியில் புறப்பட்டுக்கொண்டிருக்கும் சுவாமியைப் பார்த்து, "மத்தியானம் நான் சொன்னது நினைவிலிருக்கட்டும், சுவாமி" என்ருள்.

"என்ன சுசீ !" என்று கேட்டான் குமார்.

ஒருகால் அவன் மறந்தாலும் தானவது மறக்காமல் ஞாபகமூட்டலாமே !

சுவாமி அவள் சொன்னதைப் புரிந்துகொண்டுவிட்டான். ஆனல் சுசீலா குமாருக்கு எதையாவது சொல்லியாகவேண்டுமே! "அதில்லேடா-மத்தியானமெல்லாம் ஹேமு அழுதது நல்ல ரப்பர் குதிரை ஒன்று வாங்கிவரச் சொன்னேன் பெங்களூரிலிருந்து வந்தானே, குழந்தைக்கு எதையாவது வாங்கிக் கொண்டுவந்திருக்கக்கூடாது! அவசரத்தில் ரெயிலுக்கு ஓடிவந்திருக்கிறன்" என்ருள்.

அவர்கள் வெளியில் போனபின்னர் தன்னுடைய பொய்யான வாழ்க்கை இன்றுமுதல் ஆரம்பித்துவிட்டதாக உணர்ந்து சுசீலா தன்னையே நொந்துகொண்டாள். இனனும் என்னவெல்லாம் நேருமோ எதையெல்லாம் சொல்லி சமாளிக்கவேண்டிவருமோ என்பதை எண்ணியபோது அவள் நடு நடுங்கினள். தன்னுடைய சுயமதிப்பும் கண்ணியமான சுபாவமும் கண்ணுக்கே தெரியாதபடி மாறி தன்னை ஒரு சிறுமை உணர்ச்சி விழுங்கி வருவதுபோல உணர்ந்தாள். அதன் காரணமாகவே கிருஷ்ணன் வீட்டுக்கு வந்ததும் அவனிடம் அவள் முகம் கொடுத்துப் பேசவில்லை.

"இப்பொழுது சுவாமிக்கு லீவா, சுசீ ?" என்று அவனே வலிய வந்து அவளைக் கேட்டான்.

"ஆமாம்; ஊருக்குப் போகப்போகிருன். அநேகமாய் நாளைக்கே போனலும் போய்விடுவான்" என்று கூறிவிட்டு மாடிக்குச் சென்ருள்.

எதை அவன் கேட்கவில்லையோ, எதற்குப் பதில் தேவையில்லையோ அதை ஏன்தான் கூறிேமென்று அவளுக்கே லஜ்ஜையாக இருந்தது. இரண்டு நாள இருந்துவிட்டுப் போகும்படி சுவாமிக்கு உபசாரப் பத்திரம் வாசித்துககொடுத்துவிட்டு நாளைக்கே போய்விடுவான் என்று அண்ணவிடம் அவள் எப்படி, எதற்காகக் கூறினள் ?

"சே, எனக்கு மூளையேகுழம்பிப்போய் இருக்கிறது" என்று மெத்தைப் பிடியை உறுதியாகப் பிடித்துக்கொண்டு தெருவில் போவார் வருவோரைப் பார்ககலானள். அந்தஸ்து வாய்ந்த அழகுடன் அவள் மெத்தைப் பிடியைப் பிடித்துக்கொண்டு நின்றது தெருவில் உள்ளவர்களுக்கு ஒரு காட்சியாக இருந்தது எதிர் வீடுகளில் உள்ளவர்கள் அவளை அடிக்கடி கவனித்துவிட்டு உள்ளே சென்றர்கள். அவள் யாரென்று அவர்களிலே பலருக்குத்தெரியும் கம்பீரமும் கவர்ச்சியும் பொருந்திய சுசீலாவின் உள்ளத்திலே கனிந்துகொண்டிருந்த அக்கினியை அவர்கள் எங்கே தெரிந்துகொண்டார்கள்?

தெருவில் பிள்ளைகளின் விளையாட்டும் கூச்சலும் மும்முரமாய் இருந்தன. சுசீலா கீழே பார்த்தபோது ஹேமுவும் ஓர் ஓரத்தில் வாயில் விரலை வைத்தபடி நின்றுகொண்டு வேடிக்கை பார்ப்பதைக் கண்டாள். இவள் பாவம் பயந்த சுபாவம் அண்ணு-மன்னியைப் போல!

இருந்தாற்போலிருந்து பையன்களுக்கிடையில் புகுந்து ஹேமு எதிர் வீட்டை நோக்கி ஓடுவதைக் கண்டதும் அவள் பார்வை பின்னே சென்றது. எதிர் வீட்டிலிருந்து பதினறு பதினேழு வயது மதிக்கத்தக்க பெண் ஒருத்தியிடம் ஹேமு தாவிக்கொண்டு சென்றதைச் சுசீலா கண்டாள். சுசீலா பார்த்தபோது அந்தப்பெண்ணும் தலை நிமிர்ந்து மாடியைப் பார்த்தாள் இப்படி எதிர் வீட்டில் ஒரு பெண் இருப்பது தனக்குத் தெரியாமல் போயிற்றே என்று தான் உடனேயே சுசீலாவுக்குத் தோன்றியது. அடுத்த விநாடி அந்தப் பெண் ஹேமாவிடம் எதையோ சொல்லிவிட்டு உள்ளே மறைந்து போனள். அந்த ஹேமாவோ நேரே வீட்டுக்கு வராமல் விளையாட்டு ஞாபகமாக வேடிக்கை பார்த்துக்கொண்டே நின்றுவிட்டாள். அவள் வீட்டுக்குள் வருவதற்குள், பொழுது நன்ருக அஸ்தமித்துவிட்டது சுசீலா வேறு ஞாபகத்தில் அந்தப் பெண்ணை அடியோடு மறந்து போனள்.

(தொடரும்)



மெய்விளங்கிய அன்பர்கள்

பெரியபுராணப் பூஞ்சோலையில்

பி.ஸ்ரீ.

பக்தர்களுக்கும் ஹாஸ்யரஸம் உண்டு. ஒரு திருடன் தொண்டர்-கோலம் போட்டுக்கொண்டானும். எல்லாரும் 'சுவாமி, சுவாமி' என்று கும்பிடுபோட்டார்கள். 'வேஷத்திற்கே இவ்வளவு மதிப்பு என்றால் உண்மைத் தொண்டனாகி விட்டால் எப்படியோ?' என்று ஆலோசித்துத் திருந்திவிட்டான் என்ற கதை எல்லாரும் அறிந்ததே. நம்ம தமிழகத்திலே இரண்டு பழைய தொண்டர்கள் தாங்களும் ஒருசமயம் தொண்டர்—வேஷம் பூண்டிருந்ததாகவும், 'ஆனால் தெய்வக்கள்வன் உள்ளத்திலே ஒளிந்திருந்து கண்டு கொள்வானே' என்று வெட்கிச் சிரித்துத் திருந்திவிட்டதாகவும் சுய சரிதக் குறிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். தங்கள் பாடல்களில். இவர்களில் ஒருவர் திருமாலின் அடியாரான தொண்டரடிப் பொடியாழ்வார் மற்றவர் சிவநேசச் செல்வரான திருநாவுக்கரசர். வேஷதாரிகள், சமய உலகின் ஆஷாடபூதிகள் தங்கள் நிலையை உள்ளபடி உணர்ந்து வெட்கிச் சிரிக்கவில்லையென்றால். உள்ளத்திலிருக்கும் ஈசன் இவர்களைக்குறித்து வெட்கமடைந்து சிரிக்கிறான் என்பர் திருநாவுக்கரசர்.

பக்திப் பிரபஞ்சத்திலே இத்தகைய நகைச் சுவையைக் கண்டு அனுபவித்த கோபாலகிருஷ்ண பாரதியார், தமது நந்தனார் சரித்திரத்திலும் பக்திச் சுவைக்குச் சிறிதும் குறைவின்றி நகைச் சுவைக்கும் இடமளிக்க விரும்பினார். புலைபபாடி வருணனையே சேரிவாசிகளின் பரிதாப நிலையை நகைச்சுவையுடன் படம் பிடித்துக் காட்டுகிறது. சிதம்பரம் போகவேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்த நந்தனாரை நோக்கிச் சேரித் தோழர்கள்;

40

நந்தனாரும் நகைச்சுவையும்

★

அண்ணே நீ போகாதே—நமக்(கு)
ஆண்டைபொல் லாதவன் வேண்
டிக்கொள்ளான்;
பாப்பாரச் சாதியுண்டே—என்ன
பாடுபடும் முழுக்காடுமங்கே
நமக்கும் திருநாளோ—அந்த
ஞாயம் உண்டோ? என்ன மாயம்
இது!

என்று தடுத்துவிட்டார்களாம். அதிகாலையில் குளிர்ந்த நீரில் கஷ்டப்பட்டு முழுகி முழுகி எழுந்திருக்கும் சாதியென்று திரிகாலஸ்நானம் செய்யும் வைதிக கோஷ்டியைச் சுட்டிக் காட்டுவது எவ்வளவு ஹாஸ்யமாயிருக்கிறது!

குட்டையைக் குளமாக வெட்டுவதற்காக நந்தனாருக்கு உதவிசெய்ய வந்த விநாயகரும் விகட விநாயகராகி உரையாடுவதைக்காண்கிறோம்.

சிதம்பரப்பித்தம் பிறந்ததும், அத்தகைய பக்திப் பைத்தியத்தையும் சேரித் தோழர்களோடு பங்கு போட்டுக்கொள்ள விரும்புகிறார் நந்தனார். அப்போது அவர்களுக்கிடையே நடக்கும் வாக்கு வாதத்தைத்தான் எவ்வளவு சுவாரசியமாக நடத்திக் காட்டுகிறார் கோபாலகிருஷ்ண பாரதியார்!

நந்தனார்:— தில்லையம்பலமென்று சொல்லச் சொன்னார்.

சேரி வாசிகள் :—கள்ளப்பேச் சென்று மெள்ளச் சொன்னார்.

நந்தனார்:—சேரியில் நல்ல காரியம் இதென்றார்.

சேரி வாசிகள்:-ஏரியில் நல்ல மாரி இதென்றார்.

நந்தனார்:—விட்ட நாள் நினையாமல் எட்டுநாள் மறவாமல். நிஷ்டை பண்ணாத சென்மம் நஷ்டமென்றார்.

சேரிவாசிகள்:—விட்ட விரை முளையாமல் நட்ட பயிர் விளையாமல் கெட்டதானால் கிராமம் நஷ்டமென்றார்.

நந்தனார்:—உங்கள் புலைத்தன்மை போகும் என்றார்.

சேரி வாசிகள்:—எங்களைக் கெடுத்தாயே பாவி என்றார்.

நந்தனார்: தேவாதி தேவனைத் தெரிசிப்பீர் என்றார்.

சேரிவாசிகள்: பாவாடை ராயனைப் பாவிப்பாயென்றார்.

நந்தனார் அனைத்தாலும் ஈசனுக்(கு) அன்பு செய்யென்றார்.

சேரிவாசிகள்:இனத்தாரை நொந்தவர்க்(கு) இன்பமேதென்றார்.

இவ்விதமாக வளர்ந்துகொண்டே போகும் வாக்குவாதத்தில் எவ்வளவு ஹாஸ்யம் பாருங்கள்!

நந்தனார் தமது கொள்கையை ஒரு சூத்திரமாக்கி, படிப்பது ஞானம், பார்ப்பதுமூலம் என்கிறார். சேரித் தோழர்கள் குறளுக்குக் கிறள்' பாடுவதுபோல்'

பிடிப்பது நண்டு, புசிப்ப(து)
[இறைச்சி
குடிப்பது கள்ளு—குலசம்
[பிரதாயம்

என்று ஏறுமாறாகப் பதில் சொல்லுகிறார்கள். அவர்கள் நிலை எப்படி இவர் பரிதாபத்திற்கு உரியதோ, அப்படியே இவர் நிலையும் அவர்கள் பரிதாபத்திற்கும் —பரிகாசத்திற்கும் கூட உரியதாகத் தோன்றுகிறது.

பெரிய கிழவன்

சேரியிலுள்ள பெரிய கிழவன் நந்தனுருக்குப் புத்தி சொல்லும் காட்சியைத்தான் பாருங்கள் உடல் தளர்ந்து பல் உதிர்ந்து தோல் சுருங்கி. நரம்பு தெரிந்து முதுகு சரிந்து முழுதும் வளைத்துகோலூன்றிக் கூனிக் குறுகிக் கோணலாய் வந்தவன், நந்தனுரை ஒன்றும் தெரியாத கன்ருக மதித்து.

ஞாயம்தானே நீர் சொல்லும்?-
[ஓய் நந்தனுரே!
நம்ம சாதிக்கடுக்குமோ ?

என்று நியாயம் பேசத்தொடங்குவதை அறியாதார் யார்?

சேரிப்பெருங்கிழவனின் இந்தப் பேச்சை ஒட்டிப் பாரதியார் நிதானப் பெருங்கிழவனுரான ஸர் பிரோஸ்ஷா மேத்தா திலகருக்குச் சொல்லியதாக அரசியல் பாடல் அமைத்திருப்பதைத்தான் அறியாதார் யார்?

நந்தனுரை நோக்கிச் சேரிக்கிழவன், 'பூமி தரிசனமே போதும் நந்தா! சாமி தரிசனம் நமக்குண்டோ? உழைப்பது: குடக்கள்ளை உள்ளே தள்ளிக் களிப்பது; ஆண்டைமார் இடும் பணிகள் செய்வது. எட்டி நின்று கும்பிடுவது முதலான தொழில்கள் அல்லவோ நமது சாதி தருமம்?' என்றதும் நந்தனுர் திடீரென்று,

மீசை நரைத்துப் போச்சே—கிழவா!
ஆசை நரைக்க லாச்சோ?

என்று கேட்கிருர் கிழவன் திருதிருவென்று விழிக்கும்போதே நந்தனுர் அன்போடும் அருளோடும் தொடர்ந்து,

கூனிக் குறுகிப் போச்சே!—கிழவா!
கோபம் விலகிப்போச்சோ?
பாசம் வருவதாச்சே!—கிழவா!
பாவம் விலகிப் போச்சோ?
அங்கம் தளர்ந்து போச்சே!-கிழவா!
ஆங்காரமும் போச்சோ?
மானிட ஜன்மமடா, கிழவா!
மாண்டால் வருமோடா?

என்று கேட்டுக் கிழவனைத் தழுவிக்கொண்டு 'அம்பலத்தரசே நம்மை ஆளும் தெய்வம்' என்று உபதேசித்துத் திருநீறு பூசுகிருர். உடனே கிழவன் பக்தி பரவசனுகிருன் 'இன்றைக்குத்தான் பெரிய கிழவன் ஆனேன்!' என்று தனக்குள்தானே சொல்லிக்கொள்கிருன். 'நந்தா! என் பந்தம் தீர்க்க வந்தாய்!' என்று குதூகலம் அடைகிருன். 'கலிதீர்ந்தேன்' அமுதம் உண்டேன்!' என்று குதித்துக் குதித்துக் கூனிக் குறுகிக் கோணிக்கோணி நடந்து வருகிருன் நந்தனுரைப் பிடித்த பைத்தியம் சாகும் காலத்தில் தொண்டு கிழவனையும் தொத்திக்கொண்டது என்று சேரி துயரத்தில் மூழ்கிப்போகிறது. இப்படிப்பட்ட பைத்தியம் தெளிய வேணுமென்று பூசைபோடும் காட்சிதான் எவ்வளவு விநோதமாகவும் பொருள் பொதிந்த ஹாஸ்ய ரஸத்துடனும் சித்திரிக்கப்பெறுகின்றது!

சந்திக்குச் சந்தி கூத்தாட லாச்சு;
சாமியும் இல்லாமல் எங்கேயோ
போச்சு.

என்று நந்தனுருடைய பக்தியைக் குறித்துப் பேசுவதிலேயே எவ்வளவு லேசாக ஹாஸ்யரஸம் வந்து விடுகிறது!

எனினும் மாரியாத்தாளுக்கு மதிப்பும் மன்னுரச் சாமிக்கு மகிமையும் இல்லாமல் போய்விடுமா? வழக்கம் போல பந்தலிட்டுக் கள்ளுக்குடம் வைத்து, பறை, பம்பை கொம்பு தம்பட்டங்களை அடித்து முழக்கினுல் சாமியும் சந்நதமும் எப்படியாவது வந்துவிடும் என்பது சேரிவாசிகளின் நம்பிக்கை. பலியிட்டு வேண்டினுல் சேரிக்கு நல்லகாலம் பிறக்குமென்றும், சிதம்பரப்பித்து நந்தனுருக்குத் தெளிந்துவிடும் என்றும் பூசாரி சொலகிருன்.

சேரித்தெய்வங்களின் பெயர்கள் கூட நகைச்சுவையில் தோய்ந்து வருகின்றன. இத்திருநாமங்களை ஒரு மாலையாகக் கோத்து மந்திரம் போல உச்சரித்து நீட்டி முழக்கிப் பாடுமாறு ஆசிரியர் அமைத்திருக்கும் அழகைத்தான் பாருங்கள்.

"வீரன் இருளன் காட்டேறி
வெறியன் நொண்டி சாமுண்டி
தூறித் தூண்டி நல்லண்ணன்
தொட்டியச் சின்னுன் பெத்தண்
[ணன்
மாறு முனியன் சங்கிலியான்
மாடன் கறுப்பன் பாவாடை
மூரிக் காத்தான் குழியிரிசி
மோகினி சத்த கன்னிகைமார்
சேரி மன்னுரன் முன்னடியான்
சிறுகாட்டுடையன் பனைமரத்தான்
மாரி யாண்டி வழிமறிச்சான்
மலையன் சாத்தான் பக்கிரியான்
ஏரி யாண்டி சிலம் பாயி
எல்லைப் பிடாரி பெத்தாச்சி
சீறு மூர்க்கன் ஊமைச்சி
...............................'

தெய்வங்களிலும் வீரன் இருக்கிருன்; கோழை இருக்கிருன் தூண்டில் போட்டு மீன் பிடிக்கும் தூண்டி வீரப்பன் இருக்கிருன். சாதுக்களான நல்லண்ணன், பெத்தண்ணன் இருக்கிருர்கள்; நல்ல பாம்பு போலச் சீறும் மூர்க்கனும் இருக்கிருன் தடித்துக் கொழுத்த மாடனும் தாடி மீசையுள்ள முனியனும் இருக்கிருர்கள் கிழவர் மீதும் தடித்திருப்பவர்கள் மீதும் ஆவேசிப்பதற்காக. இருள்போல் கறுத்த இருளன், கறுப்பன் இருக்கிருர்கள். இன்னும் நெடிய வடிவம் வாய்ந்த 'உயர் திருவாளர்' மீது ஆவேசிக்கப் பனைமரத்தான் உண்டு; இரவில் வழிப்போக்கர்களை மறித்துப் பயமுறுத்த வழிமறிச்சான் உண்டு. சங்கிலியை மேலே போட்டுக்கொண்டு ஆடும் சங்கிலியான் உண்டு நொண்டி நொண்டி நடக்கும் நொண்டி உண்டு. வெறிக்கக் குடிக்கும் வெறியன் உண்டு. பக்கிரி உண்டு. ஜமீன்தார் உண்டு பிடாரி, சாமுண்டி, சக்கம்மா, சிலம்பாயி. பெத்தாச்சி, ஊமைச்சி முதலிய பெண் தெய்வங்களும் உண்டு இப்படியே மலையன், காட்டேறி, தொட்டியச் சின்னுன். காத்தான் முதலான தெய்வங்களும் உண்டு—பாத்திரம் அறிந்து ஆவேசித்து வருவதற்கும், பயமுறுத்திப் பலி கேட்பதற்கும் கள்ளுண்டு கொக்கரித்துக் கூத்தாடுவதற்கும்!

இத்தெய்வங்களின் திருக்கூட்டத்திலே ஸம்ஸ்கிருதத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மோகினி ஸப்தகன்னிகைகள் முதலிய தேவதைகளும் எப்படியோ இசைந்தும் சிதைந்தும் இருக்கக் காணலாம். ரிஷி ஒருவரை இரிசிராக்கிக் குழியில் வைத்துக் குழி இரிசி என்று வழிபடுகிருர்கள். இத்தனை தெய்வங்களும் போதாவென்றுல், புதிய புதிய தெய்வங்களைப் படைத்துவிடும் ஆற்றலுள்ள மூட நம்பிக்கைதான் இருக்கிறதே!

இப்படியெல்லாம் இருக்கும் போது, சேரியில் பக்திவெள்ளம் இல்லையென்று சொல்ல முடியுமா? ஆனுல் இங்கும் 'மட்டை ஊறும் குட்டை'யைக் குளமாக வெட்ட வேணும் என்றுதான் நந்தனுர் பிரயாசைபபட்டாரென்பது 'கீர்த்தனை' ஆசிரியர் கவியுள்ளம்.

தேர்த்தட்டு வார்த்தை

வாரன்

வேதத்தின் உண்மை இயல்பு தெரியாதவர்களுக்கு அதன் எல்லாப்பகுதிகளும் பிரதானம் போலவே படும். விவேகத்தைக் கொண்டு ஊன்றிக் கவனிப்போருக்கு அதில் அடங்கிய சாரப்பொருள் விளங்கும். ஸாரப் பொருளை உணர்ந்து பரந்த வேதத்தை நோக்கும்பொழுது கொள்ளவேண்டியதும் விலக்கவேண்டியதும் நன்கு தெரியவரும். பல்வேறு காண்டங்களில் வரும் வாக்கியங்கள் ஒன்றிற்கொன்று முரணாகத்தோற்றினாலும் அவை அவ்வாறு இருக்கவேண்டியதின் அவசியத்தை நன்கு உணர்ந்து அவை யாவற்றிற்கும் சேர அர்த்தம் செய்துகொள்வது மகா விவேகிகளுக்கே சாத்யமாகும். சாமானியர் வேதத்தை விபரீதமாகவும் கிரகிப்பர் தமது அற்ப மதியைக்கொண்டு முழுதும் கிரகிக்க மாட்டாமல் ஒரு சில பகுதிகளை மாத்திரம் பார்த்து 'முன்னுக்குப் பின் முரண்' என்று சொல்லி 'வேதத்தையே பிரமாணம் இல்லை என்று விலக்கவும் செய்வர் தமது யுக்திக்குப் பொருந்தவில்லையாதலால் கொள்ளத்தக்க பிரமாணம் இல்லை என்று நிந்திக்கவும் செய்வர் வேதமோ கண்ணுக்கெட்டாத கடல் போல பரந்தாயிருக்கிறது அர்ஜுனா! நான் சொல்லுகிற சாராத்தங்களாகிற கர்மயோகம் ஞான யோகம் இவற்றைத் தெரிவிக்க வேதம் காண்டம், சாகை, ஸம்ஹிதை உபநிஷத்து, மந்த்ரம் என்று வரும் பல உட்பிரிவுகளோடு கூடியதாய் இவ்வளவு விரிவாய் ஏன் இருக்கவேண்டும்? சில வார்த்தைகளில் மட்டும் ஏன் சுருக்கமாய் இருக்கக் கூடாதா? பலனைச்சொல்லி ஒரு பகுதி கர்மாவை விதிப்பானேன்? மற்றொன்று 'பலனில் ஆசையை விட்டுக் கருமத்தைச் செய்' என்று சொல்லுவானேன்? என்று நீ ஆலோசிக்கலாம்! அதன் காரணத்தைக்கேள்' என்று கண்ணன் கூறலானார்.

15

தாகம் தீரத்தடாக நீர் முழுதும் வேண்டுமா?

★

முக்குணத்தோர் பண்புரைக்கு
மூண்டுமறை நீமன்னா
அக்குணத்து மன்னேல்
அவா நெஞ்சாய்-இக்குணத்தால்
சாருதுயர் அற்று என்றும்
சத்துவத்தின் அப்புறத்தில்
ஆருமியோ கக்கேம மற்று.

(இ-ள்) மறை-வேதம். முக்குணத்தோர் பண்பு-சத்துவம், ராஜஸம், தாமஸம் ஆகிய மூன்று குணங்களுக்கு வசமானவர்களின் தன்மைக்கேற்ப, மூண்டு உரைக்கும்-எடுத்துப் பேசும். மன்னா! - தலைவனே (அர்ஜுனா) நீ-, அவா நெஞ்சாய்-பற்று இல்லாத மனம் உடையவனாய் இக்குணத்தால் சாரு துயர்அற்று-இம் முக்குணங்கள் காரணமாக வரும் துன்பம் இல்லாதவனாய். என்றும் சத்துவத்தின் அபபுறத்தில் ஆரும்—எப்பொழுதும் சத்துவகுணத்தில் நிலைத்து இ. யோகம் க்ஷேமம் அற்று- இந்த யோக க்ஷேமங்கள் இல்லாதவனாய், அ குணத்து மன்னேல்—அம் முக்குணங்களில் பொருந்தாதே

த்ரைகு[3]ண்ய விஷயா வேதா[3]
நிஸ்த்ரைகு[3]ண்யோ ப[4]வார்ஜுந
நிர்த்[3]வந்த்[3]வோ நித்ய ஸத்வஸ்தோ[2]
நிர்யோக க்ஷேம ஆத்மவாந்

(இ-ள்) வேதா:—வேதங்கள். த்ரைகுண்ய விஷயா:-மூன்று குணங்களின் விஷயமானவை. அர்ஜுந—, த்வம்—நீ நிஸ்த்ரை குண்ய: பவ—முக்குணங்கள் இல்லாதவனாய் ஆகு, நிர்த்வந்த்வ:—தொடர்பற்றவனாய் (ஆகு) நித்ய ஸத்வஸ்த:—எப்பொழுதும் ஸத்துவ குணத்தில் பொருந்தி, நிர்யோக க்ஷேம:—யோக க்ஷேமங்களற்று ஆத்மவாந் (பவ) ஊக்கம் உடையவனாக ஆகு

ஜீவாத்மாக்கள் யாவரும் வேதத்தால் நன்மை அடைந்து உய்ய உரிமை படைத்தவர்கள் குணத்தால் அவர்கள் ஒரே விதமாயில்லை. பலவகையாய்ப் பல்வேறு விருப்பங்களோடு இருப்பதால் அவர்கள் எல்லோருடைய நன்மையையும் வேதம் நாடவேண்டியிருக்கிறது அதனால் வேதம் சொல்லும் விஷயமும் பலவகையாக வேறுபட்டு விரிவாய் இருக்க வேண்டியது அவசியமாகிறது ஒரு வகுப்பில் வேறுபட்ட பலரகமான மூளையும் விருப்பங்களும் உடைய மாணவர்கள் நாற்பது பேர் இருந்தால் அவர்கள் யாவரும் அந்த வகுப்பிற்குரிய பாடத் திட்டப்படி அறிய வேண்டியவற்றை அறிந்துதான் ஆகவேண்டும் ஒரு ஆசிரியன் அவர்கள் எல்லோருக்கும் ஒரேவிதமான போதனா முறையைக் கையாண்டால் நோக்கம் நிறைவேறுமா? நிறைவேற்ற எண்ணமுடைய ஒரு உத்தம ஆசிரியன் பல்வேறு முறைகளைக் கையாள்கிறான் மூளையும் அதனால் கிரகிக்கும் சக்தியும் அதிகம் படைத்த மாணவனுக்குக் குறைந்த வார்த்தைகளைக் கொண்டு மிகக் குறைந்த நேரத்தில் விளக்குவிக்கும் ஒரு முறையும், குறைந்த மூளையும் அதனால் கிரகிக்கும் சக்திக்குறைவும் உடைய மாணவனுக்கு மிகுந்த வார்த்தைகளைக் கொண்டு உவமை உதாரணம் விளக்கக் கதை முதலியவைகளால் நீண்ட நேரத்தில் விளக்குவிக்கும் வேறு முறையும் என்று பலவிதமாகக் கையாள்கிறான்.

வேதத்தை மாணவர் முன்னேற்றத்திலே ஊக்கமும் உற்சாகமும் கொண்ட உத்தம ஆசிரியனாகச் சொல்லலாம் தான்பெற்ற குழந்தைகளிடத்தில் அன்பும் கருணையும் கொண்ட தாயாகவும் சொல்லலாம் தான் பெற்ற தனயன் தீயவழிச்செல்வதைச் சகிக்க மாட்டாமல் அதற்காகத் தண்டனை தரும் தந்தையாகவும் சொல்லலாம். வேதத்தால் நன்மை அடையவேண்

டியவர்களிலே பலர் தாமஸகுணம் மிகுந்து மந்த மதிகளாயிருக்கின்றனர் ஊனையும் போகத்தையுமே பிரதான பலன்களாக் மதிக்கின்றனர். சிலர் ராஜஸகுண மிகுதியால் பொருள், பதவி இவற்றில் ஆசை கொண்டு கருமத்தில் முயற்சியுடையவர்களாய் சித்த சமாதானமின்றி இருக்கின்றனர். அகங்கார மிகுதியால் இவர்களுக்குப் பொருளாலும் பதவியாலும் வரும்போகமே சிறந்த பலனாகத் தோற்றுகிறது

வேதம் இவர்களையும் நல்வழிக்கு இழுக்கப் பார்க்கிறது. பிரதான பலமாகிற பந்த நிவர்த்தியில் நாளடைவிலேயாவது இச்சையைப் பிறப்பிக்கவேண்டும் என்ற நோக்குடன் அவர்கள் செல்லும் வழியில் தானும் சென்று அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளுதற்குரிய மந்திரங்களையும் கர்மாக்களையும் சொல்லுகிறது. ஒருவன் தனது இஷ்ட சித்திக்குத் தடை செய்ய வரும் விரோதிகளை அழிப்பதற்கான மந்திரம், சேனயாகம் முதலிய கர்மாக்களையும் சொல்லுகிறது பிறரைக் கெடுப்பதற்கான செய்வினை, ஏவல் ஆகிய தீய மாந்த்ரீக கர்மாக்களும் அவற்றிற்குரிய மந்திரங்களும், ஆயுதங்கள் கொடிய மருந்துகள் ஆக்கும் முறைகளும் வேதத்தாற் சொல்லப்படுகின்றன. அதனால் அவர்களுக்கும் வேதத்தில் ஒரு நம்பிக்கை. மேலும் இதில் என்ன அடங்கியிருக்கிறது பார்க்கலாம் என்ற ஆவல் எப்பொழுதாவது ஏற்படலாம். ஏற்பட்டுப் பார்க்கும் போது அழியாத 'பேரின்பம்' ஒன்று உண்டு என்ற உணர்வு பெற்று அதைப் பெறுவதற்கான முயற்சியையும் மேற்கொள்ளலாம் என்று கருதியே வேதம் எல்லோர் நலத்திற்காகவும் வேண்டி விரிவாக அமைந்திருக்கிறது 'குழந்தையின் நோய்க்கு மருந்தே பரிகாரம்' என்றறியும் தாய் கசப்பின் காரணமாகக் குழந்தை உடகொள்ள மறுக்கும் என்பதை உணர்ந்து மருந்தைச் சர்க்கரையில் மறைத்துக் கொடுக்கிறாள் அல்லவா? அது போலவே வேதமும், தமக்கு நிலையான நன்மை 'இன்னது' என்று உணர்ந்து கொள்ளமாட்டாமல் விபரீத ஞானத்தால் கெட்ட லைவோர்களையும் உய்விக்கவேண்டி மருந்து போல் சாரமான தர்மத்தை சர்க்கரைப்போல் மனதைக் கவரும் காமிய கருமங்களோடு சேர்த்துச் சொல்லுகிறது

அர்ஜுனா! முக்குணங்களில் இழிவான ராஜஸமும், தாமஸமும் இன்றிச்சுத்த சத்துவகுணமுடையவனாக நீ ஆகவேண்டும் ஆனால் ஆசையற்றவனாய் அவ்வாறானவனுக்கு வேதத்தில் கொள்ளவேண்டிய பகுதி எவ்வளவு? என்று கண்ணன் மேலும் கூறுவது

எங்கு நிறைநீர்
எழில்தடத்து யாவர்க்கும்
இங்கு மருவுபயன்
எவ்வள்வாம்— அங்கனைத்து
வேதத்தும் அந்தணற்கு
வேண்டுபயன் அவ்வளவாம்
போதத்துக்கு ஈடாப் புணர்ந்து

(இ-ள்) எங்கு நிறை நீர்—நாலா பக்கங்களிலும் நிறைந்த நீரையுடைய, எழில்தடத்து இங்கு—அழகிய தடாகத்தில் மருவு பயன் எவ்வளவாம்—தாகம் தீரவோ நீராடவோ பெற வேண்டிய அளவு எவ்வளவோ, அங்கு அனைத்து—அங்கு போலவே. வேதத்தும்—வேதத்திலேயும் போதத்துக்கு ஈடா புணர்ந்து—ஞானத்துக்குத் தகுதியாகப் பெற்று, அந்தணற்கு வேண்டு பயன்—பிரும்ம ஞானிக்கு அடைய வேண்டிய பிரயோசனம், அவ்வளவாம்—அந்த அளவிலேதான்.

2 3
யாவாநர்த உதபாநே
3
ஸர்வதஸ்ஸம்ப்லுதோதகே
3
தாவாந் ஸர்வேஷு வேதேஷு
3
ப்ராஹ்மணஸ்ய விஜாநத:

(இ-ள்) ஸர்வத:—முழுதும் ஸம்ப்லுதோதகே—நிறைந்த நீருடைய, உவபாநே—கிணற்று நீரில், யாவாநர்த்த;—(தாகம் எடுத்தவனுக்கு)எவ்வளவு பிரயோசனமோ (அவ்வளவே). ஸர்வேஷு வேதேஷு—எல்லா வேதங்களிலும், விஜாநத:—(மோக்ஷ ஆசையுடைய) ஞானியான, ப்ராம்மணஸ்ய—பிரும்ம ஞான நிஷ்டனுக்கு. (பிரதி உண்டாகிறது.)

தாகவிடாய் கொண்டு நீர் தேடி அலையும் ஒருவன் எல்லாப் பக்கங்களிலும் நீர் நிறைந்த தடாகத்தைக் காண்கிறான். நீர்ப் பெருக்கைக் கண்டு இவ்வளவு நீரையும் எப்படிக் குடிப்பது? அது முடியாத காரியம் ஆயிற்றே. என்ன செய்யலாம்? என்று கவலை கொள்வது போலவே இருக்கிறது ஒருவன் வேதத்தின் பரப்பைக் கண்டு ஏங்குவது. தாகம் தீர எவ்வளவு நீர் வேண்டும்? அந்த அளவு தடாகத்தில் இருப்பதைக் கண்டு மகிழ்ந்து தனக்கு வேண்டியதைப் பருகித் தாகம் தீர்ந்துபோக வேண்டியதுதானே. தடாக நீர் முழுதும் அவனுக்கு வேண்டுமா? பிறருக்காகவும் அது உபயோகமாயிருக்கிறது என்பதை மறந்து அவன் ஏன் கவலை கொள்ள வேண்டும்?

அதுபோலவேமோக்ஷத்தில்இச்சையுடைய ஞானியும் பல்வேறு குணங்களையுடைய அதிகாரிகளின் இச்சைகளுக்கு ஏற்றபடி உபயோகமாகும் பொருட்டு வேதம் விரிவாக விருக்கிறது. 'பந்த நிவர்த்திக்குரிய ஸாரமான தர்மத்தை நாம் கொள்வோம் என்று அப்பகுதியையே கிரகித்துக் கவலை கொள்ளாது தான் பெறவேண்டிய பலனைப் பெற்று மகிழ்வான்

இச்சுலோகத்திற்கு இக்கருத்திற்குச் சேர மற்றொருவகையாகப் பொருள்செய்துகொள்வதும் உண்டு. ஒரேதன்மையான நீர் கிணற்றிலும் இருக்கிறது—தடாகத்திலும் இருக்கிறது நதியிலும் இருக்கிறது. ஸ்நானத்திற்கு உபயோகமான நீர் பரந்த கடலிலும் இருக்கிறது. ஸ்நானபானத்திற்கு, கொஞ்சம் நீருள்ள கிணற்றில் எவ்வளவு பயன் உள்ளதோ அவ்வளவுதான் நாலா பக்கங்களிலிருந்தும் வந்து சேருகின்ற அதிக நீருள்ள தடாகத்தாலும் அவ்வாறே நதியாலும், கடலாலும்.

நீர் கிணற்றிலும் ஆற்றிலும் தடாகத்திலும் கடலிலும் இருப்பதுபோல வேத ஸாரம் கர்ம காண்டத்திலும் உபநிஷத்ரூபமான ஞான காண்டத்திலும் இருக்கிறது. முடிவான சாரார்த்த ரூபமான தர்மத்தைப் பற்ற வேண்டியதே ஞானியின் கடமையாதலின் அவனுக்கு வேதத்தில், பந்த நிவர்த்திக்காகக் கொள்ள வேண்டிய பகுதி ஒரு சிறிதளவே அதை அவன் வேதத்திலிருந்து கிரகித்தாலும். உபநிஷத்திலிருந்து கிரகித்தாலும் 'தத்வமஸி' என்பது போன்ற மகா வாக்கியங்களிலிருந்து கிரகித்தாலும் அளவு ஒன்றே

ஆகவே வேதம் பரந்திருந்தாலும் அர்ஜுனா! ஜீவாத்மா தனது நிலையான நலனுக்காகக் கொள்ளவேண்டிய சாரமான பகுதி அளவில் சிறியதாய் இருப்பதால் கலக்கத்திற்கே இடமில்லை! அடுத்தபடியாக ஜீவாத்மாவின் உரிமையின் எல்லையைத் தெரிந்து கொள்' என்று மேலும் சொல்லலானார்.



18

உண்ணாவிரதம்

★

'உணவுப் பஞ்சமும் பங்கீடுமாய் இருக்கும் இக்காலத்தில் இரண்டு ஸ்வாமிகள் உண்ணாவிரதம் கிடந்தால்தான் போதுமா?' என்று சொல்லிக்கொண்டே வந்தாள் கமலா.

'என் அகத்தில் அம்பிப்பயல்கூட உண்ணாவிரதம் கிடப்பதாகப் பயமுறுத்துகிறான்' என்றாள் ஸரோஜா.

'எந்த மசோதாவுக்கு விரோதமாகச் சோமு உண்ணாவிரதம் கிடக்கப் போகிறான்?' என்று கேட்டாள் கமலா சிரித்துக்கொண்டே.

'இன்னொரு விசேஷம் தெரியுமோ உனக்கு? சோமு உண்ணாவிரதம் இருந்தால் ராமு தானும் உண்ணாவிரதம் இருக்கப்போகிறானாம்' என்றேன் நான்

'ஸ்வாமிகளின் உண்ணாவிரதத்தையே ராஜாஜி ஒப்புக்கொள்ளவில்லையாம்' என்றாள் கமலா.

'ஏன் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிறார்? உண்ணாவிரதத்தை இந்நாளில் உலகப் பிரசித்தியாக்கியவர் காந்தியடிகள். அவருடைய முதன்மையான சீடர் ராஜாஜி; காந்தியடிகளின் சத்தியாக்கிரக சாஸ்திரத்திற்கு ஸ்ரீபாஷ்யம் செய்துவருகிறவர்' என்றாள் ஸரோஜா.

'அதனால்தான் அம்மா ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிறார் ராஜாஜி' என்றேன்.

'நீ சொல்வது விளங்கவில்லையே. இதற்கும் ஒரு சங்கர பாஷ்யமோ ராமானுஜ பாஷ்யமோ தேவைதான்!' என்றாள் ஸரோஜா.

'எனக்கு விளங்கிவிட்டது. சொல்லட்டுமா?' என்று கமலா சொல்ல, நாங்கள் இருவரும் மௌனமாய்ச் சம்மதம் தெரிவித்தோம்.

கமலா சொன்னாள்: 'உண்ணாவிரதம் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஒரு பெருங்கருவி கொலைக்கருவியாகவும் உதவக்கூடியது! பிறரைக் கொல்லாது; தற்கொலையாகத்தான் முடியக்கூடும். தற்கொலையாக முடிந்தாலும் விரதம் பூர்த்தியாகிச் சத்தியாக்கிரகி பிழைத்துக் கொண்டாலும் நோக்கம் பிறருள்ளத்தைத் திருத்துவதுதான். பிறருள்ளம் திருந்துவதுதான் என்று சொன்னால் அது இன்னும் பொருத்தமாகும் சத்தியாக்கிரக நெறியிலேதான் இந்தப் பயன் ஏற்பட முடியும். சத்தியாக்கிரகம் துராக்கிரகமாகி விட்டால் உண்ணாவிரதமும் கொல்லா விரதமாகிய அஹிம்ஸா தர்மமாயிருக்க முடியாது சத்தியாக்கிரகத்தின் தத்துவத்தை நன்றாக அறிந்திருக்கும் ராஜாஜிக்கு உண்ணாவிரதத்தின் தத்துவமும் தெளிவுதானே?'

'அப்படியானால், இந்துமத தர்ம பரிபாலன மசோதாவை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் செய்வது சத்தியாக்கிரக தர்மம் இல்லை என்கிறாயா?' என்று கேட்டாள் ஸரோஜா.

'இப்போதுள்ள அரசியல் நிலையில் இது சத்தியாக்கிரகம் இல்லை என்றுதான் ராஜாஜி நினைக்கிறார்' என்றாள் கமலா.

'ராஜாஜியின் இந்த அபிப்பிராயத்தை நீ ஒப்புக் கொள்கிறாயா? மசோதாவை எதிர்ப்பது துராக்கிரகம் என்கிறாயா?' என்று கேட்டாள் ஸரோஜா.

'அப்படி நான் சொல்லவில்லை. மசோதா விஷயத்தில் கருத்து வேற்றுமை இருக்கலாம் அதற்காகப் பொது மக்களிடையே பிரசாரம் செய்வதுதான் நேர்மையான வழி. கத்திபோல் கூர்மையான வழி சத்தியாக்கிரகம். இதில் நடக்கப் பழகுவோர் மிகமிகச் சிலரே. ஆசாரிய ஹிருதயத்தை அப்படியே தெரிந்து பாஷ்யம் செய்யவல்ல ராஜாஜியும் உண்ணாவிரதம் கிடந்ததில்லையே!' என்றாள் கமலா.

'நமது இந்திய அரசாங்கம்தான் பாக்கிஸ்தான் போலச் சமய உணர்ச்சியில் ஊன்றிய அரசாங்கம் இல்லையே. அப்படியிருக்க, இந்த அரசினர் மத விஷயங்களில் தலையிடுவானேன்?' என்றாள் ஸரோஜா.

'தலையிடுவதுமட்டுமா? தலைவிடுவதும்தான் விடுதலை, "தலைவிடு" என்று ஆகிவிட்டது. நம் தமிழ்நாட்டிலே. வேண்டாத விஷயங்களிலும் அவசர அவசரமாகத் தலைவிடுகிறார்

கள் இப்படித் தலையை விட்டுக் கொண்டு எடுக்கமுடியாமலும் விழிப்பார்கள். இதுதான் உண்ணாவிரதம் கிடக்கும் ஸ்வாமிஜியின் கருத்து என்று எனக்குத் தோன்றுகிறது. ஸ்வாமி உண்ணாவிரதம் கிடக்கிறாரென்றால், நமது சென்னை அரசாங்கம் உண்ணாவிரதம்.........அதாவது, இந்த விஷயங்களை ஆற அமர நினைத்துப் பாராத விரதம் கிடப்பதாக எனக்குப்படுகிறது.

வில்லடிச்சான் கோயிலிலே

விளக்கேற்ற நேரமில்லை!

என்று தென்கோடி ஜில்லாவில் பாடுவதுண்டு. சென்னை அரசியல்வாதிகளுக்கோ சிந்திக்கவும் நேரமில்லை! எனினும் ஸ்வாமியின் சத்தியாக்கிரகம் ராஜாஜி சொல்கிறபடி சரி இல்லைதான் என்றாள் கமலா.

'ஆனால் நீ அரசாங்கத்தைக் குறித்துக் குறை கூறுவதை என்னால் அப்படியே ஒப்புக்கொள்ள முடியவில்லை. மதப்பற்றில்லாத அரசாங்கமும் மதத்தின் பெயரால் நடைபெறும் ஒழுங்கீனங்களையும் கொடுமைகளையும் தவிர்க்கவேண்டாமா? "சதி. சதி" என்று உடன் கட்டை யேறுவதையும் சாஸ்திரத்தின் பெயராலும் சமயத்தின் பெயராலும் ஒரு காலத்திலே வைதிகர்கள் அனுமதிக்கவில்லையா? அவர்களும் "மதப்பற்றில்லாத பிரிட்டிஷ் அரசாங்கம் எங்கள் மதக் கொள்கைகளில் தலையிடக் கூடாது" என்றுதான் பிரார்த்தித்தார்கள். விண்ணப்பித்தார்கள் சதி ஒழிப்பு மசோதாவை எதிர்த்தார்கள் என்றேன் நான்

'அந்த நிலைமை இன்று ஏற்பட்டிருப்பதாகவா சொல்கிறாய்? அப்படியானால் ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யர் போன்ற அரசியல் ஞானமும் சட்டஞானமும் வாய்ந்தவர்கள்—நந்தனாரைப்போல் தியாகத் தீயில் குளித்தவர்கள்—ஏன் இந்த மசோதாவை எதிர்க்கவேண்டும்? பொது நன்மைக்கான விஷயங்களைத்தானே இவர் வற்புறுத்திப் பேசுகிறவர்?' என்றாள் ஸரோஜா

'இந்த மசோதா இப்படியே அங்கீகரிக்கத் தக்கதுதான் என்றா நான் சொன்னேன்? மதத்தின் பெயரால் நடைபெறும் ஒழுங்கீனங்களையும் மதப்பற்றில்லாத அரசாங்கம் சும்மா பார்த்துக்கொண்டிருக்கவேண்டியதுதான் என்ற அபிப்பிராயத்தைக் கண்டித்தேன். இந்த அபிப்பிராயத்தைவைத்துக்கொண்டு சத்தியாக்கிரகம் செய்வதே துராக்கிரகம் என்று நினைக்கிறேன். இப்படித்தான் நமது கவர்னர் ஜெனரலும் நினைப்பதாகத் தோன்றுகிறது. வாதமும் எதிர்வாதமும் செய்து பிரசாரமுறையில் ஸ்வாமிகள் தம்முடைய கொள்கையை நிலைநிறுத்துவதுதான் நல்லது. வாதத்தை விட்டுப் பிடிவாதத்தைப் பிடித்துக் கொண்டு "சத்தியாக்கிரகம் செய்கிறோம்" என்றால் அது சத்தியாக்கிரகம் ஆகிவிடுமா? சோமு முரண்டு செய்து உண்ணாவிரதம் கிடப்பது போலத்தான்!' என்றேன் நான்.

'போகட்டும்; பத்திரிகைக்காரர்களுக்கு இது ஒரு புது விருந்து தானே!' என்றாள் ஸரோஜா.

'என்ன இருந்தாலும், காந்தியடிகளின் கொள்கையைக் கௌரவிப்பதாக இல்லை இன்று நடைபெறும் காரியம்' என்றேன்.

இதிருக்கட்டும் பொதுவாக உண்ணாவிரதம் நல்லதுதானா?' என்று கேட்டாள் ஸரோஜா.

'உணவுப் பஞ்சத்தில், உணவு கிடைக்காமலிருக்கும்போது உண்ணாவிரதமே விரதம்!' என்றாள் கமலா

'அஜீர்ணக்காரர்களுக்கு உண்ணாவிரதம் நல்லது' என்றேன் நான்

'அடிக்கடி விருந்து சாப்பிடுகிறவர்களுக்கும் விரதம் நல்லதுதானே' என்றாள் ஸரோஜா.

'விருந்து வேண்டுமென்றால் விரதமும் வேண்டியதுதான் விருந்துக்கு மருந்து விரதம் என்றேன்.

'ஜைனர்கள் அந்தக் காலத்தில் கடுமையான உண்ணாவிரதங்களை அனுஷ்டித்தார்களாமே? இந்திரிய ஜயம் அல்லது புலனடக்கத்திற்கும் உண்ணாவிரதத்தை ஒரு சாதனமாக உபயோகித்துக்கொண்டார்களாமே?' என்று கேட்டாள் கமலா.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷம் அளவுக்கு மிஞ்சிய உண்ணாவிரதம் காயக்கிலேசமாகிக் கேடு செய்கிறது "ஊன்வாட வாடத் தவஞ் செய்ய வேண்டாம்" என்பது பக்தர்களின் கொள்கை. இக் கருத்தைத் திருமங்கையாழ்வார் வெளியிட்டிருக்கிறார் இது சரியான கொள்கையென்றே நம்புகிறேன்' என்றேன்.

'ஜைன தர்மமாகிய அஹிம்ஸாதர்மம் உண்ணாவிரதத்திற்கு இடம் கொடுக்கிறது: கடுமையான காயக்கிலேச நோன்புகளுக்கும் இடம் கொடுக்கிறது. பிறருக்கு ஹிம்ஸை செய்யாமல் இருப்பதுதானே அஹிம்ஸா தர்மம்?' என்றாள் ஸரோஜா.

'தன் உடம்பையும் ஹிம்ஸிக்கலாகாது; தன் உடம்பு விஷயத்திலும் அஹிம்ஸா தர்மத்தைக் கைக்கொள்ளவேண்டும் என்றுதான் பக்தன் சொல்கிறான்' என்றேன்.

'அப்படியானால் பக்தர்களுக்கு விரதமே தேவையில்லையா? எம்பெருமானை ஆராதிப்பவர்கள் வயிற்றுப் பெருமானையும் "நம்பெருமான்" என்று ஆராதிக்கவேண்டுமா?' என்று கேட்டாள் ஸரோஜா.

'பக்தர்களுக்கு ஏகாதசி போன்ற சில விரதங்களே போதும் அவரவர் உடல் நிலைக்கும் சத்தியாக்கிரகத் தேவைக்கும் தகுந்தபடிதான் விரதங்களை அனுஷ்டிக்கலாம்' என்றேன் நான்.

அப்போது சில முறுக்கு, தேங்குழல்களுடன் ராமு வந்து சேர்ந்தான். அவனை நோக்கி, உன்னுடைய அனுதாபவிரதம் பூர்த்தியாகி விட்டதோ? பௌர்ணமிவந்துவிட்டதோ? கடல்ஸ்நானம் ஆகி விட்டதோ?' என்று கொஞ்சினாள் கமலா.

'இந்தப் பௌர்ணமி சோமுவுக்கும் வந்து சேரவேண்டும் என்றாள் ஸரோஜா. நாங்கள் உண்ணும் விரதத்துடன் பிரிந்தோம்

வரப்பெற்றோம்.

குமரன் டெக்ஸ்டைல்ஸ் ஹவுஸ் (கோட்டாறு, தென் திருவிதாங்கூர்) என்ற ஜவுளி வியாபார நிலையத்தின் சொந்தக்காரரான ஸ்ரீ என் ஆர். சந்திரன், நமது பார்வைக்கு அனுப்பிய ஜெம்பர் வகையரா வெல்வெட் பட்டுத் துண்டொன்று வரப்பெற்றோம். இது பலவகை நிறங்களில் கோடிட்ட கரையையுடையதாயும், பளபளப்பாயும் வழவழப்பாயுமிருப்பதுடன் உறுதியாகவும், அமைந்துள்ளது.

கலா மண்டபம்

சினிமாவும் நக்ஷத்திரமும்

சாண்டில்யன்

சுதேசமித்திரன் வாரப்பதிப்பில் 'கால பலன்' வெளிவரும் நாட்களில் பத்திரிகைக்குப் போட்டி அபரிமிதமாகி சப்ளை செய்ய முடியாத அளவுக்குப் பிரதிகளை பிய்த்துக்கொண்டு போவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதற்குக் காரணம் மனித வர்க்கத்துக்கு உண்டாகும் கஷ்ட நஷ்டங்கள்தான். நக்ஷத்திரமும் நக்ஷத்திரத்தால் ஏற்படும் ராசியும் தங்களை எந்தவிதமாக ஆட்டிவைக்கின்றன என்பதை தெரிந்துகொள்ளவும், இனிமேலாவது காலம் நமக்கு அனுகூலமாகத் திரும்பாதா என்ற நம்பிக்கையுந்தான் மனிதர்களை இவ்விதம் ஜோஸ்ய மார்க்கத்தில் திரும்பச் செய்கிறது.

அநேகமாக சினிமா முதலாளியின் கதியும் இப்படித்தான். அவரது கால பலன், பணத்துக்கு அடுத்தபடியாக நக்ஷத்திரத்தையும் அதனால் உண்டாகும் ராசியையும் பொறுத்தது. நக்ஷத்திரம் அனுகூலமானதாக அமைந்து கூடுமானவரை ஒத்துழைத்தால் முதலாளிக்கு நல்ல ராசிதான். இல்லாவிட்டாலோ அடுத்த கிரகத்துக்குப் போயிருக்கும் நக்ஷத்திரம் எப்பொழுது திரும்பும், நாம் எப்பொழுது ஷூட்டிங்கை ஆரம்பிக்கலாம் என்று அவர் ஆகாயத்தை நோக்கி விரல்விட்டு எண்ணி ஜோஸ்யம் பார்க்க வேண்டியதுதான்.

சினிமா சந்திரன், சினிமா சூரியன் என்றெல்லாம் கிடையாது ஆனால் சினிமா நக்ஷத்திரம் என்று மட்டும் ஒன்று உண்டு. ஏன்? சூரியனாயிருந்தால் உலகத்தின் சகல வஸ்துக்களுக்கும் உயிர்கொடுக்கும் தன்மை வாய்ந்தது. சந்திரனாயிருந்தாலோ அதன் கிரணங்கள் மேலே பட்டாலே மனிதன் சந்தோஷப்படுகிறான். ஆனால் நக்ஷத்திரத்தால் இந்த இரண்டு விதமான நன்மையும் கிடையாது. சூரிய சந்திரர்களைப் போல் பிரகாசம் இல்லாவிட்டாலும், எங்கோ மினுக்மினுக்கென்று தளுக்குடன் நின்றுகொண்

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]



சொகுசாக சோபாவில் அமர்ந்திருப்பதிலிருந்து ஜுபிடர் வேலைக்காரியின் (ராஜம்மா) அந்தஸ்து ரொம்ப உயர்ந்தது. என்று தெரியவில்லையா?

சினிமாவும் நக்ஷத்திரமும்

[முன் பக்கத் தொடர்ச்சி]

டிருந்தாலும் நக்ஷத்திரத்தால் உண்டாகும் தொல்லை மாத்திரம் சொல்லிமுடியாது. மனிதனைப் போட்டுப் புரட்டி ஒன்று மாற்றி இன்னொரு நக்ஷத்திரமாக மாறி மாறிப் பிடித்துச செய்யும் இமசை அனந்தம். அட! இந்த நக்ஷத்திரம் ஏதுக்கு வேண்டாமே என்று விடுவதற்கும் இல்லை. ஏனென்ருல் நக்ஷக்திரம் ஏதாவது விழுந்தால் பெரிய அனர்த்தம் ஏற்படும் என்று சொல்லுகிருர்கள். ஜோஸ்ய விஷயம் எப்படியோ, சினிமாநக்ஷத்திரம் விழுந்தாலோ முதலாளியையும் அடியோடு இழுத்துககொண்டுதான் கீழே விழுகிறது. அப்புறம் அந்த முதலாளி எழுந்திருந்தால் அது ரொம்பவும் ஆச்சரியம். நக்ஷத்திரமே முதலாளியாகிவிட்டால் என்ன என்று கேட்காதீர்கள். யானை தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொள்கிற கதைதான் அது.

முதலாளியான எந்த நக்ஷத்திரமும முன்னுக்கு வந்ததாகத் தெரியவில்லை இதற்குக் காரணங்கள் பல உண்டு. சதா கண்டபடி பணத்தைச் செலவு பண்ணி பகட்டாகக் காலங்கழித்த நக்ஷத்திரத்துக்குப் பணத்தை செட்டாகச் செலவழிக்கத் தெரிவதில்லை. இரண்டாவதாக தனக்கு மேம்பட்ட நக்ஷத்திரம் கிடையாதென ஒரு அபிப்பிராயமும் இருப்பதால் தன் படங்களில் எல்லாம் தானே நடித்தாகவேண்டும் என்ற ஒரு வலுக்கட்டாயத்தையும் நக்ஷத்திரம் ஏற்படுத்திக கொள்கிறது. இதனல் வெளிப் படங்களில் நடிக்கிற சந்தர்ப்பம் போவதோடு தன் படத்தில் பணத்தை செலவு செய்யவேண்டிய அவசியமும் நேரிடுகிறது இப்படி வருமானத்துக்கு வருமானமும் போய் செலவுககுச செலவும் அதிகமாவுல் கம்பெனியின் கதி என்னவென்பதைப்பற்றி அதிகமாக எதுவும் சொல்ல வேண்டியதில்லை. ஆனல் முதலில் நக்ஷத்திரத்திற்கு இந்தக் கஷ்டங்கள் தெரிவதில்லை. அட, என்ன செலவானுலும் நமது படந்தான் வெளிவரப்போகிறது. அப்புறம் கேட்பானேன் என்ற துணிச்சலில் காரியம் நடககிறது. அப்புறம் கேட்பானேன் என்று நக்ஷத்திரம நினைத்தாலும் அப்புறம் கேட்க வேண்டிய தினுசுக்கே—அதாவது கடன் கேட்க வேண்டிய தினுசுக்கே—வந்துவிடுகிறது. அப்படியில்லையென்று வைத்துக்கொள்

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

ஸ்டுடியோக்களில் என்ன நடக்கிறது?

சினிமாவும் நக்ஷத்திரமும்

[முன்பக்கத் தொடர்ச்சி]

வோம். நக்ஷத்திரத்தின் உயர்ந்த ஸ்தானத்தை நம்பி விநியோகஸ்தர்கள் உயர்ந்த தொகைகளைக் கொடுத்துப் படத்தை வாங்கினாலோ அந்தப் படத்துடன் அவர் விநியோகஸ்தர் ஸ்தானத்தை இழந்துவிடுகிறார். அடுத்தபடியாக தனக்கு யார் பணம் விநியோகம் செய்வார்கள் என்று அல்லாட ஆரம்பித்து விடுகிறார்.

இந்த மாதிரி கெடுதல்கள் நேரிடுவதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு. நக்ஷத்திரம் தான் இருக்கவேண்டிய ஸ்தானத்தில் ஒழுங்காக இல்லாதது ஒன்று. வேறு இடத்துக்கு, அதாவது முதலாளி ஸ்தானத்துக்கு, வந்தபிறகு தன் சுயநிலை அறியாதது இரண்டு. இருக்கிற இடத்தில் எப்படியிருக்க வேண்டும்? வேறிடத்துக்கு வந்த பிறகு எப்படி நடந்துகொள்ள வேண்டும் ?

நக்ஷத்திர பதவி சுலபமாக எட்டுவதில்லை. துருவன் எவ்வளவு சின்ன வயதுமுதல் பயபக்தியுடன் தன் கடமையில் முனைந்து நக்ஷத்திர பதவியை எட்டினான் என்ற கதை தான் தெரியுமே. சினிமா நட்சத்திரப் பதவிக்கு ஒழுங்காக நடந்துகொள்ளும்பட்சத்தில் அந்த மாதிரி புனிதத் தன்மையும் உயர்வும் உண்டு. தன்னால் சமூகமும் சினிமாத்தொழிலும எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகின்றன? தன்னுடைய நடை உடை பாவனைகளை ஜனங்கள் எவ்வளவுதூரம் கடைப்பிடிக்கிறார்கள்? தன் சினிமா வாழ்கையை மட்டுமின்றி தன் சுயவாழ்க்கையும் ஜனங்களை எவ்வளவுதூரம் பாதிக்கிறது? என்பதை ஊன்றிப் பார்க்கவேண்டும் அநேக ஜனங்களுக்கு எட்டாத பதவி நமக்குக் கிடைத்திருக்கும்போது திரி

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

வாருங்களேன், சென்னையை விட்டுக் கொஞ்சம் வெளியூருக்குத்தான் போய்வருவோம்.

உதகமண்டல மலைச்சாரல் சதா இருந்துகொண்டிருக்கும் கோவை மாநகரத்துக்குள் சிறிது நுழைவோம். ரயிலை விட்டு இறங்க வேண்டியதுதான், சென்னையிலிருப்பதைவிட விசாலமான ரஸ்தாக்களையும் எதிரே 'அப்டுடேட்' ஹோட்டல்களையும் காண்கிறோம். ஸ்டேஷனுக்கு எதிரிலிருக்கும் இந்த ஹோட்டல்களிலிருந்து

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]



கண்ணைக் காட்டி காளைகளின் கருத்தழிக்கும் காரிகைகள் எத்தனை பேர்? என்று யோசிக்கிறார் 'கிருஷ்ண பக்தி' யின் தேவகுமாரியான ராஜகுமாரி.

ஸ்டுடியோக்களில் என்ன நடக்கிறது ?

[முன் பக்கத் தொடர்ச்சி]

அடிக்கடி பறக்கும் சினிமா கம்பெனி கார்கள் ஒன்றில் தொத்திக்கொண்டால் எந்தவிதமான காட்சி உங்களுக்குத் தெரியும் தெரியுமா? நீங்கள் தொத்திக்கொண்ட கார் சென்ட்ரல் ஸ்டுடியோவைச் சேர்ந்தது என்று வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்குப்பின் கொண்ட அனுபவம் கிடைக்கும்.

கார் எங்கோ தார் ரோட்டுகள் வழியாகப் பறக்கிறது. ஆச்சு ஊருக்கு வெளியில்கூட வந்துவிட்டோம். இதோ ஒரு பக்கத்து ரஸ்தாவில் வண்டி திரும்புகிறதே, ஏன்? அதற்கப்புறம் கேள்வி கேட்கத் தோன்றவில்லை என்ன ரமணீயமான பிரதேசம்! இரண்டு பக்கத்திலும் பச்சைப்பசேலெனப் பயிர்கள் (அறுவடை காலமா இல்லாவிட்டால்) ஆடி ஆடி நிற்கின்றன கண்ணைக் கவரும் அந்த மரகதப் பாய்களைத் தாண்டியவுடன் இளநீர்களுடன் வாவென்று அழைக்கும் குட்டைத் தென்னை மரங்கள். 'டிர், டிர். ட்ரக், ட்ரக்', கார் நின்றுவிடுகிறது. இறங்குகிறோம். வாசலைத் தாண்டியவுடன் பெரிய பச்சை விரிப்புகளைப் போட்டுக்கொண்டு நமது வரவுக்காக புஷ்பச் செடிகள் காத்துக்கொண்டு நிற்கின்றன. சாயந்திர வேளையாயிருந்தால் அந்தப்பச்சை விரிப்புகளுக்கிடையே இருந்து கறுவலான ஒரு நெட்டை மனிதர் இரண்டு விரல்களுக்கிடையே வெள்ளை சிகரெட்டுடன் சரேலென்று எழுந்திருந்து கைகூப்பி 'வாங்க ஸார், வாங்க, எப்பொ பட்டணத்திலேயிருந்து? சொல்லியனுப்பியிருந்தா ஸ்டேஷனுக்குக் கார் அனுப்பியிருப்பேனே" என்று உபசரிப்பார். சொல்லியனுப்பியிருந்தால் என்ன செய்திருப்பார் என்பதைப்பற்றி நாம் கவலைப்படுவதேயில்லை அந்த முக உல்லாசத்திலும் உபசாரத்திலும் ஈடுபட்டு "அதற்கென்ன பரவாயில்லை, மிஸ்டர் சோமு, ஸௌக்கியந் தானே" என்று விசாரிப்போம்.

ஜூபிடர் பாகஸ்தர்களில் ஒருவரும் அதன் காரணமாக கோவை சென்ட்ரல் ஸ்டுடியோ நிர்வாகியுமான ஸ்ரீ எம். சோமசுந்தரம் சினிமாத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் சாதாரண 'மிஸ்டர் சோமு' தான். எல்லோருடனும் சகஜமாகப் பழகும் சுபாவம் படைத்தவர். இன்னொரு பாகஸ்தரான மிஸ்டர் எஸ். கே. மொஹிதீன் கொஞ்சம் கண்டிப்பான மனிதர் என்று பெயரெடுத்தவர். அந்தக் கண்டிப்பை முன்னிட்டே அவரை சினிமாக்காரர்கள் பலரும் விரும்புகிறார்கள். ஸ்ரீ சோமுவும் மிஸ்டர்மொஹிதீனும நடத்தி வரும் ஜூபிடர் பிக்சர்ஸ் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு சான்றாக விளங்கிவிடுகிறது. படம் பிடிக்கும் பழய கம்பெனிகளில் இது ஒன்று. ஜூபிடர் குத்தகையில்தான் இப்பொழுது சென்ட்ரல் ஸ்டுடியோ நடந்து வருகிறது.

இந்த ஸ்டுடியோவில் இப்பொழுது பலதரப்பட்ட பேர்கள் வேலை செய்கிறார்கள். சுயமரியாதை அறிஞர் அண்ணாதுரை, சினிமா அறிஞர் ராம்னாத் ஆகியவர்கள் உழைக்கிறார்கள். இதைப் பார்த்தால் ஜூபிடரில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையோடு இதர ஜாதீய ஒற்றுமையும் ஏற்பட்டுவிடுமோ என்று தோன்றுகிறது.

சினிமாவும் நக்ஷத்திரமும்

[முன் பக்கத் தொடர்ச்சி]

கரண சுத்தியாய் நடந்துகொள்ள வேண்டுமே என்ற பொறுப்பு வேண்டும்.

இது தவிர தன்னையே நம்பி சரணாகதியடைந்திருக்கும் சினிமா முதலாளியைக் கூடியவரைக் கைதூக்கிவிடப்பார்க்க வேண்டும். சினிமா நக்ஷத்திரம் அதிகப் பணம் கேட்பதைப்பற்றி எனக்கு ஆட்சேபணையே இல்லை. ஆனால் அதிகப்படங்களில் கையெழுத்தைப்போட்டு காண்டிராக்டுகளை அதிகப்படுத்திக்கொள்வதை ஆட்சேபிக்கிறேன். நக்ஷத்திரம் அனுகூலமாயில்லாததால் பல முறை 'ஸெட்'டுகளைப் பிரித்த முதலாளிகளைப் பார்த்திருக்கிறேன். முதலாளி ஸ்டுடியோவில் நெஞ்சிக் கூத்தாடி ஸெட்டைப் போட்ட பிறகு 'ஹீரோ' கிடைத்தால் 'ஹீரோயின்' கிடைக்காமலும் 'ஹீரோயின்' வந்தால் 'ஹீரோ' வராமலும், இரண்டு பேரும் சேர்ந்து வந்தால் ஸெட்டில்லாமலும் திண்டாடுவது பரம சகஜமாகிவிட்டது. இத்தனை பட்ட பிறகும் முதலாளி நக்ஷத்திரங்களிடந்தான் தொங்குகிறார். புதிதாக யாரையாவது பார்ப்போமே என்ற யோசனை அவருக்கு இன்றைய தேதிவரையில் கிடையாது. கதாசிரியர் அவருக்கு லட்சியமில்லை. காமிராககாரரைப்பற்றிக் கவலையில்லை. ஒரு டைரக்டர்போனால் இன்னொரு டைரக்டரைப் பார்த்துக்கொள்ளலாம் என்ற தைரியம் உண்டு. ஆனால் இந்த நக்ஷத்திரம் வேண்டாம், வேறு நக்ஷத்திரத்தைப் பார்த்துக்கொள்வோம் என்று அவரால் சொல்லமுடியாது. நல்ல கதையோ, நல்ல டைரக்டரோ, காமிராமனோ இல்லாவிட்டாலும் படம் பிடிக்கலாம், நக்ஷத்திரமில்லாவிட்டால் முடியாது என்ற தீர்மானம் அவருக்கு உண்டு. தவிர ஒரு நக்ஷத்திரத்தை வைத்து ஒரு ஸெட்டை எடுத்துவிட்டால் அப்புறம் வேறு ஆளைப் பிடிப்பதும சாத்தியமில்லையே. வேறு ஆளைப் பிடிப்பதென்றால் 'அடியைப் பிடிடா பாரதபட்டா' என்ற கதையாக மீண்டுமல்லவா படத்தை முதலிலிருந்து பிடிக்கவேண்டும்?

இந்த உபத்திரவங்களால்தான் முதலாளி நக்ஷத்திரத்தை தொழுகிறார். அப்பேர்ப்பட்ட நக்ஷத்திரம் அவரை கைவிடுவது நியாயமல்ல. குறிப்பிட்ட காலவரையறைக்குள் படத்தைப் பிடிக்க வேண்டும் என்ற திட்டம்போட்டு காண்டிராக்டுகளை அதிகமாக்கிக் கொள்ளாமல் காலாகாலத்தில் ஸெட்டுக்கு வந்து ஒத்துழைக்கவேண்டும். அப்பொழுதுதான் படம் முடியும முதலாளியின் ராசியும் நல்ல ராசியாக இருக்கும். காலபலனும் அனுகூலமாகக் கூடிவரும். ஒரு படம் பலருடைய ஒத்துழைப்பால் தயாராகவேண்டிய சிற்பவேலை சிற்பத்தில் மூக்கோ, கண்ணோ எது மூளியானாலும் சிலைகெட்டுவிடும் நக்ஷத்திரம் அந்தச் சிலையின் கண். ஆகையால் பொறுப்பு மிக அதிகம். அது ஒளி இழந்தால் சிலையை யாரும் சீந்தக்கூட மாட்டார்கள்.



விமலா

எல். வி. எஸ். மணியன்

எண்ணற்ற சந்தேகங்களின் எழுச்சியால் குழம்பிக்கிடந்த விமலாவின் மனதில் திடுதிப்பென்று மின்னலென ஒரு எண்ணம் தோன்றியது. "ஒருவேளை நான் சாகவேண்டுமென்று அவர் நினைக்கிறாரோ?" நாதன் முகத்தைக் காணாமல் ஒரேயடியாகப் போக, அந்த ஸ்திரீயுடன் இவர் என்றென்றைக்கும் சரச சல்லாபம் செய்யும்படி நிரந்தரமாக விட்டுப்போக "தன்னை அந்த சட்டைக்காரியுடன் எவ்வித இடைஞ்சலுமின்றிவிட்டுப் போக வேண்டுமென்று அவன் நினைப்பதாக!" இவ்வெண்ணம் தோன்றியதும் தன் முகத்தைத் தலையணையில் புதைத்துக்கொண்டு அழுதாள். விக்கி, விக்கி அழுதாள். தலையணையெல்லாம் ஒரே ஈரம். நனைந்துவிட்டது. நாதனைப் பார்க்காமல் எப்படி இருக்க முடியும்? அப்பப்பா! நினைத்தாலும் மனம் நடுங்குகிறதே. இருளில், தனிமையாக, சாவு! இது அவளை ஒரு உலுக்கு உலுக்கியது.

அதோ! கார் "ஹார்ன்" சப்தம் கேட்கிறது. மறுபடியும் விமலா எழுந்து படுக்கையில் உட்கார்ந்துகொண்டாள். கார் நின்றது. நாதன் காரிலிருந்து இறங்கி வாயில் 'கேட்' கதவை திறக்கும் சப்தம், மறுபடியும் 'கேட்' மூடப்படும் சப்தம், "ஷெட்" திறக்கும் ஓசை. உள்ளே காரை விட்டு விட்டு மறுபடியும் 'ஷெட்' கதவைத் தாளிட்டுக்கொண்டு 'டக்' 'டக்' என்று நாதன் வராண்டாவில் வரும் சப்தம்! பிறகு அடிமேல் அடிவைத்து பூனைபோல நடக்கும் சப்தம். வராண்டா விளக்கின் 'ஸ்விச்' போட்டதும சாவி இடுக்கு வழியாக வெளிச்சம் தெரிந்தது. அவளைப் பார்க்காமலேயே நாதன் படுக்கைக்குப் போகிறான்! இன்னும் அசையாமல் படுத்துக்கொண்டு அவன் செய்கைகளை உன்னிப்பாகக் கவனித்தாள். கண்களை அகல விரித்துப் பார்த்தாள்.

நாதன் கட்டிலில் உட்காரும் சப்தம். பூட்ஸைக் கழற்றி கீழே 'டக்' என்று வைத்தான்! இரண்டு பூட்ஸுகளையும் கழட்டினதும் கட்டிலுக்கு அடியில் அவைகளைத் தள்ளும் சப்தம், மாலையில் வெளியில் கிளம்பும்போதே விமலாவுக்குத் தெரியாமல் வந்து படுத்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்தான். அதற்காகவே சாயந்திரம் போகும்போது கம்பிகளில்லாத தன்னலறை ஜன்னல் கதவைத் திறந்து வைத்து விட்டுச் சென்றிருந்தான்! என்ன திருட்டுப் புத்தி! பதுங்கியபடியே கூடுமானவரை சப்தம் செய்யாமல் வந்தான் நாதன்! ஆனால் விமலாவின் பாம்புச் செவிகளுக்கு இவனின் மூச்சு விடும் சப்தம்கூட தெளிவாகக் கேட்பதை அறிந்தவனில்லை! விமலாவின் சப்தமே கேட்கவில்லை? விளக்கை அணைத்தான். இருள் கவிழ்ந்தது, நிசப்தம். நல்லவேளை விமலாவின் கண்ணில் படவில்லை! அவன் வந்தது அவளுக்குத் தெரியாது! காலை எழுந்து பார்த்துக்கொள்ளலாம். அர்த்த ராத்திரியில் அவள் ஆர்ப்பாட்டம்செய்யவில்லையோன்னோ? இப்பொழுது அவன் தப்பித்தான்!

"நாதன்!"

நாதன் பேசாமலிருந்தான், காதில் விழாதவன் போல.

"என்ன? உங்களைத்தானே!" என்று உரக்கக் கூப்பிட்டாள்.

திருடிக்கொண்டேயிருப்பவன் போலீஸ்காரர்களால் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டால் எப்படியிருக்கும்? அம்மாதிரி இருந்தது அவனுக்கு ஆச்சர்யத்தை, குரலில் ஒரு மென்மையை வருவித்துக்கொண்டு, "இன்னும் விழித்துக் கொண்டிருக்கிறாயா விமல்?" என்று எழுந்து "ஸ்விச்"சை அழுத்தி விளக்கைப் போட்டுவிட்டு, பெரிய கொள்ளையடிக்க வந்த கள்ளன், கைதி செய்யப்பட்டு சிறைக்கு அழைத்துச் செல்லப்படுவதுபோல, விமலாவின் படுக்கைக்கு வந்தான் நாதன்.

"நான் செத்துத் தொலைய வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா?"

விமலாவை அன்புடன் கூர்ந்து பார்க்க முயன்றுகொண்டே அவன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு அவளை அணைத்துக்கொள்ளப் போனான் சந்திரநாதன். அணைக்க வந்த அவனது கரத்தை உதறித் தள்ளினாள் விமலா. அவள் வருத்தம் இப்போது கோபமாக மாறியது. "என்னை வெறுக்கிறீர்கள் என்று வெளிப்படையாகச் சொல்வதற்கென்ன? நான் ஒழிந்தால், நான் செத்துப்போனால் உங்களுக்கு நல்லது, இல்லையா? இதை ஏன் நீங்கள் மறைக்கப் பார்க்கிறீர்கள்? பளிச்சென்று சொல்வதுதானே! குளம், குட்டையில் விழுந்து பிராணனை விட்டுவிட்டு உங்கள் கண்முன் நிற்காமல், உங்களுக்கு இடைஞ்சலாக இராமல் போவேனா இல்லையா?"

"ஏன்? என்னை பொய்யைச் சொல்லச் சொல்கிறாய்? எது உண்மையில்லையோ, ஏன் அதை நான சொல்ல வேண்டுமென்கி

னாய்?" என்று அவள் கூற்றை வெட்டிப்பேச முயன்னான் நாதன்.

இடி இடியென்று எகத்தாளமாகச் சிரித்துவிட்டு "அப்படியானால் இன்னும் என்னை நேசிக்கிறேன் என்று சொல்லப் போகிறீர்கள்?" என்று அவனைப் பார்த்துக் கொண்டே கேலி நகைப்பு நகைத்தாள்.

விமலாவின் அந்தக் கேள்வி, கேலிச்சிரிப்பு, சுடுசரம் போலப் பாய்ந்தது. நமக்காக, நம் வரவிற்காக, இரவெல்லாம் தூங்காமல் காத்திருந்திருக்கிறாள் என்ற உணர்ச்சி நாதனுக்கு ஏற்பட்டதும் அவன் கண்களில் கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்று, மனவேதனையை அவனால் தாங்க முடியவில்லை. "யார் உன்னை நான் வெறுத்தேன் என்று சொன்னது?" என்றான் கண்ணீரினிடையே.

அவன் கண்களில் கண்ணீரைக் கண்டதும், விமலா கோபம் போனவிடம் தெரியவில்லை. எப்படி அவளால் அவனைக் கோபித்துக் கொள்ள முடியும்? அவன் சந்தோஷமாயில்லை என்பதை அறிவாள் அவள். தான் அவனைக் காதலிக்கிறோம் என்பதும் அவனுக்குத் தெரியும்? பிறகு அவளால் என்ன செய்ய முடியும்? அவன் வந்தும் வராததுமாய் ஏன் இப்படி எரிந்து, விழுந்தோம் என்று வேதனைப்பட்டாள். தன்னைத்தானே சபித்துக்கொண்டாள். அவள் கண்களிலும் ஜலம் வந்துவிடடது, "ஏதோ! மன வருத்தத்தில் சொல்லிவிட்டேன், என்னை மன்னியுங்கள். இல்லை தண்டனை கொடுங்கள்" என்று அணைக்க வந்தவனை உதறித்

தள்ளிய அவளது கரம் வெட்கமின்றி அவனைத் தழுவிக்கொண்டது.

மறு நாள். விமலா தைத்துக் கொண்டிருந்தாள் டேபிள் 'லைட்' அவளுடைய களைப்படைந்த முகத்தில் பளிச்சென்று விழுந்து கொண்டிருந்தது. நாதனின் 'சீட்டி' சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவள் பக்கத்தில் போய் நாதன் உட்கார்ந்துகொண்டு, அவள் மேல் சாய்ந்துகொண்டான் சிறு குழந்தையைப்போல.

"நீங்களா ஐந்து மணிக்கு வந்து என்னை இரண்டாவது காட்சிக்குக் கூட்டிக்கொண்டு போகிறவர். மூன்று மணி நேரம் 'லேட்'டாக்கும்?''

"ரொம்ப வேலையிருந்தது. கார் ரிப்பேர்ஆய்விட்டது. அதைரிப்பேர் செய்யக் கொடுத்துவிட்டு பஸ்ஸில் வந்தேன். பஸ்ஸிற்கு வெகு நேரம் காக்க வேண்டியிருந்தது. உனக்கு உடம்பு எப்படி இருக்கு?'' என்று கேட்டான்.

விமலா ஊசியையும் பாதி பின்னியிருந்த ஸ்டாகிங்ஸையும் கீழே வைத்தாள். நாதனின் அன்பை, அவனைத் திரும்பிப் பெற எவ்வளவு கனவு கண்டாள்? இழந்த தனம் திரும்பிப் பெற்றது போல சந்தோஷித்தாள் ஆகா! இந்த இன்பத்திற்கும் இணையுண்டோ! ஈடுதானுண்டோ! ஊசி முள் குத்தினதுபோல ஏன் அப்படி கனல் கக்க அவன் கோட்டின் மேல் இடது பக்கமுள்ள ஜோப்பியைப் பார்க்கிறாள்.

"ஏது இந்த கைக்குட்டை? உங்கள் சிஷ்யை, அந்த சட்டைக்காரி கொடுத்ததுதானே?''

"என்ன கேட்கிறாய் விமலா?'' என்று பரக்க, பரக்க, அப்பொழுதுதான் தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்தவன்போல விழித்தான் நாதன்.

"பொய் ஏதாவது கற்பித்து, பசப்பப் பார்க்கிறீர்களோ? கையும் களவுமாக அகப்படடுக் கொண்டு விடடோமே என்று 'திரு' 'திரு' என்று விழிப்பதைப் பார்!'' என கோபத்தோடு அவன் பக்கத்திலிருந்து எழுந்தாள். அவன்மடியிலிருந்த, அவன் போட்டுக கொண்டிருந்த "ஸ்டாகிங்ஸ்'' ஸும் ஊசிகளும் கீழே விழுந்தன. நூற்கண்டு உருண்டோடியது.

"என் கண் முன் நிற்காதீர்கள். போங்கள்'' என்று சீறினாள். நாதன் அவள் பின் சென்றபோது "என்ன வஞ்சனை உங்களுக்கு? நம்பிக்கைத் துரோகம்'' என்று திரும்பிக் கேட்டாள்.

"நான் சொல்ல விடமாட்டேன் என்கிறாயே.''

"என்ன சொல்லப்போகிறீர்கள்? மறுபடியும் ஒரு புளுகு. ராமனுக்குப்பின்னால் நான்தான் என்று சத்தியம் செய்யப்போகிறீர்கள்? இல்லையா?'' என்று இதுவரையில் அவள் மனதில் புடம் போட்டிருநததுபோல இருந்த எண்ணங்கள், சந்தேகங்கள் இப்பொழுது புகைய ஆரம்பித்தன பெண் புலியென அவள் தோற்றமிருந்தது அவள் உள்ளத்திருந்த பொறுமை கொழுந்து விட்டெரியத் தொடங்கியது.

"கோபிக்காமல் நான் சொல்வதைக் கேள் விமலா.''

"உங்கள் பசப்பு வார்த்தைகளையும், பொய்களையும்தானே. பொய்! முழுப்பொய்! சகலமும் பொய்! உடம்பேபொய்! ஆளும் அழகாக இருக்கிறீர்கள். என்னிடம் நடிப்பதை விட சினிமாவில் சேர்ந்து நடியுங்கள்'' என்று கேலி செய்தாள் விமலா.

"பொய்யென்றே நினைத்துக் கொண்டு நான் சொல்வதை சாந்தமாகக் கேள். அப்புறம் நியாயமாகத் தோன்றும்'' என்று நாதன் இப்படிப் படிந்துபோனது அவள் கோபத்திற்குத் தூபம் போட்டது போலாயிற்று நெருப்புப் பிடித்த வைக்கோல் போர் காற்று வீசியதும் ஜ்வாலை விட்டு எரிவது போல அவள் கோபம் பன் மடங்காயிற்று.

"போங்கள்! என்முன் நிற்காதீர்கள்'' என்று நாகமென சீறினாள்.

"நிஜமாகவே போகச் சொல்கிறாயா?''

"ஆமாம்! என்று அழுத்திச் சொல்லிவிட்டு "போங்கள்! என் முகத்தில் விழிக்காதீர்கள். எங்காவது கண் காணாமல் தொலைந்து போங்கள்'' என்று இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு



'கோ' என்று அழத் தொடங்கினாள்.

"உன் இஷ்டம்" என்று நாதன் அங்கிருந்து போய் விட்டான்.

அவன் போனதும் படுக்கையில் போய் தொப்பென்று விழுந்தாள். அழுது அழுது தன் துக்கத்தைப் போக்க எண்ணினாள்.

இப்படி 'ரகளை' நடந்த பிறகு இரண்டு வாரங்கள் சந்திரநாதனும், விமலாவும் பழகினது நிரம்பவும் விசித்திரமாயிருந்தது. அவர்கள் உறவு ரொம்ப தமாஷா, வேடிக்கையாயிருந்தது அதை அப்படியே சினிமா படமாகப் பிடித்திருந்தால் ரொம்ப ஜோராக இருந்திருக்கும் ஒருவருக்கொருவர் ரொம்ப, இல்லை, ரொம்ப, ரொம்ப, விட்டுக் கொடுத்துக் கொண்டார்கள் தனியாக இரண்டு பேரும் இருந்தால் முன் பின் தெரியாத இருவர் சந்திப்பது போல நடந்து கொண்டார்கள் வெகு நாட்கள் கழித்து இரண்டு சிநேகிதர்கள் சந்தித்தால் எப்படி பழகுவார்களோ, அவ்வளவு அன்புடன் பேசிக் கொண்டார்கள். "சட்டைக்காரி"யின் பெயரையே எடுக்கவில்லை விமலா. ஏன் நாழி கழித்து சந்திரநாதன் வந்தான் என்பதற்குக் காரணம் கேட்கவில்லை அவள். பிரமாதமாக ஒன்றுமே நடக்கவில்லைபோல இருவரும் காட்டிக் கொண்டார்கள்.

ஆனால் முதல் முதலில் வந்த கோபத்தில் விமலா தன் முக்கிய சாமான்களையெல்லாம் மூட்டை கூட கட்டி விட்டாள். பெட்டிகளில் தன் புடவை, ரவிக்கை முதலியவைகளை மடித்து வைத்து விட்டாள் சோப்பும், ஸ்னோவும், முகப் பவுடரும் கூட மறக்காமல் எடுத்து வைத்திருந்தாள். நாதன் திரும்பி வருவதற்குள் அந்த இரவே, அப்பொழுதே அவ்விடத்தைவிட்டுப் போய் விடுவதென தீர்மானித்தாள். எத்தகைய துரோகத்திற்கும், வஞ்சனைக்கும் எல்லையுண்டு. ஆனால் யாரால் தான் சும்மா பொறுத்துக் கொண்டே, பார்த்துக்கொண்டேயிருக்க முடியும்? மிகவும் பவ்யமாக, எதிர்த்துப்பேசாமல், தணிந்து கொண்டே போவதாலும், அவனை விட்டால் வேறு திக்கில்லை, தன்னை இந்த சமயத்தில் நம்பித்தானேயாக வேண்டும் என்பதால், சந்துரு இல்லாத தைரியத்தில் வேறு நாதன் இவ்வாறு தன்னை வஞ்சிப்பதாகக் கருதினாள். தான முதலிலேயே எதிர்த்துப் பேசாதது தப்பு என்று எண்ணினாள். இவ்வளவு தூரம் அவனைத் துளிர்க்க விட்டதே பிசகு. முளையிலே கிள்ளி எறிந்திருக்க வேண்டும். ஆனால் இப்போதாவது கண்டித்தோமே, கண்டிக்காமலே இருப்பதைவிட, இது மேலல்லவா? தாமதித்ததனால் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை. இறுதியிலாவது நம் சுய மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டோமே என்று எண்ணிக்கொண்டு தன் டிரங்குகளில் சாமான்களையெல்லாம் வைக்க ஆரம்பித்தாள் அந்த சமயம் தொழில் சம்பந்தமாக மேல் படிப்புக்காக லண்டனுக்குப் போயிருந்த சந்துருவுக்கு தந்தியொன்று அடித்துவிட்டு அடுத்த கப்பலிலேயே பம்பாயிலிருந்து புறப்படுவதென திட்டம் போட்டாள்.

என்னதானிருந்தாலும், இவ்வளவு மனஸ்தாபம் ஏற்பட்டிருந்தபோதிலும் சந்திரநாதனிடம் அவளுக்கு உயிர். மற்ற சாமான்களோடு, இடுப்புவரை, குறும்புப் பார்வையோடு, இரண்டு தலை மயிர் முன்னெற்றியில் சுருண்டு விழுந்து அழகாக இருக்கும் சந்திரனின் போட்டோவையும் எடுத்து வைத்துக்கொண்டாள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன் அவளின் ப்ரேமையை. அவன் தணிந்து போகாமல் ருத்திராகாரமாய் கோபித்துக் கொண்டு 'பளீர்' 'பளீர்' என்று நாலு அறை விட்டிருந்தால்கூட வலி பொறுக்க முடியாமல், கோபித்துக்கொண்டு இரண்டு கூச்சல் போட்டுவிட்டு, கொஞ்ச நேரம் முகத்தை 'உம்' என்று தூக்கிக்கொண்டு உட்கார்ந்திருப்பாளே தவிர அவனிடம் அவள் வைத்திருக்கும் அன்புமட்டும் இம்மியளவுகூட குறையாது. அவனில்லாமல் அவளால் எப்படிக் காலம் தள்ளமுடியும்? முள் இல்லாத கெடிகாரம்போலத்தான் இருக்கும் நாதன் இல்லாது போனால் அவள் நிலைமை இதைப் பல தடவை யோசித்தும் பார்த்தாள். அவனும் அவளை நேசித்தான். இன்னும் தன்னைச் சிறிதாவது விரும்புகிறான் என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். இது உண்மையோ, பொய்யோ இல்லை? அவள் குருட்டுத்தனமாகவும் நம்பிவிடவில்லை அவளிடம் கொஞ்சிற்றுகூட அன்பு இல்லையென்றால் 'எகிரி' 'எகிரி' அவள் பேச, கோபத்தில் துச்சமாகப் பதில் சொல்லச் சொல்ல, நாதன் துணிந்து, பணிவாகப் போவானா? சினம் மேலிட்டு 'விர்' என்று 'ஹேட்'டை எடுத்து வைத்துக்கொண்டு போய்விடமாட்டான்? அவனுடைய இந்த நடத்தை 'கள்ள சிநேகிதம்(?)' தானாகவே நின்றுவிடலாம் இல்லை அவளாலேயே அவனை நாளடைவில் தன் வசத்திற்குக் கொண்டுவர முடிந்துவிடலாம். குழந்தையும், பிறந்துவிட்டால், அதுவும் பிள்ளையாக இருந்துவிட்டால், கட்டாயம் சந்திரநாதன், பழைய நாதனாகிவிடுவான்! எதற்கும் ஆத்திரப்பட்டு எதுவும் செய்யாதிருப்பது நல்லது. திடுதிப்பென்று முன்னால் ஒன்றும் தெரிவிக்காமல் 'லண்டன்'ல் போய் நின்றால் அண்ணா என்ன நினைப்பான்? மனம் நொந்து போய்விடுவான்! அவன் எதற்காக இவ்வளவு செலவு செய்து கொண்டு போனானோ அதில் அவன் வெற்றியடையாமல் போகலாம். இப்பொழுது மூன்று வருடமாகத்தான் அண்ணா என்னைப் பற்றிய கவலை இல்லாமல் இருக்கிறான் மறுபடியும் அவனுக்குப் பாரமாய் 'காசிக்குப் போனாலும் கர்மம் தொலையாது' என்பதுபோல லண்டனிலுமா போய் நிற்க வேண்டும்?

(தொடரும்)

அன்புள்ள கீதாவுக்கு!

8

'வஸந்தாவை ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்திருக்கிறது' என்ற வார்த்தையைக் கேட்டதுமே எங்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அன்றாடம் பத்திரிகைகளிலும், நேரிலும் பார்க்கும் மோட்டார் விபத்தும், டிராம் விபத்தும், லாரி விபத்தும்தானே உடனே நம் கண்முன்னே வந்து நிற்கிறது! முன் காலமா, வயதாயிற்று போனார்கள் என்பதற்கு? இந்த நாகரிக யுகத்தில் மனிதன் வீட்டை விட்டு கிளம்பினால் மறுபடி வீடுவந்து சேருகிற வரை வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டல்லவோ வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கவேண்டியிருக்கிறது. மோட்டார், டிராம், பஸ், லாரி, சைக்கில் மின்சாரக்கம்பிகள்போன்ற எத்தனை விபத்துக்கள் இவனுக்காக வழியில் காத்துக்கொண்டிருக்கின்றன! சரி மோட்டாரின் கீழோ, லாரியின் கீழோ அகப்பட்டுக் கொண்டுவிட்டது. கையோ, காலோ போய்விட்டது என்றுதான் தீர்மானித்துவிட்டோம்.

'நம்ம வஸந்தாவையா? ஆஸ்பத்திரியிலா?' என்று பரப்பரப்புடன் கேட்டார் மாமியார்.

'எங்கே போயிருந்தாள் அவள்?' என்றாள் அத்தை.

'என்னவாம்? எங்காவது ஏதாவது விபத்தா என்ன? என்றாள் எல்லாரையும் விட அதிக பரிவுடன் விசாரிக்கிற மாதிரி ஓரகத்தி.

எல்லாருக்கும் அந்த சமயத்தில் என்னமோ ஏதோவென்று ஒரு பரபரப்பு ஏற்படுவது சகஜந்தான். இருந்தாலும் அதை ரொம்ப அதிகம் மாதிரி காட்டிக் கொள்கிறவர்கள் சில பேர். அதில் ஓரகத்தி பலே கெட்டிக்காரி.

பக்கத்தகத்து பத்மஜாவுடன் பீச்சுக்குப் போனாளாம், அங்கே யாரோ சில காலிகள் வந்தார்களாம். அங்கே நடந்தது என்ன என்ற விவரம் சரியாகத் தெரியவில்லை. நானும் நேரில் பார்க்கவில்லை. வஸந்தாவுக்கு மண்டையில் அடியாம். பத்மஜாவுககு நெற்றியில் அடியாம். இரண்டு பேரும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு போகப்பட்டிருக்கிறார்களாம். பத்மஜாவின் தகப்பனார் சொன்னார். அவர் ஓடியிருக்கிறார் ஆஸ்பத்திரிக்கு. நானும் உடனே ஒரு டாக்ஸியை எடுத்துக்கொண்டு வந்தேன்' என்றார் இவர்.

'நான்தான் அப்பொழுதே சொன்னேனே பீச்சுக்குப் போயிருக்கும் என்று' என்றாள் அத்தை.

'தனியாக பீச்சுக்கு எதற்கடி அம்மா போனாய்? ஐயோ! வஸந்தா! என்னடியம்மா உனக்கு? என்று கதறினார் மாமியார்.

"சரி! புறப்படு சீக்கிரம்' என்றார் அவர்.

உடனே மாமியார் போய் டாக்ஸியில் ஏறிக்கொண்டார் கூடவே அத்தையும் ஏறிக்கொண்டாள்.

'ரமா! குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளடி. நானும் போய் வருகிறேன்' என்று சொல்லிவிட்டு ஓரகத்தியும் கிளம்பினாள்.

"ஏண்டி, நீகூட வரப்போகிறாயா என்ன? குழந்தை அழப் போகிறதே" என்றாள் மாமியார்.

'நன்றாக இருக்கிறது. என்னமோ ஏதோ என்று நமக்கு இருக்கிறமாதிரிதானே அவளுக்கும் இருக்கும்? வீட்டில் இருக்கப் பிடிக்குமா மன்னி? வா, ஏறிக்கொள்' என்றாள் அத்தை.

ஓரகத்தியும் ஏறிக்கொண்டாள். டாக்ஸியும் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டது.

பாவம்! வாஸ்தவத்திலேயே வஸந்தாவுக்கு என்ன நேர்ந்ததோ? என்ன கஷ்டப்படுகிறதோ? என்ற வருத்தம் ஓரகத்திக்கு இருக்கிற அளவுககு எனக்கு இல்லாமலா போய்விடும்? இருந்தாலும் உலகத்திலே இந்தஜனங்கள் பண்ணுகிற மாயாவித்தனம் இருக்கிறதே, அடயம்மா! எத்தனை யுகங்கள் பழகினாலும் நமக்கு வரவே வராது.

எல்லாரையும்விட தனக்குத்தான ரொம்ப வருத்தம்போல

ஓரகத்தி போயிருக்கிருளா? நாளைக்கே அத்தையும் மாமியாரும் வந்து சொல்லப்போகிருர்கள்: என்னதான் சொல்லு பெரியவளுடைய (ஓரகத்தி) குணமும் மனுஷ்யத்தனமும் ஒரு விதம் தான். சின்னவளுடைய (நான்) குணமும் மனுஷ்யத்தனமும் ஒரு விதம்தான். யாருக்காவது ஒரு கஷ்டம், துக்கம் வந்துவிட்டதென்ருல் தாளவேமாட்டாள் ரொம்ப இளகின மனசு பாவம்! அதே சின்னவள் இருக்கிருளே. மகா நெஞ்சுரப்பு. எதுவும லட்சியமில்லை. எங்கோ சாவடியில் சத்திரத்தில் வந்துவிட்டுப் போகிறவர்கள்மாதிரி இருக்கிருள். வஸந்தாவை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிருர்கள் என்று கேள்விப் பட்டதுதான், வீட்டில் அவளுக்கு இருக்கவே பிடிக்கவில்லை. எல்லோருக்கும் முன்னதாக அவள் கிளம்பிவிட்டாள். தெருவில் போகிறவர்கள் யாருக்கோ விபத்து ஏற்பட்டு அவர்களை ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்திருக்கிற தோரணையில் நின்றுகொண்டிருந்தாள் ரமா என்னதான் இருந்தாலும் மனுஷ்ய ஜன்மமில்லையோ! ஒரு ஆத்திரம், பரபரப்பு ஏதாவது ஒன்று இருக்க வேண்டுமே! இதுவே அவளுடைய பிறந்தகத்தைச் சேர்ந்தவர்கள் யாருக்காவது இந்தமாதிரி நேர்ந்திருந்தால் அப்பொழுது பார்க்க வேண்டுமே, அந்த பரபரப்பையும பீதியையும்! என்னதான் இருந்தாலும் இப்படிப்பட்ட வித்யாசம் பாராட்டக்கூடாது' என்றுதான் சொல்லப்போகிருர்கள்.

எனக்கு நன்ருகத் தெரியும் அவர்களுடைய போக்கு என்ன செய்யலாம்! எனக்கு ஓரகத்தி மாதிரி மாயாவித்தனம் செய்யத் தெரியவில்லையே! செய்யவும் மனசு இடங்கொடுக்கமாட்டேனென்கிறதே!

நான் சொன்ஞல்மாத்திரம் மூக்குக்குமேல் கோபம் வந்து விடுகிறது. இவாகளுக்கு வயசு வந்த பெண்களுக்கு பீச்சில் தனியாக என்னடி வேலை? முன்மாதிரியா? வர வர காலம் ரொம்பக் கெட்டுக் கிடக்கிறது. புருஷர்களுடன் சேர்ந்து போனலே எவ்வளவோ ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. அது தொலைந்து போகிறது அவர்கள்கூட இருந்தார்கள் அதற்கு மேல்தான் நாம் என்ன செய்யலாம் என்று மன திருபதியாவது அடைய இடமிருக்கிறது. இதில் அக்கேட்டைக் கூடக் காணுமே.

சரி, பீச்சுக்குத்தான் போகிறதுகளே! போனல் நாலுபோ கும்பலாக இருக்கிற இடத்தில் கும்பலோடு கும்பலாக உட்கார்ந்திருந்துவிட்டு அஸ்தமித்தவுடனே வெளிச்சம் இருககும்போதே எழுந்து வீட்டுக்குவந்து சேராதுகளோ?



"......விருவிருவென்று நடந்து......"

யாருமில்லாத நிர்மானுஷ்யமான, தனியான, ஓரிடத்தில் போய் உட்காருகிறது ராத்திரி எட்டு அல்லது ஒன்பது மணிவரையில். இரண்டு பேராகப் போனல் பேசிக் கொண்டிருக்கிறது. ஒருவராகப் போனல் நிஷ்டையில் உட்கார்ந்து கொண்டிருப்பது.

பீச்சுக்கு வருகிறவர்களெல்லோரும் ஒரே ரகத்தைச் சேர்ந்தவர்களாகவா வருகிருர்கள்? ஏகாந்தத்தை நாடி வருகிறவர்கள் சிலர். பொழுது போககாகப் பேசிவிட்டுப் போக வருகிறவர்கள் சிலர். கடற்காற்று வாங்க வருகிறவர்கள் சிலர். இவர்களைப் பற்றி யாருக்கும் எவ்விதப் பயமுமில்லை. இளஙகாலிகளும் திருடடுக் கும்பல்களும வருகிறதுகளே அதனல் தான் பயப்பட வேண்டியிருககிறது'

ஆண்கள் இரவு ஒன்பது, பத்து மணி வரையில் ஏகாந்தமாக உட்கார்ந்து கொண்டிருக்கவில்லையா என்று கேட்கிறதுகள். எப்படியிருக்கிறதுகேள்வியின் லட்சணம்? எதிலும ஆண்களோடு போட்டி போடலாம் என்று எதிர் வாதம்

செய்ததுகளானால் அதுகளோடு நாம் என்ன செய்ய முடியும்? 'வந்ததைப் பட்டுக் கொள்ளட்டும்' என்று பாட்டி சொல்கிற மாதிரி நாம் பதில் பேசாமல் வாயை மூடிக்கொண்டிருந்துவிட வேண்டியதுதான்.

அதிலும் வர வர பீச்சின் நிலைமை எப்படியிருக்கிறது தெரியுமோ? எட்டு அல்லது எட்டரை மணியாகிவிட்டால் பெண்கள் அங்கே இருப்பது உசிதமில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

அன்றொருநாள் எதிர் வீட்டு ஏகாம்பர மாமாவின் பெண்ணும் மாப்பிள்ளையும், எட்டரை மணிதான் இருக்குமாம் பீச்சு ரோடில் நடந்து வந்து கொண்டிருக்கிறார்களாம் ஜன நடமாட்டமே அதிகமில்லையாம். ஒருகாலிக்கும்பல் வந்ததாம். என்னென்னமோ கிண்டல் பண்ணிற்றாம் இவர்கள் இருப்பது இரண்டே பேர். வாயைக் 'ஈயை' த்திறக்காமல், எது சொன்னாலும் சொல்லட்டும், ஒன்றும் செய்யாமல் விட்டால் போதும் என்று விருவிருவென்று வீடுவந்து சேர்ந்தார்களாம்.

"இங்கே ரோடில் நடைபாதையை விட்டுக் கீழே இறங்கினாலோ அலலது அசந்து மறந்து பசங்கள் ரோடு ஓரத்தில் அசுத்தம் செய்தாலோ பிடித்துக்கொள்ள கண்குத்திப்பாம்பு மாதிரி போலீஸ்காரர்கள் இத்தனைபேர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்களே, அங்கு ஒருவராவது தென்பட வேண்டுமே! என்று அன்று நடந்த சம்பவத்தை அதிசயமாய்ச் சொல்லிற்று ஏகாம்பர மாமாவின் பெண்.

அப்படிப்பட்ட இடத்தில் பெண்கள் தனிமையாய்ப் போவதென்றால் நன்றாக இருக்குமா? இதெல்லாம் நீயும் நானும் விசா

"......கண்குத்திப் பாம்பைப்போல......"

ரப்பட்டா ஆகப்போகிறது? உலகம் எதையோ நினைத்துக் கொண்டு முன்னேற்றம், விடுதலை என்று போய்க்கொண்டிருக்கிறது அது ஒரு இடத்தில் போய் நிற்கிறவரையில் யார் எதைச் சொன்னாலும் அதன் காதில் விழவேவிழாது என்று நீ சொல்லிவிடுவாய் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் அஞ்ஞானம் கேட்கமாட்டேனென்கிறது ஒரு சமயம் இல்லாவிட்டாலும் ஒரு சமயம் சொல்லித்தீர்த்தால் தான் மனதுக்கு ஒரு நிம்மதி ஏற்படும்போலிருக்கிறது

இத்தனைக்கும் நான் வீட்டில் சும்மா இருக்கப் போகிறதில்லை. ஓரகத்தியின் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள வேண்டும். மாமனாரும் பெரிய மைத்துனரும் வந்தவுடனே அவர்களுக்குத் தகவல் சொல்லி அவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டும்.

"ஏன் இதையெல்லாம் ஓரகத்திதான் செய்யட்டுமென்று நீ அவர்களுடன் ஆஸ்பத்திரிககுப் போவதற்கென்ன?' என்று நீ கேடகலாம்.

'அந்த நல்ல பெயரெல்லாம் அவளுககே இருக்கட்டும். எனக்கொன்றும் வேண்டாம். ஒருவருக்காகவா என்ன? மனதில் கெட்ட எண்ணமில்லாமல் செய்வதைச் செய்துகொண்டுபோவோம் நியாயத்துககு உலகம் மதிப்பு வைத்



"......குழந்தைகளை அழாமல் பார்த்துக்கொள்ள......"

தால் வைக்கட்டும். இல்லை பொய்யும் பித்தலாட்டத்துக்கும்தான் மதிப்பு என்று உலகம் கோஷித்த தானுல் அந்தமதிப்பு எனக்கு வேண்டவே வேண்டாம் அதை உபயோகிததுக் கொண்டு அதனுல் பலனை அடைகிறவர்கள் அடையட்டும்.

'அப்படியென்ருல் இந்த உலகத்துககே நீ லாயக்கில்லை என்பாய் நீ.

'லாயக்கில்லைதான். இல்லாவிட்டால் நான் ஏன் இங்கே இந்தக் கதியில் இருக்கிறேன்? எல்லாரையும்போல 'உதட்டு உறவு' கொண்டாடி நாலுபேருககு மதிப்பாக இருக்கமாட்டேனு? இதெல்லாம் எனக்குத் தெரியாமலும் இல்லை, தெரிந்துதான் இருக்கிறது என்ன செய்கிறது!

மொத்தத்தில், திரும்பத் திரும்ப எத்தனை தரம் சொனனுலும் பொய், புனை சுருட்டு இல்லாமலிருப்பவர்களுக்கு இது காலமே இல்லை என்ற முடிவுக்கு வருவதைத் தவிர வேறு எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.



குழந்தைக்காரர்:—உம்மைப்பார்த்தாலே நம்ம பய, பயப்படருன் ஸார்!

ஆனுல் ஒன்று. வஸந்தாவைப்போன்ற பசங்களுக்கும் இந்தமாதிரி ஒன்றிரண்டு அனுபவம் ஏற்பட்டால்தான் அதுகளுக்கு சரியானபடி புத்தி வரும். அப்பொழுதுதான், நம்முடன் நேரில் சொல்லாவிட்டாலும் 'ஓகோ! அவர்கள் சொல்வதிலும் ஏதோ கொஞ்சம் அர்த்தமில்லாமலில்லை' என்று மனதுக்குள்ளாக வாவது நினைத்துக் கொள்ளுங்கள்.

அதோ மாமனுர் வருகிருர். மற்றவை அடுத்த கடிதத்தில்,

உன் அன்புள்ள,

ரமா.

ஞாயிற்றுக்கிழமை; வழக்கம்போல காரியாலயம் விடுமுறை சந்தானம் சாப்பிட்டுவிட்டு வெளி ஹாலில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான்

சந்தர்ப்பத்தின் போக்கையனுசரித்து நடந்துகொள்ள இன்று நேற்றுப் பழகிக் கொள்ளவில்லை ராஜி அவன் சாவகாசமாக உட்கார்ந்துகொண்டிருக்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம், அவனுடைய காரியங்களில் வெற்றி காணும் அளவுக்கு அவனுடன் நடந்து கொண்டு விடுவாள்.

சந்தானம் ஏதோ பழைய நினைவுகளில் ஈடுபட்டிருந்தான் நெற்றியை இடது கையால் வருடிக்கொண்டே மேலும் கீழும் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தான் அடிக்கடி தலையைத் திருப்பி வாசற்படியண்டை எதையோ கவனித்துக் கொண்டிருந்தான்.

அவன் எதிர்பார்த்தது என்ன?

ராஜி ஒரு டம்ளரில் காபியையும் டிபனையும் எடுத்துக்கொண்டு நுழைந்தாள் சந்தானம் உட்கார்ந்திருந்த ஹாலுக்குள்.

"நினைத்தேன் இன்னும் விஜயம் செய்யவில்லையே என்று; "கரெக்டாக வந்துவிட்டாய்!'' என்று ராஜியிடம் சிரித்துக்கொண்டே கூறிவிட்டு அவள் கையில் இருந்தவற்றை வாங்கிக்கொண்டான்.

அவனுடைய வார்த்தைகளை வாங்கிக்கொண்ட ராஜி அதைப் பற்றிச் சிந்தனை செய்ய ஒரு நிமிஷம் எடுத்துக்கொண்டாள். பிறகு 'என் விஜயத்தில் விருப்பமில்லையென்றால் திரும்பி போய்விடுகிறேனே'' என்று சிறிது ஆனால் மிகவும் அளவுடன். கோபம் கொண்டு சொன்னாள்.

"ராஜி: நாடக பாணியில் இருக்கிறது உனது பதிலும், அதற்கேற்ற முக பாவமும்!...போனால் போகிறது ஆரம்பிக்குமுன்னே எதற்கு சண்டைக்கு ஆஸ்பதம்?''

''எனக்கும் அதில் இஷ்டமில்லை: இருந்தாலும் சண்டையே வருவதானாலும் நான் வேறே முக்கியமான பிரச்னையை இன்றைக்கு வைத்துக் கொண்டிருக்கிறேன் சண்டை அந்தப் பிரச்னையை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் எனக்கு ஒரு விதத்தில் திருப்தி உண்டாகும்...'' என்றாள்.

"போட்டாயே ஒரு போடு;' அது என்ன பிரச்னை? அரசியலில்கூட இவ்வளவு பூடகமான பிரச்னைகள் கிடையாதே? உன்னுடைய பிரச்னை என்னவாம்? அது எதுவாயிருந்தாலும் நான் இன்றைக்குச் சண்டை கிண்டை போடப்போவதில்லை. நான் இன்றைய விடுமுறையைப் போக்க ஒரு அருமையான திட்டம் போட்டிருக்கிறேன் அப்படியிருக்கும்போது எந்தப் பிரச்னையையாவது குறித்து, நாம் எலியும் பூனையுமாக என்னத்துக்கு மாறுகிறது?''

'யார் எலியும் பூனையுமாக வேஷம் போட விரும்புகிறது? நீங்களா, நானா? அப்படித்தான் நாம் எத்தனை முறைகள் அப்படியிருந்து விட்டோமாம்?''

"இது என்ன கேள்வி? என்றைக்கு நாம் இரண்டுபேரும் வாழ்க்கை என்கிற வண்டியில் பூட்டப்பட்டோமோ அன்று முதல், ஒரு ஸ்பெஷல் காட்சி போல, எலியும் பூனையுமாய் மாறிக் கொண்டுதானே வருகிறோம்?........."

"இது மட்டும் நாடக பாணியில் இல்லையாக்கும்?......''

"இருந்துவிட்டுப் போகட்டுமே... சரி விஷயத்தை விட்டு அனாவசியமாக எதற்குத் தர்க்கம்? உன்பிரச்னை என்ன?''

"உங்களுடைய இன்றையத் திட்டம் என்ன? முதலில் அதைச் சொல்லுங்கள்.''

''என் திட்டம்! காபியைச் சாப்பிட்டு விட்டு நன்றாக நான் ஒரு புறம் படுத்துத் தூங்குகிறேன்; நீயும் அடுப்பங்கரையில் நன்றாகப் படுத்துத் தூங்கிவிடு. இதுதான் என் திட்டம்!''

ஹாஸ்யமாகச் சொன்னதாக நினைத்துக்கொண்டு இப்படிச் சொல்லிவிட்டு, அதன் எதிரொலியை ராஜியின் முகத்திலே காண அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கினான்

ராஜி சாமான்யமான பேர் வழியில்லையே? 'சரி; அப்படியே செய்யுங்கள்'' என்று எழுந்தாள்.

அவனுடைய ஹாஸ்ய பாவம் மறைந்து, சகஜபாவம் ஒரு நொடியில் உண்டாயிற்று பரபரப்புடன் 'இந்தா ராஜி! உட்கார் நான் விளையாட்டுக்குச் சொன்னேன்....''

"பின்னே சண்டை வேண்டாமென்று சொல்லிவிட்டு இப்படி ஆரம்பித்தால் என்ன செய்கிறதாம்? ''என்று பிணங்கிக்கொண்டே கூறிவிட்டுப் பழையபடி உட்கார்ந்து கொண்டாள்.

"சும்மா சொன்னேன், ராஜி இன்றைக்கு திருநீர் மலைக்குப்போய்விட்டு வரலாமென்று திட்டம் போட்டிருக்கிறேன்..."

"சுவாமி பக்தியா?"

"சுவாமி பக்தி காரணமாக என்பதில்லை விடுமுறைதினம் என்றால், மெஷின் மாதிரி பீச் அல்லது சினிமா இப்படி எதற்காவது போய்த்தான் ஆகவேண்டுமென்பதில்லை. தமாஷாகப் பிரயாணம் செய்து வருவோம் என்று நினைத்தேன்"

"சரி; போவோம்"

"உன்னுடைய பிரச்னை என்று என்னமோ ஆரம்பித்தாயே. அது என்னவென்று சொல்லவில்லையே..."

"நீங்கள் புறப்படத் தயாராகுங்கள்; நான் போகும்போது சொல்கிறேன்"

இருவரும் எழுந்து சென்றனர். அடுத்த அரைமணி நேரத்தில் வேற்றுடை தரித்து நின்ற சந்தானமும், ராஜியும் முற்றிலும் புதிய மனிதர்கள்போல மாறிவிட்டார்கள்

மகிழ்ச்சி உள்ளத்திலே பொங்க இருவரும் வெளிக்கிளம்பினர்.

2

லட்சியம் என்பதைத் தெரிந்தோ, தெரியாமலோ நோக்கி வாழ்க்கை வண்டியைச் செலுத்திக் கொண்டிருப்பவர்கள் சந்தானமும், ராஜியும். கிரஹஸ்தாசிரமத்தை அறிமுகபபடுத்திக்கொண்டு இரண்டு வருஷங்கள்கூட ஆகவில்லை. இந்தக் குறுகிய காலத்துக்குள் அவர்கள் வாழ்வுத் தோட்டத்தில் அன்பு விதைபோட்டு, பண்படுத்தி விட்டனர். அன்பு அநேகம் உருவங்களில் வளர்ந்தது ஒற்றுமை, உற்சாகம் என்று தவிர, இவற்றினிடையே பூசல் என்ற உருவமும் அந்தப் பூங்காவிலே, நாய்க்குடை வளர்வது போல வளர்ந்துதான் காணப்பட்டது. ஆம்; அன்பையே ஆதாரமாகக் கொண்ட போலி உணர்ச்சிகளின் முட்டல்களினால், உருத்தெரியாமல் போய்விடக் கூடிய உருவமாக அவ்வப்போது வளரும் அந்த உருவம்! வாழ்க்கைக்கு இன்றியமையாத பலவகை உணர்ச்சிகளில் பூசலும் ஒன்று இல்லறவாழ்க்கைக்கு விருந்து விருப்பு, வேண்டுமானால் எந்த ஆஸ்பதத்திலேனும் அந்த உணர்ச்சி தலைகாட்டியாகவேண்டும்.

மேலே விவரித்த தோரணையிலே, விளக்கு சுடர்த் தெறிப்பதுபோல சந்தானம், ராஜி இருவரிடையேயும் சின்னச் சண்டைகள் தோன்றி மறையும்

அன்று உல்லாச யாத்திரையை முக்கிய நோக்கமாகக்கொண்டிருந்த சந்தானம். ராஜியின் உள்ளத்தை மகிழ்விக்கச் செய்வதற்காகத்தான் அப்படிச் செய்திருந்தான். அவளுடைய திருப்தியில்தன் உள்ளத்தையும் திருப்திகொள்ளச் செய்வான் அவன்

பிரயாணத்தின்போது ராஜி தன் பிரச்னை என்னவென்பதை சந்தானத்திடம் சொன்னாள்.

அவளுக்கு ஒரு நெக்லேஸ் வேண்டும்; வைரத்தில் எல்லாம் இல்லை; சாதாரணமான வெள்ளைக் கல் பதித்த ஒன்றுதான்!

ஸ்திரீ உள்ளத்தை ஒரு சுரங்கம் என்று சொல்லலாம்; சுரங்கத்தினுள் ஒளியைக் கொண்டு செல்ல வேண்டியிருப்பதேபோல, ஸ்திரீ உள்ளத்தை மனோபாவத்தைக்

கொண்டே ஊடுருவவேண்டும் அந்த மனச் சுரங்கத்திலேதான் எத்தனை ரகசியங்கள், புதை பொருள்கள்! எண்ணங்களெல்லாம் கனவுகள் எல்லாம் அவர்களின் உடமைகள்தான்; புதை பொருள்கள்தான்.

இப்படிப் பார்க்கும்போது மனோபாவத்தில் சந்தானம் கைதேர்ந்தவனாக இருந்தான் என்று சொல்லவேண்டும்; மேலும், வாழ்க்கையில் அவளுடன் ஒன்றிவாழ்ந்திருப்பவன். அவளுடைய எண்ணங்களைப்பற்றி அனுமானித்திருக்கமுடியாதா என்ன? அந்தக் காரியம் முக்கியமானதுதானே?

எப்போதோ ஒரு முறை ராஜி அவனிடம் தன்னுடைய தேவையைப்பற்றிச் சொல்லியிருந்தாள். அவனும் காலம் வரும்போது அந்தத் தேவையைப் பூர்த்தி செய்து தருகிறேனென்று வாக்களித்திருந்தான். அவனுக்கும் ஆசைதான்; இல்லற வாழ்க்கையைத் தொடங்கிய புதிதில் மதிப்புக்குப் பாத்திரமான வகையில் இருந்தவளாக ராஜியை மதித்திருந்தான். அவளுக்கு, அளிக்கப்பட வேண்டிய கௌரவத்தை அந்தச் சந்தர்ப்பத்தில் அவளுக்குப் பூரணமாய் அளித்துவிட்டான் இல்லறவாழ்க்கை தொடங்கிய பின்னர் அவர்களிடையே பரிணமித்த அன்புக்கு இத்

தகைய கௌரவமே சர்வ சாட்சியாய் நின்றது.

மதிப்புக்குரிய மனைவியின் தேவையை இன்னதென்று மனோபாவத்தின் மூலம் அறியத்தலைப்பட்டான். பிறகு நிதர்சனமாக அவளுடைய தேவை தெரிந்தபின் இயற்கையாக மேற்படி ஆசை அவன் மனத்துள் எழுந்தது. அவளுக்கு அந்த நெக்லேஸை வாங்கித் தருவதாக ஒப்புக்கொண்டான்.

இடையில், சில நாட்கள் சென்றன. வாழ்க்கையின் முக்கிய தேவைகளை கவனித்துக்கொண்டிருக்கத்தான் அவன் வருவாய் போதுமானதாக இருந்தது. ராஜியின் தேவை-பிரச்னை தீர்க்கப்படாமலே இருந்தது.

ராஜியும் விவேகிதான். இத்தனை காலமும் நிலைமையை அனுசரித்து வாயை இறுக மூடிக்கொண்டிருந்துவிட்டாள். இப்போது அதற்கு சந்தர்ப்பம் வாய்த்திருந்தது. சந்தானத்தின் கை ஓங்கியிருந்தது. எனவே, இப்போது மீண்டும் தன் பிரச்னையைக் கிளப்பினாள் தைரியமாகவே.

சந்தானம் இந்த விஷயத்தை மிகவும் எளிதாகவே மனதில் வாங்கிக்கொண்டான்.

"பிரமாதமான பீடிகை போட்டுக்கொண்டும், ஏதோ பிரச்னை' என்று சொல்லிக்கொண்டும் ஆரம்பித்தாயே கடைசியில், விஷயம் 'பழமையடைந்ததுதானே?" என்று கேட்டான் சந்தானம்.

"ஆமாம்; விஷயம்தான் பழமையானதாகப் போய்விட்டது அந்த விஷயத்தையொட்டிய என் ஆசை என்றைக்கும் என் மனதில் புதுமை பெறறே விளங்குகிறது!" என்றாள் ராஜி.

"ஆகட்டும், இன்னும் ஒரு வாரத்தில் உன்னைத் தேடிக்கொண்டு நெக்லேஸ் வந்துவிடும். ராஜி; இன்றைக்குச் சொல்கிறேன்" என்று உறுதியாகச் சொல்லிவிட்டான்.

3

ராஜிக்கு வேண்டியும் இருந்தது; வேதனையும் செய்தது. நெக்லேஸில் ஒரு அலாதியான ஆர்வம். அந்த ஆர்வத்தின் உச்ச நிலையை சந்தானத்திடம் வெளிப்படுத்திவிட்டாள்; அதன் பலனாக நெக்லேஸ் கிடைத்தது.

ஆனால், மேலெழுந்தவாரியாக எழுந்த மகிழ்ச்சியைத் துளைத்துக்கொண்டு அவள் மனதில் வேறொரு நினைவு இடம் தேடியது. கணவனை வற்புறுத்திக் கேட்டுக் காரியத்தைச் சாதித்துக கொள்வதில் அவனுக்குள்ள கஷ்டநஷ்டம்?...... "அவன் கையில் பணம் இருக்குமா?...... இப்போது வேண்டாம் என்று சொல்லிவிடுவோம்......ஆனால், ஏன் அப்படி? இந்த துணிச்சலற்ற மனசுக்கு ஒரு வழியிலேயும் போகத்தெரியவில்லையே... ஏன் வேண்டாம் என்று சொல்லவேண்டும்? கையாலாகாத 'கடடையா அவர்?......... அவரால் முடியாவிட்டால் ஏன் அவர் ஒப்புக்கொள்கிறார்? சென்ற வருஷத்தில் அவரிடம் கேட்ட விஷயம் இது; இத்தனை காலம் சாத்தியமில்லாத காரணத்தால் ஒத்திப் போட்டுவிட்டார் போலிருக்கிறது இப்போது நிறைவேறக் கூடிய விஷயமாயிருக்கலாம் இது. அதுதான் அவர் ஒரு வாரத்தில்' என்று உறுதி கூறினார்" என்று முடிவேயில்லாமல் சிந்தித்தாள் ராஜி.

சிந்தனைச் சக்தி மழுங்கியது: அவள் மனதில் ஏதேதோ பிரமைகள், பல உருவங்கள் பெற்று அவளைச் சூழ்ந்து நின்றன. அவைகளை இன்னதென்று உணர முடியாத ஒரு நிலையில் முதலில் அரைத் தூக்கம் உண்டாகி, பிறகு அது முழுமை பெற்றது

குறிப்பிட்டபடி ஒரு வாரம் சென்றது. அவள் எதிர் பார்த்ததற்கிணங்க அன்று காரியாலயத்திலிருந்துவந்த சந்தானம் அவள் கையில் 'நெக்லேஸ்' இருந்த ஒரு சின்னப் பெட்டியைக் கொடுத்தபோது, அவள் அந்த சூழ்நிலையை நம்பவேயில்லை அப்படித் திகைத்து நின்றாள்.

நெக்லேஸ்' அவளை நன்றாக அலங்கரித்தது பவுனுக்கு மெருகிட்டது போன்று. அன்று அவள் இயற்கை அழகுக்கு ஒரு பூச்சுப் பூசியிருந்தது அது. சந்தானம் மகிழ்ந்தான்; ராஜிக்கு இந்த அனுபவம் மகத்தானதாயிருந்தது

ராஜியின் மனதில்மட்டும் ஏதோ ஒரு உறுத்தல். இன்னதென்று புரியவில்லை. நெக்லேஸ் எப்படி வந்தது? பணம் ஏது? இந்தக் கேள்விகளை வரிசையாகத் தனக்குள்ளே கேட்டுக்கொள்வாள். அடுத்தபடியாக அவள் மனசில் 'ஒரு பயம் சூழும் இதே அனுபவம் அன்று பூராவும்.

பிறகு சந்தானத்தையே தைரியத்துடன் கேட்டாள்.

"இதற்குப் பணம் ஏது?

"அதெல்லாம் நீ ஏன் கேட்கிறாய்? உனக்கு வேண்டியது கிடைத்து விட்டது; அவ்வளவுதானே?"

"அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்? அதைத் தெரிந்துகொள்வது தப்பா?"

"தப்புதான், நான் அதற்காகப் பணம் திருடினேன் என்று வைத்துக்கொள்ளேன்......"

ராஜியின் நெஞ்சில் ஏற்கனவே அபஸ்வரமான தொனி கேட்டுக்கொண்டிருந்ததுபோல இருந்தது. இபபோது திடீரென்று சுருதியும் கலந்து ஒரு விகாரமான ஒலி கிளம்பி அந்த அபஸ்வரத்துடன் போய் இணைவதுபோலிருந்தது......

"ஐயோ, எனக்கு இப்போதுதான் தெரிகிறது; எனக்கு வேண்டாம் நெக்லஸ்......"

"என் ராஜி?"

"என்னவோ எனக்குப்பயமாயிருக்கிறது இதற்கு ஏது உங்களிடம் பணம்?......"

"ஏதாயிருந்தாலென்ன? பணம் கிடைத்தது!"

"எப்படிக் கிடைத்தது?........."

இந்தக் கேள்விதான் அவள் நெஞ்சில் புகுந்துகொண்டும், நெஞ்சினின்று வெளிப்பட்டுக்கொண்டும் இருந்தது.

சந்தானம் தினம் பொழுதுவிடிந்தால் பணத்திடம் புழங்குபவன் ஒரு இடத்தில் பொக்கிஷதார் உத்தியோகம்; ஆயிரம் பதினாயிரம் வரவு செலவு செய்யும் அவன் கை; அந்தப் பணத்தில் 'கையாடல்' செய்துவிட்டானோ என்று சந்தேகம் ராஜிக்கு.

அவளுக்கு அவனிடமிருந்து சரியான மறுமொழி கிட்டவில்லை மனதில் இருந்த பிரமையின் சக்தி விசாரித்தது. அவள் மனதை யடைத்துக்கொள்ள இனி அங்கே இடமே இல்லை.

ஒரு நாள் பூராவும் சென்றது; இரண்டு மூன்று தினங்கள் பிறகு சாதாரணமாகச் சென்றன. ராஜியின் மனதிலிருந்த கலக்கம் தெளிவு

படவில்லை பூரணமாய் ஆனால், ஒரு சகஜநிலை ஏற்பட்டதென்று சொல்லலாம் நெக்லேஸின் அழகில் மெதுவாக மனம் திரும்பியது.........

ஆபீஸிலிருந்து அன்று சந்தானம் மணி ஏழு அடித்தும் வரவில்லை. சாதாரணமாய் அவள் மனதில் மூண்ட கலை, திடீரென்று பழைய நினைவில்சென்று கலந்தது ஒன்றுமே புரியாத ஒரு கலக்கமும், அதை யடுத்து அதற்குச் சக்தி கொடுக்கும் இந்தக் கலையும் சேர்ந்துகொண்டது அந்த மனதில் இப்போது ஏற்பட்டிருந்த புரட்சி.........!

மணி எட்டு அடித்தது; ஒன்பது, பத்தும் அடித்தது ஊரோசை அடங்கி விட்டது. கொட்டுகொட்டென்று வழியைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் ராஜி

திடீரென்று பிரவேசித்தான் காரியாலயத்து 'பியூன்' அவள் மனதில் கலை இப்போது விசுவரூபம் எடுத்தது; என்னவோ, ஏதோ? என்று நடுங்கினான்

"ஐயா புரொப்ரைட்டர் ஊட்டுக்குப் போயிருக்காங்க நாழியானாலும் வந்துடறேன்னு சொல்லச் சொன்னாங்க" என்றான்

அவன் வார்த்தைகளின் பின்னே விஷயம் மறைந்து கிடப்பதை உணர்ந்து விட்டாள் ராஜி அவன் வாயைப் பிடுங்கினாள் உண்மை பரிபூரணமாய் புலப்படவில்லை அவன் குழறிக் குழறிச் சொன்னதெல்லாம் இதுதான்:

"ஐயா பேராலே ஏதோ கேஸாம்; பணம் காணுமின்னு பேசிக்கிறாங்க. அதாம் புரொப்ரைட்டருகூட கூப்பிட்டனுப்பினாரு. ஐயா கிட்ட நாஞ் சொன்னேண்ணு சொல்லாதிங்க" என்று சொன்னான்

அவன் எதிரே யிருந்ததைக் கூட உணரவில்லை ராஜி. 'ஐயோ' என்று பேரிடியின் சப்தம் கேட்பதுபோலக் கத்தினாள்

"ராஜி! ராஜி! என்ன? ஏன் கத்துகிறாய்?"

குரல் ஒலி கேட்டுக் கண் விழித்தாள் ராஜி சந்தானம் கூடத்தில் கட்டிலில் படுத்திருந்தான் அவன் கண்களை விழித்துப் பார்த்தாள்.

அவ்வளவும் கனவு!

திருநீர் மலைக்குப் போய் விட்டு வந்த அசதி தீரப் படுத்தனர் அவர்கள் அப்போதுதான்.

ராஜியின் மனோ நிலைக்கேற்றவாறு அமைந்திருந்தன அந்தக்கனவு காட்சிகள். மனோ நிலையை அடிப்படையாகக் கொண்டதுதானே கனவின் உணர்ச்சியும்! அன்றைய நிகழ்ச்சிகளின் எதிரொலி அல்லது அவற்றின் சாயல் இப்படி ஏதாவது மனதில் பதிந்த உணர்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்டுதானே கனவுகள் அமைகின்றன! இந்த ரீதியில் தான், சந்தானம் பணத்திற்கு என்ன செய்வான் என்கிற பிரச்னையை மனதில்கொண்டு படுத்த ராஜி இந்த சொப்பனத்தைக் கண்டாள்

சந்தானம் இந்தக் கனவுக் கதையைக் கேட்டுவிட்டுச் சிரித்தான் "மனதை அலட்டிக் கொள்ளக் கூடாது என்று அதற்காகத்தான் நான் சொலவது; நல்லவேளை. என்னை ஜெயிலில் வைத்து ஒரு காட்சியைக் கனவிலே ஜோடிக்காமல் போனாயே, அதுவரை பாக்கியம் தான்!" என்றான்

ராஜியின் தலை கவிழ்ந்தது!

4

இப்போது நிஜமாகவே ஒரு வார காலமும் சென்றது சந்தானமும் அன்று மாலை காரியாலயத்திலிருந்து திரும்பிவந்தபோது ராஜி கேட்டிருந்த நெக்லேஸ் வாங்கி வந்திருந்தான்

ராஜியின் முகத்தில் புன்னகை அரும்பிற்று அதை அணிந்து கொண்டு சந்தானத்தின் முன்னால் வந்து நின்றாள்.

'ராஜி. நெக்லேஸால் உனக்கு இன்னும் அழகு உண்டாகியிருக்கிறதா. அல்லது உன் அழகின் மகிமையால்தான் இந்த நெக்லேஸ் பிரகாசிக்கிறதா என்று சொல்ல முடியவில்லை" என்றான்

ராஜி ஒன்றுமே பதில் பேசவில்லை.

"போகட்டும்; இப்போதாவது சொல்லிவிடுகிறேன்; அப்புறம் நீ கனவு காண ஆரம்பித்துவிட்டால் என்ன செய்கிறது? இதற்குப்பணம் ஏது தெரியுமா? கிராமத்தில் என்னுடைய பழைய வீடு ஒன்று இருந்தது. அதை முன்னமேயே விற்க வேண்டிய அவசியம் வந்தது கிராமத்து வீட்டை விற்க மனமின்றி இதுவரை பேசாதிருந்தேன் அப்புறம் இப்போதுதான் சென்ற தடவை விடுமுறையில் ஊருக்குச் சென்றிருந்தபோது, அதை விற்று விட்டு வந்தேன். அந்தப்பணம் இவ்வளவுநாள் உனக்குத் தெரியாமல் இந்த ஒரே லட்சியத்துக்காகப் பாதுகாக்கப்பட்டு வந்தது! அதுதான் இது." என்றான்

"நிஜமாகவா?" என்றாள் ராஜி, வியப்புடன்

"ஆமாம்; உன்னிடம் பொய் சொலவேனா?" என்றான் சந்தானம்.

ஒரு புன்னகை புரிந்தாள் ராஜி



ஆசிரியர்:—யாருப்பா நீ? என்ன வேணும்?

வந்த ஆள்:—"இல்லீங்க! நம்ப எசமான் எளுதின கதைக்கு நீங்க பணமே கொடுக்கலிங்களாம். ஒங்க பத்திரிகைலே ஒரு ஏழெட்டு வீசை வாங்கியார சொன்னாரு..............."



நாமொன்று நினைக்க...!

ய. மகாலிங்க சாஸ்திரிகள் எம்.ஏ., பி.எல்

காந்திமதி கோமதியை நோக்கினாள். "அம்மாவுக்கு வந்திருப்பவளைப்பற்றிச் சொல்லி மேலே நாம் நடந்துகொள்வதற்குக் கட்டளை பெற்றுவா" என்று அந்தப்பார்வை அறிவித்தது.

கோமதி, "இதோ வந்துவிட்டேன்" என்று பாக்யலக்ஷ்மியிடம் விடைபெற்றுக் கொண்டு எழுந்திருந்தாள்.

"அம்மாள் ஜோலியாயிருந்தால் அவசரப்படுத்த வேண்டாம், நான் காத்திருக்கிறேன்" என்று பாக்யலக்ஷ்மி உபசாரம் சொன்னதின் மூலம்தான் வீட்டு யஜமானி அம்மாளைக் காண விரும்புவதையும் சூசிப்பித்தாள்.

கோமதி உள்ளே சென்றதும் சங்கரியின் கடுகடுப்பிற்கு இலக்கானாள். "ஏண்டி! என்னடி, அட்டஹாஸம்? உங்களுக்கெல்லாம் யாரையாவது கண்டுவிட்டால் தலைகால் புரிவதில்லை. உன் அப்பா ஆபீஸிலிருந்து வருகிற சமயம் ஆகிவிட்டது வெட்டி வம்பு அடித்துக்கொண்டிருக்க வேண்டாம் வந்தவளைக் காரியத்தோடு பேசி அனுப்பிவிடு."

"வந்தவள் என்ன காரியம் என்ற பிரஸ்தாபத்தையே எடுக்கவில்லை. உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கிறாள் போலிருக்கிறது. பழம் பாக்குவெற்றிலை மரியாதையுடன் பெட்டி, படுக்கை வேறு வந்து இறங்கியிருக்கிறது"

"இதேதுடி சனியன்! உஷாவோடு தானும் ஜாகை பெயர்த்துக்கொண்டு இங்கே வந்துவிடப்போகிறாளா, என்ன?"

"இல்லை அம்மா! உஷாவின் பெட்டி படுக்கை சாமான்கள்தான் வந்திருக்கின்றன. எல்லாவற்றிற்கும் நீ கூடத்திற்கு வாயேன்! புரிந்து விடுகிறது! வந்தவளை எவ்வளவு நேரம் காக்க வைக்கிறது. நீ வெளியில் வருவாயாக்கும் என்று கொஞ்ச நேரம் பேச்சுக்கொடுத்துப் பொழுது போக்கிக்கொண்டிருந்தோம். நீ வராததினால் மேலே என்ன செய்வது என்று எங்களுக்குப் புரியவில்லை. அவள் உன்னைப் பார்க்காமல் போகமாட்டாள்போலிருக்கிறது"

"நன்னாயிருக்குடி! நான் வந்து என்ன பண்ணுகிறது! மாடியில் உன் மாமா இருக்கிறான் அவனைப் போய் எழுப்பி அழைத்துக்கொண்டு வா—, உன் மைத்துனி வந்திருக்கிறாள் என்று சொல்லி. நான் வரக்கூட

தடி கோமதி! உனக்குத் தெரியாது. இன்றைக்கோ கேஸ் நடக்கிறது. அதில் எதிர்த்த பார்ட்டியைச் சேர்ந்தவள் இவள். இவள் வந்திருக்கிறாள் என்றால் இதில் ஏதோ வஞ்சனை இருக்கிறது நல்ல எண்ணத்துடன் இப்பேர்பட்டவர்கள் வரமாட்டார்கள். ஆத்தில் புருஷன் இல்லாத சமயம் பார்த்து வந்திருக்கிறாள். நான் அவளிடத்தில் பேசி ஏதாவது தத்துப்பித்தென்று உளறி வைத்தால், அவர்கள் வந்த பிறகு என்னை இந்த வீட்டில் வைக்கமாட்டார்கள் ஏதோ நம்மை எல்லாம் சந்தியில் இழுக்கத்தான் இந்த மாயாவிபழத்தட்டு கொண்டு பேட்டி காண வந்திருக்கிறாள். இதில் நான் போய் மாட்டிக்கொள்ளமாட்டேன். உன் மாமாவைப் போய் எழுப்பிக் கூட்டிக்கொண்டு வா நான் சொல்வதைக் கேளு, தாமதிக்காதே போ உடனே மாடிக்கு. இப்படியே பின்கட்டுப் படி வழியாய் ஏறிப்போ. சிவராமனை இங்கே அழைத்து வா நானும் அவனுக்குச் சொல்கிறேன்—''

கோமதி மாடிக்குச் சென்று சிவராமனை பின்கட்டு படி வழியே கீழே அழைத்து வந்தாள் சங்கரி சிவராமனிடம் தன் சந்தேகங்களையும் பயங்களையும் பிரலாபித்தாள்.

சிவராமன் சங்கரியை தைரியப்படுத்தி 'அக்கா நீயும் என்னுடன் வா நான் அவளிடம் நேரில் பேசினதில்லை நீ வந்தாயானால் நான் அவளுடைய நோக்கமறிந்து நடக்க வேண்டியபடி நடத்துகிறேன் நீ ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம்'' என்று அழைத்தான்.

சங்கரி அரை சம்மதத்துடன் அவன்பின் கூடத்திற்குச் சென்றாள் கோமதி பாக்யலக்ஷ்மியிடம் முன்னதாகச்சென்று ''மாமாவும் அம்மாவும் வருகிறார்கள்'' என்று தெரிவித்தாள் பாக்யலக்ஷ்மி வெகு வணக்கத்துடன் எழுந்து நின்றாள்.

சங்கரி, ''வாருங்கோ! இப்போது தான் தெரிந்துகொண்டேன் உஷாவின் பெரியம்மாவாமே?'' என்று பாக்யலக்ஷ்மியை வரவேற்றாள் சிவராமன் ஒதுங்கி ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார் மற்றவர்கள் குவிந்து இரண்டு மூன்று ஸோபாக்களில் உட்கார்ந்து கொண்டார்கள் பாக்யலக்ஷ்மி சங்கரிக்கு வணக்கம் தெரிவித்துவிட்டுச் சிவராமனைக் கண்ணோட்டத்தினால் கெளரவித்தாள். பின்பு அவள் பேசினதெல்லாம் மற்றவர்களை வியாஜமாக வைத்துக்கொண்டு சிவராமனுக்கே கண்ணோட்டத்தினால் அர்ப்பணிக்கப்பட்டது.

''நாளை விடிந்தால் நாங்கள் பம்பாய்க்குப் புறப்படப் போகிறோம். குழந்தை உஷாவைப் பார்த்துவிட்டு உங்களிடமும் தெரிவித்துக்கொண்டு போகலாம் என்று வந்தேன் உஷா ஒரு நாள் வீட்டிலில்லாதது ஒரு யுகம் ஆகிவிட்டதுபோல் இருந்தது. வீடு வெறிச்சென்றாகி விட்டது. வீட்டில் இருக்கவே எங்களுக்குப் பிடிக்கவில்லை.''

''அதற்காகவா பம்பாய்க்குப் போகிறீர்கள்'' என்று கேட்டாள் சங்கரி சிவராமனைக் கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டு.

''அதற்காகவென்று இல்லை. இன்று பம்பாயிலிருந்துதந்தி வந்தது. இரண்டு தினங்களுக்குமுன் ஒரு தபாலும் வந்திருந்தது.''

''யாரிடமிருந்து?''

'எங்கள் பத்மாவுக்கு நாயகனாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிற சக்ரபாணி என்பவரிடமிருந்து வந்தது. அவர் தன் ஸினிமாக் கம்பெனியுடன் மற்றொரு ஸினிமா கம்பெனியை ஒன்று சேர்த்துக்கொள்ள நிச்சயித்திருப்பதாயும், மேற்படி ஸினிமா கம்பெனிகளின் ஹெட் ஆபீஸை பம்பாயிலேயே அமைத்துக்கொள்ளப்போவதாயும், நாங்கள் அங்கு வந்திருந்து பத்மாவின் கல்யாணத்தை முடித்துத்தர வேண்டுமென்றும் எழுதியிருந்தார். அதையனுசரித்து உடனே புறப்படும்படி இன்று தந்தி வந்தது...''

''ஆனால் கல்யாணம் பம்பாயிலா''

''ஆம். ஆகையால் உஷாவின் கல்யாணத்திற்குக்கூட நாங்கள் இருப்பதற்கில்லை.

''ஏன்? ஆகாய விமானத்தில் கல்யாண தினத்தன்று வந்து இறங்கினால் போகிறது. உங்கள் அடரஸைக் கொடுத்துவிட்டுப் போங்கோ. நான் கடிதம் போடச் சொல்லுகிறேன். அவசியம் நீங்கள் வரவேண்டும்.''

''அட்ரஸ் இதுதான் கேர் ஆப். டைரக்டர் மனோரமா அண்டு ராஜீவ டாக்கீஸ் யுனைடெட் பாம்பே என்று எழுதினால் போதும்.''

''நீங்கள் யார் யார் பிரயாணம்?''

''கல்யாணப் பெண் பத்மா பெண்ணின் தாயாராகிய நான் கார்டியன் முறைமையில் கையெழுத்திட என் தகப்பனார். நாங்கள் மூன்று பேர்கள் தான் குழந்தை உஷா வந்தால் அவளையும அழைத்துப்போகலாம் என்று உத்தேசம். 'உஷா வில்லாமல் எனக்குக் கல்யாணமே வேண்டாம்' என்று பத்மா பிடிவாதம் பிடிக்கிறாள். உஷாவுக்கும் தன் கல்யாணத்திற்குப் பத்மா வரத்தான் வேண்டும் என்று ஆசையிருக்கும். அக்கா தங்கைகளுக்குக் கல்யாணம் என்றால் ஒருவரில்லாமல் ஒருவருக்கு நடக்கவே கூடாது. இவர்களின் தாத்தா இரண்டையும் ஒரே தினத்தில் மதராஸிலேயே சேர்த்து நடத்திவிடுகிறதென்றுதான் சங்கல்பித்திருந்தார். அதற்குள் இவ்வளவு எதிர்பாராத மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. உஷாவை இப்போது எங்களுடன் அனுப்பினால் கல்யாணம் ஆனவுடன் அவளை நாங்கள் கொண்டு வந்து விட்டுவிடுகிறோம்''

''பத்மா கல்யாணத் தேதி என்ன?''

''அங்கு போய்த்தான் தெரிய வேணும்''

''உஷா கல்யாணம் இன்னும் 15 நாட்களுக்குள் நடந்துவிடுமென்று தெரிகிறது. அதற்கு நீங்கள் பத்மாவை அழைத்துக்கொண்டு வந்தீர்களேயானால் போகும்போது உஷாவைப் பத்மா கல்யாணத்திற்கு அழைத்துப் போகலாம்''. இந்த ஷராவைச் சேர்த்துவிட்டு சங்கரி சிவராமனைத் திரும்பிப் பார்த்தாள். சிவராமன் மிகுந்த முகமலர்ச்சியுடன் கன்னம் உப்பப் புகையிலையை மென்று கொண்டிருந்தார்.

''நீங்கள் சொல்வதுநியாயம்தான். இன்று இரவு எங்கள் அப்பாவும் மாமாவும வருவார்கள். ஐயா அவர்களைப் பார்ப்பதற்கு அப்பாவிடம் அப்படியே செய்யச் சொல்லுங்கள். உங்கள் வார்த்தையை அவர் மீறி நடக்கமாட்டார். ஆனால் உஷா கல்யாணத்தை நீங்கள் ஒத்தி வைத்துக் கொண்டால் நன்றாயிருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் தமக்கைக்கு விவாஹம் ஆகித்தானே தங்கைக்கு நடக்க வேணும்?''

'ரிஜிஸ்டர்மாரியேஜுக்குக்கூட வா தர்ம சாஸ்திரம்?'' என்றாள் சங்கரி தன்னை அறியாமல்.

சிவராமன் புகையிலை வாயுடன் எவ்வளவு சிரிக்கமுடியுமோ அவ்வளவு சிரித்துவிட்டுத் தாவாக் கட்டையை சூரியனைப் பார்க்கும் ஓணான்போல் மேலே தூக்கிக் கொண்டு வெகுண்டையாய்ப் பேசலானார்.

''புருஷனைவிடப் பெண்ணுக்கு வயது அதிகமாயுமிருக்கலாம். வெள்ளைக்காரர்களுக்குள் பிரஸித்தி பெற்ற ஷேக்ஸ்பியர் மகா கவியும், சிறந்த வித்வானான ஸாமுவல் ஜன்ஸன் என்றவரும் தங்களுக்குப் பல வருஷங்கள் மூத்தவர்களான ஸ்திரீ

களை விவாகம் செய்துகொண்டார்கள்."

"குலம் கோத்திரமும் தான் பார்க்க வேண்டியதில்லை!" என்று சங்கரி அந்த வெகுண்டையைத் தொடர்ந்தாள்.

"பர்ஸியாவில் பண்டைய காலத்தில் இருந்த ஒரு அரச பரம்பரையில் ஸகோதரியைத்தான்" விவாஹம் செய்துகொள்வது வழக்கமாம்." என்றாள் ஆறு கிளாஸ்வரையில் படித்த கோமதி.

பாக்கியலட்சுமி புன்னகை பூத்த முகத்துடன் இந்த சம்பாஷணையை ஆமோதித்தாள்.

"குறவன் தொம்பன் முதலிய ஜாதிகளில் இன்னும் எவ்வளவோ விசித்திரமான விவாக சம்பந்தங்கள் உண்டு. எல்லாவற்றையும் ஆலோசித்தால் உயர்ந்த பண்பாடு உள்ள நாகரிகத்தில்தான் விவாக சம்பந்தமான வரம்புகள், நிபந்தனைகள் அதிகமாயிருப்பதாய் தெரிகிறது. அவை தளரத்தளர மட்ட ரகமான நாகரிகத்தின் அறிகுறிகள் தோன்றுகின்றன." என்று உபன்யசிக்கலானார் சிவராமன்.

பாக்யலட்சுமிக்கு இந்தத்தத்வ விசாரத்தில் கலந்துகொள்ளப் பிரியமில்லையாதலால் சிவராமன் பேசி முடிந்தபின் தான் வந்த காரியத்தைப்பற்றிய பேச்சை மறுபடி தொடர்ந்தாள்.

"உஷாவின் புடவைகள், நகைகள் வெள்ளிப் பாத்திரங்கள் எல்லாம் இந்தப் பெட்டியில் இருக்கின்றன. அவைகளை உங்களிடம் ஒப்புவித்துவிட்டுப் போகவேண்டுமல்லவா? இதோ அவள் பெட்டிச் சாவி (உஷா சாவியை வாங்கிக்கொண்டாள்) நீ சாப்பிடும் வெள்ளி பிளேட்டும் இதில் இருக்கிறது படுக்கையையும் எடுத்து வந்துவிட்டேன். அதற்குள் சால்வை இருக்கிறது. (உஷா தலையசைத்தாள்) உஷாவின் கல்யாணத்தை உத்தேசித்து அவள் தாத்தா அவளுக்கு ஒரு உயர்ந்த ஸில்க் புடவை எடுத்திருக்கிறார் அவர் வரும்போது அதைக் கொண்டுவருவார். (உஷா தன் கழுத்தில் இருந்த ஒரு இரட்டை வடம் சங்கிலியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டாள்) இந்தச் சங்கிலியும் வெள்ளிப்பிளேட்டும் உன் விவாகத்திற்கு நான் கொடுத்த சீராகவிருக்கட்டும். இரண்டையும் நீயே வைத்துக்கொள்...."

இவ்விதமாக பாக்யலக்ஷ்மியின் சம்பாஷணை இறுதி கட்டத்தை அடைந்துகொண்டிருக்கும்போது அதை துரிதப்படுத்தவே, "நீங்கள் எல்லோரும் வீட்டைப் பூட்டிக்கொண்டு புறப்படப்போகிறீர்களாக்கும்? பத்மா கல்யாணம் ஆனதும் திரும்பி வந்துவிடுவீர்கள் அல்லவா!—" என்று சங்கரி வினவினாள்.

"பத்மா பம்பாயில் வசிக்கப்போவதால் நான் மட்டும் இங்கே என்ன செய்யப்போகிறேன்? அவளுடன் நானும் பம்பாய்க்குப் போகவேண்டியதுதான். நான் இல்லாவிட்டால் அப்பா இங்கே தனியே இருந்து என்ன செய்கிறது? அவரும் பம்பாய்க்கு வந்துவிடவேண்டியதுதான். மேலும், சக்ரபாணி அவரை அவசியம் தன்னுடன் வந்து வசிக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறார். இவர் கூட இருந்தால் அவர் தொழில் அபிவிருத்திக்கு மிகுந்த உதவியாயிருக்கும் என்று அவர் நினைப்பது சகஜம் தானே?

"அப்படியானால் இனி நீங்கள் இந்தப்பக்கம் வருவதே துர்லபம் தான்போலிருக்கிறது?"

'ஆமாம்."

"அப்போது வீட்டை என்ன செய்யப் போகிறீர்கள்?'

"அதைச் சொல்வதும் ஒரு முக்கியமான காரியம்தான், வீடு என் பேரிலிருக்கிறது."

"அதை விற்றுவிட உத்தேசமோ!'

"விற்கும் உத்தேசமில்லை. நமக்கு வேண்டியவர்களிடம் ஒப்புவித்துவிட்டுப் போக உத்தேசம்."

"ஓஹோ! நல்ல குடியாகப் பார்த்து வைக்கலாம் என்று உத்தேசம் போலிருக்கிறது?"

"இல்லை இல்லை. எனக்கு இதன் வாடகை வந்து என்ன ஆகவேணும்?

"பின்னே"

"உஷா அதிலிருந்து குடித்தனம் பண்ணட்டும் என்று தெரிவித்து உங்கள் அனுமதியைப்பெறவே நான் இங்கு வந்தேன். காலக்ரமத்தில் அந்த வீடு உஷாவிற்குத்தான் என்று சங்கல்பித்து விட்டேன். என் மாப்பிள்ளைக்கு பம்பாயில் அநேகம் பங்களாக்கள் இருக்கின்றன. மதராஸிலேயே அவருக்குப் பிதுரார்ஜித வீடு இருக்கிறது. ஆகையால் பத்மா இந்த வீட்டை நான் எது செய்தாலும் தடை சொல்லப போவதில்லை. இந்தத் தாயில்லாக் குழந்தைக்குத்தான் இந்த வீடு இருக்கட்டுமே என்று என் உத்தேசம். அப்பா உஷாவுக்குத் நன்கொடையாக ரூபாய் ஐயாயிரம் கொடுக்க முன்னதாகவே தீர்மானித்து விட்டார். அந்த தீர்மானத்தை உங்கள் தப்பியிடமும் தெரிவித்திருக்கிறார். (சிவராமன் இந்த இடத்தில் சிரித்துக்கொண்டு தலையாட்டினார்.) இன்று இரவு ஐயா அவர்களைக் காண வரும்போது அப்பா மேற்கண்ட ரூபாய் ஐயாயிரத்திற்கு ஒரு செக்கையும், உங்கள் பிள்ளை பேரில் ஏற்கனவே எழுதப்பட்ட ஒரு ஆயிரரூபாய்ச் செக்கையும் குழந்தை கல்யாணத்திற்காக மற்ற சீர்களையும் எடுத்துக்கொண்டு வருவார். அவர் பணம் கொடுப்பது போதாதுதான் அதற்காகவே நான் என் வீட்டைக் குழந்தை உஷாவுக்கு இனம் சாஸனமாக எழுதிக் கொடுத்துவிட உத்தேசித்திருக்கிறேன். அப்பாவையும் மாப்பிள்ளையையும் ஒரு வார்த்தை கேட்டுவிட்டு தஸ்தாவேஜி ஏற்படுத்துகிறேன். அதன் மத்தியல் நாளைக்கே வவாகபானதும் தனிக்குடித்தனம் செய்ய உஷா அந்த வீட்டிற்கு ஜாகை வந்துவிட்டாளானால் எனக்குப் பரம திருப்தியாக விருக்கும். எங்கள் சாமான்களில் அவசியமானவற்றை நாங்கள் சௌகரியப்பட்டபோது பம்பாய்க்கு எடுத்துச் செல்கிறோம் உஷாவிடம் நாளைக்கே வீட்டை ஒப்புவித்துவிட்டு ஊருக்குப் புறப்பட்டால் என் மனதுக்கு நிம்மதியாயிருக்கும் இதற்கு. நீங்கள் அனுமதி தரவேண்டும்."

சங்கரி இந்த வேண்டுகோளுக்குப் பதில் சொல்லும் பொறுப்பை தான் திடீரென்று எப்படி ஏற்றுக்கொள்வது என்று சற்றுத் தயங்கினாள்.

அப்போது சிவராமன் பேசினார்.

'கொடுப்பவர்கள் உலகத்தில் அரிதே ஒழிய வாங்கிக் கொள்ளத் தயாராயிருப்பவர்கள் அரிதல்ல. நியாயமான இந்த ஏற்பாட்டை அத்திம்பேர் அங்கீகரிப்பார் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் சம்மதம் என்ற முடிவான வார்த்தை அவர் வாயிலிருந்துவரவேண்டும். அவர் முத்திரை வைக்கவேண்டிய இடத்தில் வெறும் கீறல் பேர்வழிகளான நாங்கள் பேனா நாட்டினால் அது முறையாகுமா? இரவு அழகிரி வந்து இந்த விஷயத்தைத் தெரிவித்துக்கொண்டாரேயானால் சந்தேகம் தீர்ந்துவிடும். ஏதாவது வீடு விலைக்கு வந்தாலும் உஷா பேரில் அதை வாங்கிவிடலாம் என்று அத்திம்பேர் சொல்லிக் கொண்டிருந்தார். ஏனென்றால், ராமனுகனுக்கு வாங்கப்போகிற அச்சாபீஸிலேயே குடியிருப்பதில் சில அசௌகரியங்கள் உண்டு."

"சொந்த வீடு இருக்கும்போது ஏன் சிரமப்பட வேண்டும்? அப்படியே சொல்லி ஏற்பாடு செய்து

விடுங்கள். திறவுகோலை இங்கேயே கொடுத்துவிடுகிறேன். சரிநான்போய் வரட்டுமா? டாக்ஸிக்காரன் முணுமுணுக்க ஆரம்பித்துவிடுவான்.'' என்று சொல்லிக்கொண்டு பாக்யலடசுமி எழுந்திருந்தாள். கோமதி தாம்பாளத்தில் பழம், பாக்கு வெற்றிலை எடுத்து வைத்தாள். சங்கரி அதை பாக்யலக்ஷ்மியினிடம் கொடுத்தாள். பாக்யலக்ஷ்மி சந்தோஷமாய்த் தாம்பாளத்தைப் பெற்றுக்கொண்டு உஷாவைத்தழுவி முத்தமிட்டு உச்சிமுகர்ந்து ஆச்வாசபடுத்திவிட்டுக் காரில் ஏறிக்கொள்ள நகர்ந்தாள். எல்லோரும் எழுந்து அவளை வழி கொண்டு விட்டனர். சிவராமனும் புகையிலை நீரை உமிழ்வதற்குப் போகிற ஜாடையாய் வெளி வராந்தா வரையில் அவளைப் பின் தொடர்ந்தார்.

பாக்யலடசுமியின் உதாரித்தனமும் அவள் கொண்டு வந்த நற்செய்திகளும் எல்லோருக்கும் அவளிடம் மதிப்பையும் அன்பையும் அதிகரிக்கச் செய்தன. அவள் வரவைப் பற்றி அவதூறான ஹேஷ்யங்கள் செய்தவர்களின் மனம் வெட்கி வேதனை யடைந்தது. இருந்தாலும் அவள் போன பிறகு கூடிய மீடிங்கில் எல்லாம் கேலிக் கூத்து என்று சொல்லி நகைத்தவர்கள்தான் மெஜாரிடியாயிருந்தனர். உஷாவைக் கடைசி முறையாகப் பத்மா கல்யாணத்தைச் சாக்கிட்டு அழைத்துப் போய் மறுபடி அடிமைப்படுத்தவே அவள் இந்திர ஜாலமாய்ப் பேசினதாகத் தீர்மானம் மெஜாரிடியால் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் பாக்ய லக்ஷ்மி சொன்னது ஒன்றும் பொய்யல்ல அழகிரி கைதியாக்கப்பட்டதிலிருந்து அவளுக்குத் **"தன் வினை தன்னைச் சுடும்''** என்ற முதியவர் மொழி மெய்தான் என்பது புலனாயிற்று. நற்குணங்களை மேற்கொள்ள அவள் ஆவலடைந்தாள். மேலும் சக்ரபாணி தன் மருமகனாகப்போகிறான் என்பது நிச்சயமானதிலிருந்து அவளுக்கு ஒருபெருந்தன்மை உதிக்கலாயிற்று. பணத்தை லட்சக்கணக்கில் போட்டுப் புரட்டி லாபத்தையும் லட்சக்கணக்கில் எதிர்பார்க்கும் டைரக்டர் சக்ரபாணிக்கு மாமியாராயிருப்பதற்குப் பொருத்தமாகவேண்டுமேயானால்தான் கொஞ்சம் நிமிர்ந்து நின்று உதாரித்தனத்துடன் உலகத்தைப் பார்க்கவேண்டும் என்பதை அவள் உணர்ந்தாள்

ஏராளமான ஐச்வரியம் கிடைத்துவிட்டால் சிலருக்கு ஆச்ரிதர்களை ரக்ஷிக்கவும் பலருடைய நன்றியைப் பெறவும் பொதுப்பட்டவர்கள் கொண்டாடத்தக்க வழியில் செலவுகள் செய்யவும் ஆர்வம் ஏற்படுவது சகஜம். அதில் தன் பெருமை கொஞ்சம் கலந்திருந்தாலும் அல்லது அதுவே அடிப்படையான தூண்டுதலாயிருந்தாலும் குற்றமில்லை. நல்ல காரியம் நடைபெறுவதாயிருந்தால் அதன் வேரைக்கல்லி நாம் விசாரிக்கவேண்டிய அவசியமில்லை அதன் அதிர்ஷ்டமான பலாபலன்கள் கர்த்தாவைச் சேர்ந்தவை திருஷ்டமான ஸாதகங்கள் உலகத்தைச் சேர்ந்தவை. அவைகளை மட்டும் நாம் ஆமோதிப்புடன் நின்றுவிடுவதுமேல். தான் ஐச்வரியவான், எதையும் சாதிக்க வல்லமை உள்ளவன், செல்வாக்கு மிகுந்தவன், ஒருவனைத் தூக்கிவிடவோ தொலைத்துவிடவோ சுதந்திரமுடையவன் என்பதை எல்லாம் உலகமறிய வெளிப்படுத்த வேண்டுவானேயானால் தனவந்தன் விரிவாயும் ஆடம்பரமாயும் சில செலவுகள் செய்துதான் ஆகவேண்டும் அவை மூலம் சிலருக்கு நன்மை உண்டாவது நிச்சயம் இந்தக்குணத்தை நாம் ஏற்றுக்கொள்ளாமலிருக்க முடியாது. அந்த அளவிற்கு தனவந்தர்கள் கீர்த்தியையும் பலர் நட்பையும் சம்பாதித்துக் கொள்கிறார்கள் உரத்துப் பேச சக்தியில்லாத ஒரு சாரார் அவர்களின் கொடுமைகளைப் பொறுக்க மாட்டாமல் சபித்துக்கொண்டிருந்தால் என்ன?......

தன் பெருமையை ஒளித்து வைத்து நற்கருமம் செய்பவர்களைவிட இக்கலிகாலத்தில் தன் குற்றத்தை ஒளித்து வைத்து மேல் பூச்சாக ஜகம் மெச்சும் உதாரத்தன்மையை பிரகடனம் செய்பவர்கள் பெரும்பான்மையோர்.

'பசுவைக்கொன்று செருப்பு தானம் செய்வதுபோல்' என்பது ஒரு பழைய மொழி. பரலோகத்தை நம்பாதவர்கள்கூட ஒரு அபகீர்த்தியை அழிக்கக் கீர்த்தி தரக்கூடிய ஒரு நற்காரியத்தை ஆடம்பரமாய்ச் செய்து சமாதானம் அடைவார்கள் மேற்குணங்களை எதிர் பார்க்கக் கூடாத இடத்தில் சிலசமயம் அரிதான மேற்குணங்கள் எழுந்து ஒளிவீசுகின்றன லோகத்தில் மேல்தோற்றத்தை நீக்கி உள் தத்துவத்தை ஊன்றிப் பார்க்கும் மதியூகிகள் மிகச்சிலரே அம்மதியூகிகள் மட்டும் குணமுள்ள ஆபரணத்தின் கீழ் நிலைத்திருக்கும் துர்குணங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கண்டுகொள்வார்கள். இவ்விதமாகவே லோபத்தை ஊதாரித்தனமும் இச்சையை வைராக்யமும், இகழ்ச்சியை ஸ்துதியும் சுயநலத்தை தியாகமும் பாபத்தைப் புண்ணியமும் கொடூரத்தை தயவும், வைரத்தை நட்பும், அஞ்ஞானத்தை விஞ்ஞானமும், மூர்க்கத்தனத்தை சாந்தமும், சித்த சபலத்தை விரதானுஷ்டானமும் ஆபரணமாயிருந்து மறைத்து உலகத்தின் கண்ணெதிரே கண்யமான லீலைகள் புரிவது வழக்கம்.

தனலட்சுமியின் கடைசிக் காலத்தில் அவளைத் தமக்கையும் தகப்பனும் அனுதாபத்துடன் அணுகினர்கள். அவள் பிழைப்பது சந்தேகம் என்று தெரிந்ததும் அவளுக்குப் பிற்காலம் குழந்தை உஷாவை சம்ரக்ஷித்து நல்ல நாயகனிடம் ஒப்புவிக்கும் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். தனலக்ஷ்மி தன் ஜீவகாலத்தை ரூபாய் ஐயாயிரத்திற்கு இன்ஷ்யூர் பண்ணியிருந்தாள். அந்த தஸ்தாவேஜியை அவள் உஷாவுக்குக்கார்டியன் முறைமையில் அழகிரிக்கு அதிகாரமளித்து மாற்றிக் கையொப்பமிட்டுக் கொடுத்தாள். தன் நகைகள் வெள்ளிப் பாத்திரங்கள் முதலிய ரூபாய் பதினாயிரத்துக்குமேல் பெறுமானமுள்ள இனங்களையும் அழகிரியிடம் ஒப்புவித்தாள்.

தனலக்ஷ்மி காலமான பிறகு அழகிரி இன்ஷ்யூரன்ஸ் பணம் ஐயாயிரத்தையும் வசூல் செய்து தன் பெயரில் பாங்கில் போட்டு வைத்துக்கொண்டாள் உஷாவுக்குத் தன் தாயார் நகையாகக் கிடைத்தவை சுமார் இரண்டாயிரம் பெறுமானமுள்ள இனங்கள்தான். இந்த ஒரு வருஷகாலத்திற்குள் கதிர்வேல் ஆசாரி பாக்யலட்சுமியின் மேல்பார்வையில் அநேக நகைகளை மாற்றி அமைத்து இடைவிடாது அவள் வீட்டில் வேலைசெய்துகொண்டிருந்தான். பத்மாவும் பாக்யலட்சுமியும் அநேக புது ஆபரணங்களைப் பூண்டுகொண்டார்கள். உஷா தெய்வமே துணை என்று போட்ட சாதத்தைச் சாப்பிட்டுக்கொண்டு இட்ட வேலையைச் செய்துகொண்டு தாத்தா பெரிய மாமா ஸம்ரக்ஷணையில் காலம் கடத்தி வந்தாள்.

அட்டைப்படம்

விருந்தளிக்கும் பேறு

★

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு"—என்பது வள்ளுவரின் வேதவாக்கு. நிறைந்து கொழிக்கும் செல்வத்தோடு இல்வாழ்வில் ஈடுபடுவதன் நோக்கம், விருந்தினரை நன்கு உபசரித்து, அவர்களுக்கு உதவி செய்வதேயாகும். இவ்வுன்னதமான நோக்கத்தின் சிறப்பை உணர்ந்து, அக்கடமையை நிறைவேற்றுவோரிடத்திலேதான் பூமகள் நிலைத்து நின்று வாசம் செய்கிருள். இத்தகைய சிறப்பை அடைய தலைவியொருத்தி ஆசைப்பட்டுத் தவமும் கிடக்கிருள் விருந்தினரை உபசரிப்பதற்குப் பொருளிருந்து மட்டும் போதுமா? தன் மனதிற்கு இயந்த மணாளுடன் சேர்ந்து அவ்வுபசாரம் நடத்தினுல்தானே சிறப்புண்டு? எனவே போர்முனை நோக்கிப் பிரிந்து சென்ற தன் தலைவனின் வருகைக்காக அவள் விழிமேல் விழி வைத்துக் காத்துக் கிடக்கிருள்.

போர்முனையில் வெற்றி கண்ட தலைவனுக்கும் தன் காதலியை விரைவில் சென்று காண வேண்டுமென்று துடிப்பு மேலோங்கி நிற்கிறது. இத்துடிப்பின் வேகத்தில் அவன் தேரில் இருப்பதோ; அதன் ஓட்டமோ இருக்குமிடம் தெரியாமல் மறைந்துபோகின்றன. ஆகவே தேர், தன் தலைவியின் வீட்டு வாயிலில் நின்றதைப் பாகன் நினைப்பூட்டி கீழே இறங்கும்படி சொன்ன போதுதான் சுய உணர்வு ஏற்படுகிறது அவனுக்கு. பக்கத்தில் ஏனைய வீரர்கள் நிற்கின்றனர். வாயில் புறத்தே, கதவைத் திறந்துகொண்டு தலைவி தன்னை வரவேற்கக் காத்து நிற்கிருள். இல்லற வாழ்வு கிட்டி. விருதினரை உபசரிக்கும் பேறு வாய்க்கப் பெறும் பெருமிதம் தலைவியின் உள்ளத்தில் துள்ளி விளையாடுகிறது. வாயு வேகம், மன வேகம் இவை இரண்டையும் பழிக்கும்படியான வேகத்தில் தேரைச் செலுத்தி விரைவில் தலைவியைச் சந்திக்கும்படி செய்த பாகனைத்தழுவி மன்னன் பாராட்டி வாழ்த்துகிருன்.



இவ்வரிய காட்சியைச் சித்தரித்துக்கூறும் அகநானூ[illegible] பாடலொன்றைக் கீழே காண்க:—

இருந்த வேந்தன் அருந்தொழில் முடித்தெனப்
  புரிந்த காதலொடு பெருந்தேர் யானும்
ஏறிய தறிந்தன் றல்லது வந்த வாறு
  நனியறிந் தன்றே இலனே தாஅய்
முயற் பறழ் உகளும் முல்லையம் புறவிற்
  கவைக்கதிர் வரகின் சீறூர் ஆங்கண்
மெல்லியல் அரிவை இல்வயின் நிறீஇ
  இழிமின் என்றநின் மொழி மருண்டி சினே
வான்வழங் கியற்கை வளிபூட்டினையோ
  மானுரு வாக நின் மனம் பூட்டினையோ
உரைமதி வாழியோ வலவ எனத்தன்
  வரை மருள் மார்பின் நளிப்பனன் முயங்கி
மனைக் கொண்டு புக்கனன் நெடுந்தகை
  விருந்தேர் பெற்றனள் திருந்திழை யோளே.

—அகநானூறு

வலவன்-பாகன்; இருந்த வேந்தன்-பாசறைக் கண்ணிருந்த அரசன், மென்மைத் தன்மை வாய்ந்த தலைவியின் இல்லின் கண் தேரினை நிறுத்தி.

இறங்குக என்ற நின் சொற் கேட்டு மருட்சியுற்றேன், வானில் இயங்கும் இயல்பையுடைய காற்றை மான் உருவாக-குதிரையின் வடிவாக. பூட்டி வந்தனையோ, (அன்றி)

நினது மனத்தினை (அங்ஙனம்) பூட்டி வந்தனையோ கூறுவாயாக, என்று கூறி,

திருந்திய அணிகளையுடைய அவன் தலைவி, விருந்தோம்பும சிறப்பினைப் பெற்றுள்.

சிறு விளம்பரங்கள்

தசை வலிகளுக்கு

உலகப் புகழ்பெற்ற
ஜாம்பெக் நிவாரணமளிக்கும்



ஜாம்-பெக் மிருதுவாக தேய்த்தால் சீக்கிர நிவாரணமேற்படும். இவ்வற்புத மூலிகை மெழுகி லுள்ள மருந்து எண்ணெய்கள் சருமத்தினுள் புகுந்து களைப்புற்ற தசைகளுக்கும் கீல் பிடிப்புகளுக்கும் சமனமூட்டி குணமளிக்கும். பிராணிகள் கொழுப்பு இல்லாததற்கு உத்தரவாதம்.

எப்பொழுதும் உபயோகியுங்கள்.

Zam-Buk

சமனமூட்டி நிவாரணமளிக்கும்
கிருமிநாச மருந்து

சரும நோய்கள். காயங்கள் பூச்சிகடிகள். புண்ணுகி வலிக்கும் கால்கள், தசை வலி. தேகக் குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது,

ஏஜண்டுகள் மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்.



சகல விதமான பட்டு & நூல் ஜவுளிகளுக்கு
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை

ராம்ராஜ்யா ஹால்

N.R.ராமசந்திர செட்டி & கோ. கடைவீதி...சேலம்

ஜீவான்ஜன்

ரசாயனக் களிம்பு
மிருகக் கொழுப்பு சேராதது
ஜலதோஷம், மார்சளி
உடம்பு வலி முதலிய
சகல வேதனைகளுக்கும்
நிவாரணமளிக்கிறது.

சோல் ஏஜண்டுகள்:
K. K. பிள்ளை & கோ.
ராயப்பேட்டை, மதராஸ் 14.

பிரபல ஸ்தாபனங்களிடமிருந்து
வினியோகஸ்தர்களுக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பிரசுரமான க்ருதிகள்

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்க்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்.

காயகசிகாமணி அரியக்குடி ஸ்ரீ ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை.

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாஸய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை.

1. ஸ்ரீ ப்ருஹ்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தகரூபமாக இல்லை. தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனை தான் இருக்கும்.

தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்,
சுதேசமித்திரன் புத்தகசாலை,
மவுண்ட்ரோடு, சென்னை 2.

குரங்குராஜா!

க.ரங்கந

மகத நாட்டில் குப்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் ஆட்சியில் மக்கள் யாவரும் இன்புற்றிருந்தனர். மாதம் மும்மாரி பொழிந்து, தருமம் அந்நாட்டில் தலை தூக்கி நின்றது. சோற்றுப் பஞ்சமின்றி மக்கள் சுகமாக வாழ்ந்து வந்தனர்

அந்நாட்டில் முத்து என்ற ஒரு குடியானவன் வாழ்ந்து வந்தான். அவன் ரொம்ப நல்லவன் கஷ்டப்பட்டு சம்பாதித்துத் தானும் உண்டு, பிறர்க்கும் கொடுத்து நல்வாழ்வு வாழ்ந்து வந்தான் அவன் மனைவி பெயர் வள்ளி. வள்ளி மிக நல்லவள். கணவனையே தெய்வமாகத் தொழுதாள் இருவரும் சேர்ந்து 32 விததான தருமங்களையும் செய்து வந்தனர். அவர்களுக்கு நீண்ட நாளாய் ஒரு குறையிருந்து வந்தது அதுதான் பிள்ளையில்லாக்குறை. பிள்ளை பிறக்க வேண்டுமென்று அவர்கள் வேண்டாத தெய்வங்களில்லை கும்பிடாத கோயில்களில்லை. பல ஆண்டுகள் கால தேவனாட்சியில் சுழன்றுவிட்டன. ஆனால் அவர்களுக்குக் குழநதை பிறக்கவில்லை.

ஒரு நாள் முத்து வயலில் உழுது கொண்டிருந்தபோது, அவன் ஒரு குழந்தையின் அழுகுரலைக்கேட்டு, உடனே அங்கு ஓடிச்சென்று பார்த்தான். அங்கே ஒரு குழந்தை குரங்கு முகத்துடன் ஆதரிப்பாரற்று அனாதையாகக் கிடப்பதைக் கண்டு இரக்கங்கொண்டு, பிள்ளையில்லாக் குறையால் அக்குழந்தையையாவது எடுத்து வளர்ப்போம் என்று நினைதது அக்குழந்தையை வீட்டுக்கு எடுததுச் சென்றான். அவன் மனைவியும் மிக மகிழ்ந்து அக்குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தாள். அக்குழந்தைக்கு ஆஞ்சநேயன் என்று பெயரிட்டு, அவனை நல்லதோர் குருவிடம் அனுப்பி சகல கலைகளிலும் தேர்ச்சிபெறச் செய்தனர். முகம் தான் குரங்கேயொழிய மற்றப்படி அவனிடம் யாதொருவிதக் குறையுமில்லை.

எப்படியோ 18 ஆண்டுகள் ஓடி மறைந்தன. இப்போது ஆஞ்சநேயன் நன்றாக வளர்ந்த காளையாகத் தோற்றமளித்தான். அவன் தன் வீரத்தால் கண்டோரை பிரமிக்கச் செய்தான். "ஐயோ பாவம்! குரங்கு முகத்தை கடவுள் அளித்துவிட்டாரே" என்று ஊரார் பச்சாத்தாபப்படடனர்.

இது இவ்வாறிருக்க, ஆஞ்சநேயன் அந்நாட்டு மன்னன் மகளைக்கண்டு காதல் கொண்

டான். அவள் பெயர் அழகி என்பது. அவன் எப்படியும் அழகியை மணந்தே தீருவது என்று உறுதி கொண்டான்.

அந்நாட்டில் ஒரு சிங்கம் பல அட்டூழியங்கள் புரிந்து வந்தது. அது பல கிராமங்களையும், மக்களையும், ஆடுமாடு முதலிய விலங்குகளையும் அழித்து, மிக மிகக் கொடுமை புரிந்து வந்தது. அதனை அடக்கவே முடியவில்லை.

பிறகு அரசன் அச்சிங்கத்தை அடக்கி வருபவருக்கு மதம், குலம். நாடு முதலிய எவ்விதக் கட்டுப்பாடுமின்றி தன் மகளை மணம் செய்து கொடுப்பதாக அறிக்கை வெளியிட்டான்.

அதன்படி பல வீரர்களும் அரசகுமாரர்களும், அழகியின் அழகில் மயங்கி சிங்கத்தைக் கொல்லச் சென்று உயிர் துறந்தனர். அரசன் திகைத்துக் கொண்டிருந்தான்.

அப்போது ஆஞ்சநேயன், தன் உயிரைப்பெரிதென மதியாது வில்.வாள் முதலிய ஆயுதங்களை எடுததுக் கொண்டு, சிங்கமிருக்கும் காட்டிற்குச் சென்றான்.

அங்கே சிங்கம் மிகுந்த பசியுடன் கோபத்துடன் நிற்பதைக் கண்டு, அஞ்சாமல் தன் உயிரை வாள் முனையில் வைத்துப் போர் செய்து, மிகக் கஷ்டப்பட்டு, அதனை வெட்டி வீழ்த்திக் கொன்றுவிட்டான். அப்போது அவன் முகம் காலையில் மலர்ந்த தாமரைபோல் ஒளியுடன் பிரகாசித்தது என்று சொல்லவும் வேண்டுமோ? அவன் போரின்போது பல காயங்களடைந்து சிங்கத்தின் தலையையும், கொஞ்சம் இறைச்சியையும் எடுத்துக் கொண்டு. மிகச்சிரமத்துடன் அரண்மனைக்கு வந்துசேர்ந்தான்.

சிங்கம் பிருண்டி அதிகக்காயமுண்டாக்கியிருந்ததால், அவன் நோயுற்று படுக்கையில் விழுந்துவிட்டான். அரண்மனை வைத்தியர்களெல்லாம் அவன் பிழைக்க மாட்டானென்று கைவிட்டுவிட்டனர். அப்போது ஆஞ்சநேயன், "நான் கொண்டு வந்த சிங்கத்தின் தலையையும் இறைச்சியையும் சமைத்துக்கொடுங்கள், அதனை உண்டால் நான் குணமடைந்து விடுவேன்" என்று கூறினான். அப்படியே, இறைச்சியும் அவனுக்குச் சமைத்துக் கொடுக்கப்பட்டது. உடனே ஆஞ்சநேயன் மனித உருக்கொண்டதைப் பார்த்து அனைவரும் ஆச்சர்யமுற்றனர்.

அப்போது அரசகுமாரன் அவர்கள் விசாரிப்பதற்கு முன்னதாகக் கூறத் தொடங்கினான். "நான் முற்பிறவியில் அங்கநாட்டு அரசன் அங்கதன் மகன் அழகன். ஒரு பெரிய ரிஷியின் சாபத்தால் குரங்காகப் பிறக்கும்படி நேரிட்டது. அப்போது நான் ரிஷியின் காலில் வீழ்ந்து தெரியாமல் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி கெஞ்சிக கெஞ்சி அழுதேன். அவரும் மனமிளகி, "நீ ஒரு குரங்காகப் பிறந்து, ஒரு ராஜகுமாரியை மணக்கும் பொருட்டு கொல்ல நேரிடும் சிங்கத்தின் இறைச்சியை உண்டாயேயானால், சாபம் நீங்கி, பழையபடி ராஜகுமாரனாக மாறி விடுவாய், எல்லாம் சுபமாக முடியும்" என்று கூறினார். மேலே நடந்தவைகளெல்லாம் நீங்கள் அறிந்ததே" என்று கூறி அரசனை வணங்கினான். அழகியை மணந்து அரசும் ஆண்டான்.

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச் : மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,

பைகிராப்ட்ஸ் ரோட்,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,

246, Vysyal St.,

COIMBATORE.

Estd: 1920

சேலம் மூன்று தாமரை

பீடிகளை உபயோகித்து,, சந்தோஷமடையுங்கள்

S.A.H

Rgd. No. 2221.

Prop: S. அஹமத் உசேன்,

கோட்டை, சேலம். S.I.R.

"விஜய ரக்ஷணி"

(மூலிகா யந்திர தாயத்து)



இந்த கவசத்தை அணிவதால் கிரஹ சாராதி தோஷம் நீங்கும். ஆரோக்யம், குடும்ப க்ஷேமம், கலியாணம், வியாபார லாபம், பகை சமாதானம். உத்யோக உயர்வு. அதிகாரி விஸ்வாஸம், வியாஜ்ய வெற்றி, பண நிலைமையில் சௌகரியம், மற்றும் ஸகல வழியிலும் மேன்மையுண்டாகும். மாணவர்களுக்குப் பரீக்ஷை பாஸாகும். குழந்தைகளுக்கு பாலகிரஹ தோஷம் நீங்கி, ஆயுராரோக்யமுண்டாகும். ஜனன விவரம அல்லது பெயர், சுமார் வயது, விலாஸம் குறிப்பிட்டு எழுதினால் கவசம் தயார் செய்தனுப்பப்படும்.

விஜய ரக்ஷணி கவ்சம் 1-க்கு ரூ. 7—8—0

விஜய ரக்ஷணி பிரத்யேக ரக்ஷை 1-க்கு ரூ. 72-8-0

தபால் செலவு தனி.

ஆரூடம் - ஜாதக பலன்

பண நிலைமை, தொழில் மாறுதல், லாப நஷ்டம், காதல, கலியாணம், குடும்பம், ஆரோக்யம், படிப்பு அதிருஷ்ட நாள், எண், நிறம், மற்றும் முக்யவிஷயங்களும எழுதியனுப்பப்படும. ஜனன கால விவரம அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும தொழில், கடிதம் எழுதும் நேரம் தேவை. ஒன்று முதல் 5 எதிர்கால கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூ. 6. குழந்தைக்கு ஜாதகம் கணித்து ஆயுள், படிப்பு, முக்ய யோகாம்சம சுருக்கமாக எழுத ரூ. 5. நடக்கும் ஒரு தசைக்கு புக்திவாரி பலன் ரூ. 10. வி. பி. செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,

ஹனுமந்துபாளி, திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

Regd. No. 2514. The Swadesamitran Illusatrated Weekly.

இந்த பெயர் . . .

ஸூராஜ்மல்ஸ்

வைர நகை வியாபாரிகள்

உங்கள்

நகைகளுக்கு
கௌரவம்
அளிப்பவை

313, நேதாஜி ரோட்,
மதராஸ்.